By the controlled action of the diaphragm the egressive air-stream originates from the lungs. It stays at the larynx and buccal cavity and it is modified by the articulators when it is arrested or allowed to flow in different manners or reinforced by the nasal cavity in order to produce various sounds.

The vocal organs listed by Tolkappiyar



Physics of Speech

Speech waves: We have seen that we use our tongue, lips and other vocal organs to produce the different speech sounds. For the production of speech sounds the air-stream from the



lungs sets the vocal cords in vibration and excites the air in the oral cavity. Vibration of the vocal cords and resonance in the oral cavity serve as the sources of sounds which initiate the speech waves. The throat, mouth and nose form the vocal tract. The vocal tract is the resonating chamber of a complex shape. The resonance of the air in this chamber produces a complex wave and causes the sound which we hear.

Speech production: Vocal cord vibrations, resonances in the oral tract and the modulation on the air-stream by the active articulators such as the tongue, the soft palate and the lips result in the production of a complex wave or damped sound waves which we hear. The absence of vocal cord vibration results in voiceless sounds. The production of different speech sounds depends on the size and shape of the vocal tract and also on the position of the vocal organs. Tolkappiyar says:

... ... முந்துவளி
தலையினும் மிடற்றினும் ... ... நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் ... ...
உறுப்புற் றமைய ... ...
... ... (Tol. 84)

Vowel production: A vowel is a damped wave which is a combination of a series of waves set up in the speech tract. Each of these damped waves is produced vibrations of the air in the vocal tract which recur every time there is a pulse of excitation. The basic energy for all the vowels is given by the pulse generated at the larynx and the differences are made according to the size and shape of the oral cavity. So, it is clear that basically all the vowels are nothing but the pulses generated at the larynx on the egressive air flow. Tolkappiyar says:

பன்னீருயிரும் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும் (Tol. 84)

All the twelve vowels [of Tamil] sounding with voice are not different as they are produced by the pulses generated at the throat.

They differ only according to the cavity through which the excited air flows. All the vowels of this kind are voiced.

Continuants: Liquids and fricatives are formed when the body of air in the different chambers formed by the characteristic positions of the vocal organs is set in motion leaving a narrow opening. They can be voiced or voiceless according to the presence or absence of vibration of the vocal cords.

Stops: Stops are not sounds. They are some kind of beginining or ending of vowels i. e., a closed chamber is formed in the oral cavity before or after the vowel. Each of them makes an abrupt change in the wave form of the vowel.

Nasals: The oral cavity for the production of nasal sounds is the same as that of the corresponding stops. Only the nasal cavity which acts as an additional resonator differenciates the nasals from the respective stops.

Tolkappiyar gives the same articulatory position for both the stops and their corresponding nasals. He says:

> மெல்லெழுத்து ... ...
> சொல்லிய பள்ளி நிலை ... ...
> மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும் (Tol. 100)

Nasals are produced having the same articulatory position in the oral cavity with the resonance of the nasal cavity.

Classification of Speech Sounds

Vocalic Vs. Consonantal: The types of articulation provide the criteria for classifying all the speech sounds into two broad classes viz. vowels and consonants. Vowels are produced by the free flow of air and the consonants by vocal turbulence. This classification of vowel and consonant is found both in the Eastern and Western grammatical traditions. They are called in Latin as Sonant and Consonant and in Sanskrit as svara and vyañjana [sound and mark]. Tolkappiyar names them as uyir and mey [sound and body].

ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிர் ...... (Tol. 8)

னகார இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய் ...... (Tol. 9)

The consonants are generally classified as Stops, Nasals, Fricatives, Laterals, Trills, Flaps and Frictionless continuants. Tolkappiyar classifies the consonants into three viz. valleḻuttu [stops], melleḻuttu [nasals] and iṭaiyeḻuttu [laterals, flap and frictionless continuants i.e. continuants].

valleḻut teṉpa	k c ṭ t p ṟ	(Tol. 19)
melleḻut teṉpa	ṅ ñ ṇ n m ṉ	(Tol. 20)
iṭaiyeḻut teṉpa	y r l v ḻ ḷ	(Tol. 21)

Vowels

	Unrounded		*Rounded*	
Close	*i[i]*[2]	*i:*	*u[u]*[2]	*u:*
	e	*e:*	*o*	*o:*
		ai		*au*
Open	*a*	*a:*		

Tolkappiyar talks about two types of 'unit sounds' in Tamil, 1. eḻuttu [primary units] and 2. cārpeḻuttu [Secondary units Tol. 1]. He says that kuṟṟiyalikaram [Shortened i], kuṟṟiyalukaram [Shortened u] and a:tam are cārpeḻuttus. According to him these are also unit sounds but secondary in status since they are all dependent sounds. They will have the same articulatory position but they will have their own peculiarities [perhaps some diversion or modification from the primary units. cf. 4. 3].

Consonants

		Tongue				*L. Lip*	
		Back	*Centre*	*tip*			
		Velum	*H. Palate*	*Dome*	*Alveolum*	*U. Teeth*	*U. Lip*
Stop		k	c	ṭ	t	ṟ	p
Nasal		n	ñ	ṇ	n	ṉ	m
Continuant	*Frictionless Continuant*		y			v	
				ḻ			
	Flap				r		
				ḷ			
	Lateral				l		

A:ytam ஃ

Tolkappiyar's Description of Tamil Sounds

Vowels: Tolkappiyar says that there are twelve vowels in Tamil out of which five are short [Tol. 3] and seven are long [Tol. 4]. He treats the diphthongs ai and au also as long vowels. No doubt, they are longer than the short monophthongs. Each of the five short vowels are of different qualities. They have their long counterparts as being pronounced for longer durations. But the two long vowels ai and au are the combination of two vowels of different qualities. Tolkappiyar says that they can also be treated as the

combination of a, i, and a, u respectively [Tol. 54, 55]. Since he himself is giving an alternate form for ai as ay [Tol. 56], it can be extended to au also. The ai and au may be treated as dipthongs of falling variety. Tolkappiyar says that all the Tamil vowels are produced by resonating the throat-air. They have been divided into three groups, viz. open unrounded, front unrounded and back rounded. a and a: are produced with open month and lip spreading [Tol. 85]. According to the modern pronunciation, they are open central unrounded vowels. Since he gives front articulation for i, e and ai we can interpret a as central and o, u and au as back vowels. The dipthongs ai and au are unrounded and rounded respectively. The central vowel a in the dipthongs ai and au shifts its position towards the front or back of the buccal cavity according to its second member i. e., i or u. That is why Tolkappiyar groups ai and au with the front and the back series of vowels respectively.

i i:, e e: and ai are resonated like the vowels a and a: with spreaded lips but with different tongue positions. Tolkappiyar says that they are produced with the front blade of the ṭongue touching the place where the lower teeth and the gum meet (அண்பல் முதல் நாவிளிம்புற Tol. 86). They are front vowels.

u u:, o o: and au are resonated with lip rounding. They are back vowels [Tol. 87].

Tolkappiyar's classification of vowels as front, central and back are based on the advancement of the tongue. The front and the back series contain three different types of vowels. They are produced with different tongue heights: i and u with high tongue position, e and o with mid tongue position and ai and au starting with low position and ending with raised position. Though Tolkappiyar does not give an overt description of the tongue height, one can get the differences through his sutra which says that the vowels grouped above have minor differences among them.

தத்தம் திரிபே சிறிய வென்ப (Tol. 88)

Consonants: Tolkappiyar classifies the consonants into three groups, viz., stops (வல்லினம்), nasals (மெல்லினம்) and

continuants (இடையினம்). There are six stops. Corresponding to each stop there is a nasal. Tolkappiyar gives only six types of articulations for these twelve sounds. The nasals also have the same articulatory positions as that of the stops, but because of the velic opening the already excited frequencies are reinforced at the nasal cavity [Tol. 100]. Therefore the nasals are nothing but stop sounds with the nasal resonance.

k ṅ, c ñ and ṭ ṇ are articulated by the dorsum, centre and front of the tongue by making a complete closure at the back, centre and front of the palate. Since nothing is said about the force of contact they are of normal type.

ṯ ṉ are produced by the spreaded front edge of the tongue [நா நுனிபரந்து Tol. 93] making a contact with strong force [மெய்யுறவொற்ற Tol. 93] against the area just below the inner gum of the upper incisors. t n are produced by the converged front edge of the tongue [அணரி நுனி நா Tol. 94] making a contact with weak pressure [ஒற்ற Tol. 94] against the alveoli [நுனி அண்ணம் Tol. 94].

p m are produced by the lips making a weak contact [இயைந்து Tol. 97] Tolkappiyar talks about three types of stop articulations: 1. normal type used for k, c and ṭ, 2. tense articulation for ṟ and 3. lax articulation for ṭ and p.

There are two articulatory possibilities with regard to the front edge of the tongue. The front edge of the tongue can be converged to a point i.e., the apex, or spreaded to a wider length like a curved blade i.e., the lamina. The former type is called apical articulation and the latter laminal articulation. Tolkappiyar terms these as nuṉi nā: aṇari and nuṉi nā: parantu. t, n, r, and ḷ are apical sounds and ṟ and ṉ are laminal sounds.

r, l and l are flapped sounds. The flapped sounds are produced by the active articulator [tongue tip], during its movement when it strikes in passing against a passive articulator. Converged tongue tip makes a hitting with a single tap by the forward falling of the active articulator as it bends or is drawn back. Tolkappiyar says:

நுனிநா அணரி அண்ணம் வருட
... ...   (Tol. 95)

ī and ḷ are lateral sounds. The lateral sounds are produced when there is an occlusion at the median of the mouth cavity, made by the tongue whose lateral edges are thickened நாவிளிம்பு வீங்கி [Tol. 96] and leave space so that the air-stream can pass through. According to Tolkappiyar ḻ is a contact sound [ஒற்றல் Tol. 96] and ḷ is a flapped sound [வருடல் Tol. 96].

v is a labio-dental fricative. It is produced when the air escapes through the constriction [இயைய Tol. 98] made by the lower lip against the upper teeth.

y is a fricative of the vocalic type. It is non-syllabic. It is produced when the throat-air accumulated in the oral cavity for want of free passage forms a cushion like thing at the narrow constriction between the tongue and the palate through which it flows. Tolkappiyar says:

அண்ணஞ் சேர்ந்த ...   ...
கண்ணுற் றடைய ...   ...   (Tol. 99)

Cārpeḷuttu: Tolkappiyar might have noted all the variations of the pronunciation of his age. But he does not give the allophonic variations for all the phonemes of Tamil. He mentions only a few of his observations like shortened m, u and i. He calls the last two and the a:ytam as cārpeḷuttu and provides separate symbols for them considering them as separate phonemes. The shortened u and i may be phonemic due to morphophonemic reasons whereas the a:ytam might be a device like the juncture phenomenon of the modern concept of phonology. Tolkappiyar observes the quantitative difference of both vowels and the consonants beyond the usual length as they exist in the language due to one reason or other. He suggests graphemic representation for them also [Tol. 6].

Though all the sounds are produced by the excited frequencies of the cavity air made by the respective articulators

they may differ in pitch variations [இசை Tol. 102 tone and intonation] caused by the vocal cord vibration. Tolkappiyars says:

... ...
அகத்தெழு வளியிசை ... ...
அளபிற் கோடல் ... ... (Tol. 102)

Conclusion

It is evident that Tolkappiyar has exposed the whole theory of phonetics to the fullest satisfaction of any modern phonetician. Though his descriptions are relevant only to Tamil phonetics one could not under estimate his knowledge of general phonetics. His knowledge of physiology of speech, physics of speech and the articulatory processes are really great. Seeing his descriptions of the various types of articulations like apical [அணரி], laminal [பரந்து], lateral [விளிம்பு வீங்கி], lax [ஒற்ற] tense [உறஒற்று], flapped [வருட] and frictional release [அடைய] one cannot but admire his genius.

The medium employed by Tolkappiyar in writing his description is not prose but verse. To suit his medium he changed the word order and has sometimes used redundant phrases. He has mastered the art of putting things in nut-shell. His sutras are all hard nuts to crack. If one could crack them with proper understanding one can enjoy the wonders of linguistic science.

References

Tolkappiyar, 1955, Tolkappiyam Eluttatikaram, Nachinarkkiniyar's commentary - Ilampuranar's Commentary - The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly.

Subrahmania Sastri, P. S., 1973, Eluttatikarakkurippu.

Kuiper, 1958. Two Problems of Old Tamil Phonology, Indo-Iranian Journal, Vol. 2.

Allen, W. S., 1953, Phonetics in Ancient India, Geoffrey Cumberlege, Oxford University Press, London.

Sankaran, C. R., 1961, On Aytam, Tamil Culture, Vol. 9.

Sankaran, C. R., 1961. Tolkappiyar and the Science of Phonemics, Tamil Culture, Vol. 9.

Sankaran, C. R., 1957, Phonemics of Old Tamil, Deccan College, Monograph Series 7, Poona.

Firth, J. R., 1953, A Short Outline of Tamil Pronounciation.

Paul Albert, 1965, Remarques Sur La Phonologie du Tamoul.

Sweet, H., 1922, Primer of Phonetics, Clarendon Press, Oxford.

Pike, K. L., 1964, Phonetics, The University of Michigan Press, Ann Arbor.

Bloch B. Trager, L., 1939, Outline of Linguistic Analysis, Linguistic Society of America.

Abercrombie, D., 1967, Elements of General Phonetics, Edinburgh University Press.

Ladefoged, P., 1966, Element's of Acoustic Phonetics, Oliver and Boyd, London.

Shanmugham, S. V., 1967, Naccinaarkkiniyar's Conception of Phonology, Annamalai University, Annamalainagar.

சுருக்கவிளக்கம்

அவி.	அவிநயம்
ஆ. மொ	ஆங்கில மொழிபெயர்ப்பு
இல.	இலக்குவனார்
இல. வி.	இலக்கண விளக்கம்
இ-ள்.	இதன் பொருள்
இளம்.	இளம்பூரணர்
உயிர், உயிர்மயங்.	உயிர்மயங்கியல்
உரி.	உரியியல்
உருபி.	உருபியல்
எச்ச.	எச்சவியல்
எ-டு.	எடுத்துக்காட்டு
எழு, எழுத், எழுத்து.	எழுத்ததிகாரம்
எ-று.	என்றவாறு
க. சு.	கமில்சுவலபில்
சந்திப்.	சந்திப்படலம்
சப்தமணி.	சப்தமணிதருப்பணம்
சிலப்.	சிலப்பதிகாரம்
சுக்ல. ப்ரா.	சுக்லயஜுர்வேத ப்ராதி சாக்கியம்
சுவாமி.	சுவாமிநாதம்
சுப்பிர	சுப்பிரமணிய சாஸ்திரியார்
சு. வே.	சுவடி வேறுபாடு
சொல்.	சொல்லதிகாரம்
தெ. பொ. மீ.	தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
தைத். ப்ரா.	தைத்ரீய ப்ராதிசாக்யம்
தொல்.	தொல்காப்பியம்
தொல்—பொருள்.	தொல்காப்பியப் பொருளதிகாரம்
தொன்.	தொன்னூல் விளக்கம்

நச்.	நச்சினார்க்கினியர்
நன்.	நன்னூல்
நூன்.	நூன்மரபு
நேமி.	நேமிநாதம்
பக்.	பக்கம்
ப்ரா.	ப்ராதிசாக்யம்
பி. இ. நூ.	பிற்கால இலக்கண நூல்கள்
பிறப்.	பிறப்பியல்
பேர.	பேரகத்தியத்திரட்டு
பேரா.	பேராசிரியர்
பொ—ள்.	பொருள்
பொருள.	பொருளதிகாரம்
மரபு.	மரபியல்
மாறன்.	மாறனலங்காரம்
முத்து.	முத்துவீரியம்
மொழி.	மொழிமரபு
வீர.	வீரசோழியம்
வெள்ளை.	வெள்ளைவாரணனார்
வேங்கட.	வேங்கடராசலு ரெட்டியார்

SYSTEM OF TRANSLITARATION

உயிர் எழுத்துகள் — Vowels

இலக்குவனார்			கமீல் சுவலபில்
அ	—	a	a
ஆ	—	ā	ā
இ	—	i	i
ஈ	—	ī	ī
உ	—	u	u
ஊ	—	u	u
எ	—	e	e
ஏ	—	ē	ē
ஐ	—	ai	ai
ஒ	—	o	o
ஓ	—	ō	ō
ஔ	—	au	au

மெய்யெழுத்துகள் — Consonants

வல்லினம்

க்	—	k	k
ச்	—	s	c
ட்	—	t	ṭ
த்	—	th	t
ப்	—	p	p
ற்	—	ṛ	ṛ

மெல்லினம்

ங்	—	ṅ	ṅ
ஞ்	—	ñ	ñ
ண்	—	ṇ	ṇ
ந்	—	n	n
ம்	—	m	m
ன்	—	ṉ	ṉ

இடையினம்

ய்	—	y	y
ர்	—	r	r
ல்	—	l	l
வ்	—	v	v
ழ்	—	ḻ	ḻ
ள்	—	ḷ	ḷ

வேண்டுகோள்

சேர்த்துப் படிக்க:

பக்கம் 10-இல் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கருத்தாகத் தொடங்கும் "தமிழ் ஒலிகளின்" என்னும் பிரிவில் 10ஆம் வரியில் உள்ள 'இடம் பெறவில்லை' என்பதன் பின்னரும், 'பின்னர்' என்பதன் முன்னரும் "இதிலிருந்து இந்நூற்பா முதலில் பிறப்பியலில் இடம் பெற்றிருக்கவில்லை" என்பதைச் சேர்த்துப் படிக்க.

பக்கம் 92-இல் உயிர் வரிசையில் இதழ் என்பதில் 'உ ஊ ஒ ஓ ஔ' என்பனவற்றைச் சேர்க்க.

பக்கம் 94-இல் பயன்படுத்தப் பெற்ற நூல்கள் வரிசையில், தொல்காப்பியம்—நன்னூல்—எழுத்ததிகாரம் க. வெள்ளை வாரணன், அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, அண்ணாமலை நகர் 1962.

Tolkappiyam–in English with critical studies
S. Ilakkuvanar
Kural Neri Publishing House, Madurai, 1972.

Journal of Tamil Studies, September, 1972.
International Institute of Tamil Studies
Madras-600 020.

என்பனவற்றைச் சேர்க்க.

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

உரைவளம்

பிறப்பியல்

இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், எழுத்துக்களது பிறப்பு உணர்த்தினமையின் பிறப்பியல் என்னும் பெயர்த்து. இதனை நூன்மரபின் பின்னே வைக்க வெனின், சார்பிற் றோற்றத் தெழுத்தும் தனிமெய்யும் மொழிமரபிடை யுணர்த்தி (பிறப்பு) உணர்த்த வேண்டுதலின் மொழிமரபின் [1]பின்ன தாயிற்று.

நச்சினார்க்கினியர்

இவ்வோத்து எழுத்துக்களினது பிறப்பு உணர்த்துதலிற் பிறப்பியல் என்னும் பெயர்த்தாயிற்று. சார்பிற்றோற்றத்து எழுத்துந் தனிமெய்யும் மொழியினன்றி உணர்த்தலாகாமையின் அவை பிறக்கும் மொழியை மொழிமரபிடை உணர்த்திப் பிறப்பு உணர்த்த வேண்டுதலின் நூன்மரபின் பின்னர் வையாது இதனை மொழிமரபின் பின்னர் வைத்தார்.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

எழுத்துக்களின் வகை, தொகை, தன்மை அவ்வெழுத்து மொழிகளில் வரும் இடம் இவற்றை நூன்மரபு, மொழிமரபு

சுவடி வேறுபாடு: 1. பின்னர்த்தாயிற்று

இவ்விரண்டியலுட் கூறினர்; அவற்றின் பின்னரும், இருசொற்கள் புணரும்போது நிகழும் மாறுதல்களை அறிவித்தற்கு அவ்வெழுத் துக்கள் பிறக்கும் இடத்தின் அறிவு இன்றியமையாமையின் புணர்ச்சியைப் பற்றிக் கூறும் இறுதி ஆறியல்களுக்கு முன்னரும் எழுத்துக்களின் பிறப்பிடத்தை உணர்த்தினர். அக்காரணம்பற்றி இவ்வியலுக்குப் பிறப்பியல் எனப் பெயர் வந்தது.

வேங்கடராசுலு ரெட்டியார்

நூல்மரபில் தனி எழுத்துக்களின் இலக்கணங் கூறி, மொழி மரபில் மொழிகளில் வைத்து அறியககூடிய சார்பெழுத்துக்களின் இலக்கணமும், மொழிகளின் முதலிலும் இறுதியிலும் நிற்கும் எழுத்துக்களும் கூறினராகலின், மேலை இரண்டியல்களானும் எழுத்திலக்கணமே உணர்த்தினாராயிற்று. ஆகலின் அவ்வெழுத் துக்களின் பிறப்பிலக்கணத்தை இவ்வியலில் உணர்த்துவாரா யினர் இவ்வாற்றான் மேலை இலக்கணங்களோடு இவ்வியல் இயைபுடைத்தாயிற்று.

வெள்ளை வாரணனார்

அகர முதல் னகர இறுதியாகவுள்ள முதல் எழுத்துக்கள் முப்பதையும் நூல்மரபிலும், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் சார்பெழுத்து மூன்றினையும் மொழிமரபிலும் வைத்துணர்த்திய ஆசிரியர், அம்முப்பத்து மூன்றெழுத்துக்களின் பிறப்பு முறையினை இவ்வியலான் உணர்த்துகின்றார். அதனால் இவ்வோத்துப் பிறப்பியல் என்னும் பெயர்த்தாயிற்று.

இலக்குவனார்

Chapter on the production of sounds.

கமீல் சுவலபில்

Generating speech sounds.

1. எழுத்துகள் பொதுவாகப் பிறக்குமாறு

83. உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் [1]உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்

சுவடி வேறுபாடு: 1. உட்பட

பிறப்பின் ஆக்கம் வேறுவேறு [1]இயல
திறப்படத் தெரியும் காட்சி யான. *(1)

ஆங்கில மொழி பெயர்ப்பு

இலக்குவனார்

The rising air starting from the navel finds place in the chest, larynx and pharynx and touches the teeth, lips, tongue, nose and palate. These eight organs produce all the letters which are born in different ways which can be known in a distinct manner when we learn the cause of production.

கமீல்சுவலபில்

It will be evident on careful observation that all sounds when pronounced are produced in different ways as the results of the modifications undergone by the rising air starting from the navel and passing through the eight places in (its) course–the head, and the throat, and the chest, the teeth, and the lips, and the tongue and the nose and the palate.

பிற இலக்கண நூல்கள்

வீரசோழியம். 6.

உந்தி முதல்எழும் காற்றுப் பிறந்து உரமும் சிரமும்
பந்தமலி கண்டமும் மூக்கும் உற்று அண்ணம்பல் லுடனே
முந்துமிதழ் நாமொழி உறுப்பாகும் முயற்சியினால்
வந்து நிகழும் எழுத்து என்று சொல்லுவர் வாள்நுதலே

நேமிநாதம். 6.

உந்தியிற் றோன்றும் உதானவளிப் பிறந்து
கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து—வந்தபின்நா
ஆசில்நா அண்ணம் இதழெயிறு மூக்கெனப்
பேசும் எழுத்தின் பிறப்பு.

சு. வே. 1. இயலும்

* *நூற்பாவின்முன் எண் தொல்காப்பிய எழுத்ததிகாரத் தொடர் எண்; பின்எண் பிறப்பியல் தொடர்எண்*

நன்னூல். 74.

நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும்அணுத் திரள்உரம் கண்டம் உச்சி
மூக்குஉற்று இதழ்நாப் பல்அணத் தொழிலின்
வெவ்வேறு எழுத்துஒலி யாய்வரல் பிறப்பே.

இலக்கணவிளக்கம். 9.

உயிர்உழப்பு உதானனின் நாதம் உச்சி
மிடறுஉரம் மூக்குஉற்று இதழ்நாப் பல்அணத்து
அடைந்து பின்னர் அவற்றது வினையான்
வேறுவேறு எழுத்தாய் ஒலியாய்வரல் பிறப்பே.

தொன்னூல் விளக்கம். 3.

உயிர்இடை இனமிடறு உரம்வலி உச்சிமெலி
இயைமுதல் இடமாய் இதழ்மூக்கு அணம்பல்நா
ஐந்து துணையிடத்தாம் அக்கரப் பிறப்பே.

அவிநயம். 8.

ஆற்ற லுடையுயிர் முயற்சியின் அணுவியைந்து
ஏற்றன ஒலியாய்த் தோற்றுதல் பிறப்பே.

சுவாமிநாதம். 5.

முறைசிறப்பான் இனத்தான்அம் முதல்நடத்தல் பிறப்பு
முயற்சிபொருள் அளவுருவும் ஏற்பனஒப்பு இனமாம்
நிறையுயிராற் சூக்குமையாம் மூலவிந்தால் பிறந்து
நேர்ந்துதா னனைக்கலந்து சிதறிமயிர் கருநீர்
உறமுவெழுத் தொடுக்குபைசந் தியதாய் நெஞ்சுயிர் சேர்ந்து
உரித்தெரித்துள் ளுணர்வொலி மத்திமையாய்க் கண்டம்
செறியுமுச்சி நாசியுற்று நாவணப்பல் விதழின்
செயலால்வை கரியாய்வெவ் வேறெழுத்தா யிடுமே.

பேரகத்தியம். 61.

ஆதன் அநாதியும் உதானன் ஆதியுமா
நாதமுரங் கண்டந் தலையிட முற்றுப்
பல்லிதழ் நாமூக் கணமைந் தொழிலால
எல்லா எழுத்தும் பிறக்கும் என்ப.

இளம்பூரணர்

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், எழுத்துக்களது பொதுப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) எல்லா எழுத்தும் நெறிப்பட நாடிச் சொல்லுங் காலை—தமிழ் எழுத்துக்கள் எல்லாம் ஒருவன் முறைப்பட ஆராய்ந்து தம்மைச் சொல்லுங் காலத்து, உந்தி முதலா முந்துவளி தோன்றி—கொப்பூழ் அடியாக மேலே கிளர்கின்ற உதானன் என்னும் பெயரையுடைய வாயுத் தோன்றி, தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ—தலையின் கண்ணும் மிடற்றின் கண்ணும் நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் [1]உளப்பட எண்முறை நிலையான் உறுப்பு உற்று அமைய—(தலையும் மிடறும் நெஞ்சும் என்னும் [2]மூன்றனோடும்) பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் [3]உளப்பட எட்டாகிய முறைமையையுடைய [4]இடங்களில் ஓர் உறுப்போடு ஓர் உறுப்புத் தம்மிற் பொருந்தி [5]அமைதி பெற, பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல—பிறப்பினது ஆக்கம் வேறுவேறு புலப்பட்டு வழங்குதலுடைய, திறப்படத் தெரியும் காட்சியான—கூறுபாடுளதாக [6]ஆராயும் அறிவிடத்து.

இதழ் போறலான் வாய் இதழ் எனப்பட்டது. எல்லா எழுத்தும் என்னும் எழுவாய்க்கும் 'பிறப்பின் ஆக்கம் [7]வேறுவேறு இயல என்பதனை ஒரு சொல் நீர்மைப்படுத்திப் பயனிலையாக்குக.

நச்சினார்க்கினியர்

என்பது சூத்திரம். இச்சூத்திரம் எழுத்துக்களினது பொதுப் பிறவி இத்துணை நிலைக்களத்து நின்று புலப்படும் என்கின்றது.

(இ—ள்.) தமிழ் எழுத்து எல்லாவற்றிற்கும் ஆசிரியன் கூறிய பிறப்பினது தோற்றரவை யாங் கூறுமிடத்து, கொப்பூழ் அடியாகத் தோன்றி முந்துகின்ற உதானன் என்னுங் காற்று, தலையின் கண்ணும் மிடற்றின் கண்ணும் நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் என்ற ஐந்துடனே அக்காற்று, நின்ற தலையும் மிடறும் நெஞ்சும் கூட எட்டாகிய முறைமையையுடைய தன்மையோடு கூடிய உறுப்புகளோடு ஒன்றற்று, இங்ஙனம் அமைதலானே, அவ்

சு. வே: 1. உட்பட
2. மூன்றனொடு
3. உட்பட
4. இடங்களான், இடங்களென
5. அமைவு பெற
6. ஆராயுமிடத்து
7. வேறுவேறியலும்

வெழுத்துக்களது தோற்றரவு வேறுவேறு புலப்பட வழங்குதலை யுடைய; அதனை அறிவான் ஆராய்ந்து அவற்றின் வழியிலே மனம்பட, அப்பிறப்பு வேறுபாடுகள் எல்லாம் கூறுபட விளங்கும்; எ—று.

சொல்லுங்காலை வளி நிலைபெற்று உறுப்புக்களுற்று இங்ஙனம் அமைதலானே அவை வழங்குதலையுடைய; அவற்றின் வழக்கம் *அவற்றின் வழியிலே மனந்திறப்படத் தெரியும் எனக் கூட்டி உரைத்துக் கொள்க. இங்ஙனம் கூறவே முயற்சியும் முயலும் கருத்தாவும் உண்மை பெற்றாம்.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

ஒவ்வொரு எழுத்தின் பிறப்பிடத்தைக் கூறுதற்கு முன் எவ்வாறு உடல்வளி எழுத்தாக மாறுகின்றது என்றும், எவ்விடங் களில் செல்ல அவ்வாறு மாறும் என்றும் உணர்த்த இச்சூத்திரத்தைக் கூறினார் ஆசிரியர்.

(பொருள்) உதானன் (முந்துவளி) கொப்பூழின்கண் முதலாகத் தோன்றி, தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் இவை எட்டிடத்தின் கண்ணும் முறையாக நிலைபெற்று, தனித்தனி எழுத்தாக உறுதற்குப் பொருந்துமாறு வழியின்கண் பொருந்த நாடி, எல்லா எழுத்துக்களாகவும் கூறப் படுமிடத்து, அவ்வெழுத்துக்களின் பிறப்பு வெவ்வேறு தன்மையன என்பது (நுண்ணறிவான்) ஆராய்ச்சியின்கண் சீர்மைப்பட அறியப்படும்.

இச்சூத்திரத்தான் உதானன் என்ற உடல் வாயு எட்டிடத்தில் நிலைபெற்று வெவ்வேறு எழுத்துக்களாக மாறும் என்பதும், அஃது ஒவ்வொருவரானும் ஆராய்ந்து காட்சிப் பிரமாணத்தால் அறியப்படும் என்பதும் உணர்த்தப்பட்டன. மேலே கூறியவாறு பொருள் கூறின், சூத்திரம் ஆற்றொழுக்காக அமைக்கப்பட்ட தாகும். 'தலையினும் மிடற்றினும் நெஞ்சினும்' என்றதிலுள்ள 'இன்' பழியின் என்றா, கற்பின் என்றா (தொல். சொல். 72) என்றவிடத்துள்ள 'இன்' போன்றதாகும்.

சூத்திரத்துள் தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்ற முறையிருப்பினும் உதானன் செல்லும் வழியின் முறை நெஞ்சு, மிடறு, தலை, மூக்கு, அண்ணம், நா, பல், இதழ் என்றிருத்தலான் அம்முறையையே கொள்ளல் வேண்டும் என்று உணர்த்த ஆசிரியர், 'எண்ணிலையான்' எனக் கூறாது, 'எண்

* சு. வே: அவற்றின் வழிப்படத் தெரியும்

முறை நிலையான்' எனக் கூறினர். 'சொல்லுங்காலை', 'தெரியும்' என்பன சொல்வகையான் செய்வினையாய் இருப்பினும் பொருள்வகையான் செயப்பாட்டுவினையாகக் கொள்ளப் பட்டன. 'தெரியும்' என்ற பயனிலைக்குப் 'பிறப்பின் ஆக்கம் வேறு வேறியல' என்ற தொடர் எழுவாயாகக் கொள்ளப் பட்டது.

இளம்பூரணர் இச்சூத்திரத்திற்குக் கூறும் பொருளாவது— "தமிழ் எழுத்துக்கள் எல்லாம்.............பயனிலையாக்குக."

ஈண்டு தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் இம்மூன்றனை 'நிலைஇ' என்றதைத் தழுவக் கூறினமையின் 'எண்முறை நிலையான்' என்றது பொருந்தாதெனக் கருதி மறுமுறை 'தலையும் மிடறும் நெஞ்சும் என்னும் மூன்றனோடும்' என்பதைக் கூட்டிக் கூறினர். 'நெறிப்பட நாடி' என்றதற்கு வளியை எழுவாயாய்க் கொள்ளுதல் நேரிதாயிருக்க, 'ஒருவன்' என்றதை எழுவாயாக்கினர். 'உறுப்புற்றமைய' என்றதற்கு 'ஓர் உறுப்போடு ஓர் உறுப்புத் தம்மிற் பொருந்தி அமைதிபெற' என்ற பொருள் கொள்ளுதலான் அவ்வளியே எழுத்தாக மாறு கின்றது என்றது கூறப்படாததாயிற்று. 'பிறப்பினாக்கம் வேறு வேறியல' என்றதை ஒரு சொல் நீர்மைப்படுத்தல் நேரிதாகத் தோன்றவில்லை. 'இதழ்போறலான் வாய் இதழ் எனப்பட்டது'' என்றதும் பொருந்தாக் கூற்றாகும், "இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்'' என்ற சூத்திரத்தின் இதழ் என்றதுவாயைக் குறிக்கின்றது எனக் கூற இயலாமையின். அச்சூத்திரவுரையில் 'இதழ்' என்பதற்கு 'வாய்' என்று பொருள் கூறாமையின், இத்தொடர் இடைச்செருகலாய் இருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

நச்சினார்க்கினியர் கூறும் பொருளாவது:— "தமிழ் எழுத்து எல்லாவற்றிற்கும் ...... கூறுபட விளங்கும்.''

'தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ' என்றதன் பொருளை உரையாசிரியர் கூறியவாறே கூறினர். ஆண்டுக் கூறிய குற்றம் ஈண்டும் நிற்கும். 'உறுப்பு' என்ற சொல் தலை, மிடறு, முதலியவற்றைக் குறிக்கின்றது என்றது பொருத்தமாகத் தோன்ற வில்லை. 'வேறு வேறியல' என்றதற்கு 'அவ்வெழுத்துக் களது தோற்றரவு' என்றதை எழுவாயாக வருவிக்கின்றனர். 'காட்சியான நாடி நெறிப்பட' என்ற அந்நுவயங்கொள்ளுவது சூத்திரப் போக்கிற்குப் பொருந்துமாறில்லை. 'தெரியும்' என்ற தற்கு 'அப்பிறப்பு வேறுபாடுகள் எல்லாம்' என்றதை எழுவாயாக வருவிக்கின்றனர். 'இங்ஙனங் கூறவே முயற்சியும் முயலும் கருத்

தாவும் உண்மை பெற்றாம்' எனக்கூறினர். எழுத்துக்கள் கூறு வோனின்றிப் பிறவாமையானும், உதானவளி எட்டு இடங்களில் நிலை பெற்று அமைதலான் வெவ்வேறு எழுத்துக்களாக உருவம் எடுக்கின்றது என்றதே இச்சூத்திரத்தின் கருத்து ஆதலானும் அவர் கொள்ளும் அந்நுவயமும், பொருள் கூறும் முறையும் சிறவா.

ஈண்டு நெஞ்சு, மிடறு, தலை இவற்றை ஆசிரியர் கூறியதற் குக் காரணம் அவ்வளி கொப்பூழின்கண்ணின்றும் புறப்பட்டு அவற்றின் வழியே சென்று வாயை யடைதலேயாகும். வாய்க்குள் காற்று வந்தடைந்த பின்னரே அஃது உயிராகவோ, வல்லின மெல்லினமாகவோ, இடையினமாகவோ ஆகும். வாய் முழுவதுந் திறந்திருக்க அவ்வளி எழுத்தாக ஆகுமாயின், அஃது உயிராகவே யாகும். சிறிது மூடியும் சிறிது திறந்தும் இருக்க எழுத்தாக ஆமாயின், அஃது இடையின எழுத்தாகவேனும் றகரமாக வேனும் ஆகும். வாய்முழுவதும் மூடப்பட்டிருக்க அவ்வளி எழுத் தாகுமாயின், றகரம் ஒழிந்த வல்லின மெல்லின எழுத்தாகும். வல்லினங்களை ஒலிக்கும்போது தொண்டையிலுள்ள இரண்டு நரம்புகள் இடம் விட்டு நிற்குமென்றும், மெல்லினங்களை ஒலிக்கும்போது அவை நெருங்கி நிற்கும் என்றும் கூறுவர் மொழி நூல் வல்லோர். ஆகலின் 100 ஆவது சூத்திரவுரையில், 'இடை யெழுத்திற்கு மிடற்று வளியும் வல்லெழுத்திற்குத் தலை வளியும் கொள்க' என இளம்பூரணர் கூறுதல் பொருந்தாததாகும். அவ்வாறு கூறுபடுத்தியவர் நெஞ்சுவளி எவ்வெழுத்திற்கெனக் கூறாதும் போயினர்.

அவ்வாறே வீரசோழியவுரைகாரர் 'உரத்தை வல்லினமும், சிரத்தை ஆய்தமும், கண்டத்தை உயிரும் இடையினமும், மூக்கை மெல்லினமும் பொருந்தும் எனக் கொள்க' எனக் கூறியதும், அவரைப் பின்பற்றி நன்னூலார் கூறியதும் பொருந்தா வென்க. இச்சூத்திரப் பொருளுக்கும் பாணினி முனிவரான் இயற்றப்பட்ட சிக்ஷையிலுள்ள சில தொடரின் பொருளுக்கும் ஒற்றுமை நோக்கத் தக்கது. இரண்டற்கும் வேற்றுமை சிறிதுளது. ஆங்குள்ள 'ஜிஹ்வாமூலம்' என்றதற்கு 'நாவின்வேர்' என்றது பொருளாகும். க வர்க்கத்தின் முதல் இரண்டெழுத்துக்களுக்கு முன்னர் ஒலிக்கப்படும் விஸர்க்கத்திற்கு அஃது இடமாதலின் பாணினி முனிவர் அவ்வாறு கூறினர். அதற்கு முதல் நா என்ற தையே இடமாகக் கொள்ளல் தகும் என்றும், நா எல்லா எழுத் துக்களையும் ஒலிக்கக் கருவியாய் இருக்கின்றது என்றும் கருதி ஆசிரியர் 'நாவின் வேர்' எனக் கூறாது 'நா' எனக் கூறினர்

என்னலாம். 'தாலு' என்றது ச வர்க்கத்திற்கு இடமாகக் கூறப் பட்டமையான், அஃது இடையண்ணத்தைக் குறிக்கின்றது எனச் சிலர் எண்ணலாம். 'தாலு' என்ற சொற்கு அண்ணம் முழுமை யும் பொருளாகலான் ஆங்கு இருவர்க்கும் வேற்றுமையிலது.

உந்தி முதலாகத் தோன்றியவளி எவ்வெழுத்தாக மாறினும் மிடற்றினின்றும் வாய்க்குள் வரும்வரை தன்னுடைய நிலையில் திரியாது என்றதையும், வாய்க்குள் அவ்வவ் விடத்தில் அவ்வளி மெய்யாக மாறும்போது தடைபடும் என்றதையும், உயிராக மாறும்போது அவ்வளி தடைபடாமல் வாயைவிட்டு வெளியில் வரினும், அது அவ்வவ் வுயிராக மாறும் இடம் வாய்தான் என்ற தையும் நன்கு உணர்ந்த ஆசிரியர், மிடற்றுவரை உயிராக மாறும் வளி தன்னிலையினின்றும் மாறாது என்றதை உணர்த்த இச் சூத்திரம் கூறினர்.

வேங்கடராசுலு ரெட்டியார்

இம்முதற் சூத்திரத்தில் எழுத்துக்களின் பிறப்பிடத்தைக் கூறியுள்ளார். இந்த முறையே பாணினீய சிக்ஷயிலும் (6, 9, 13) கூறப்பட்டுள்ளது. தைத்ரீயப் பிராதி சாக்கியத்தின் 'பதக்ரம ஸதனம்' என்னும் பாஷ்யத்தில் (சூ 2இன் உரை உதராக்கினியி னால் உந்தியினின்றும் மேல்நோக்கி எழுப்பப்பட்டவாயு, கண்டம் மார்பு சேர்ந்து அவ்வக் கரண விசேடங்களால் தாக்கப் பட்டு, வாய் மூக்கு இவ்வழியே வெளிப்படுகின்றது என்று கூறப் பட்டுள்ளது. 'வளி தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ' என்பது

'த்ரிணீ ஸ்தாநாநீ'

என்னும் சூத்திரத்தின் உரையில் 'த்ரீணீ ஸ்தாநாநி வாயோர் பவந்தி: உர: கண்ட்ட்சிர ஆத்மகாநி சரீரே' என்பதனோடு ஒப்பிடத்தக்கது.

வெள்ளை வாரணனார்

மூச்சினை வெளிவிடுங்கால் நுரையீரல் இரண்டிலிருந்தும் கிளம்பிய காற்று மிடற்றின் வழியாக மூக்கினை யடைந்து வெளியே செல்லுதலும் வாய் வழியாக வெளியே செல்லுதலு மாகிய இயல்பினை உடையதென்றும், அவ்வாறு தோன்றுங் காற்று ஒலி நரம்புகள், அண்ணம், நா முதலிய ஒலிக் கருவி களோடுங் கூடிச் செய்கை செய்யப்படின் எழுத்தொலிகளாக மாறும் என்றுங் கூறுவர் உடல் நூலார். உந்தியிலிருந்து எழுந்த காற்றே தலை, மிடறு, நெஞ்சு என்னும் இடங்களில் நின்று பல், உதடு, நா, மூக்கு, அண்ணம் ஆகிய இவ்வுறுப்புக்களின் தொழி

லால் வேறு வேறு எழுத்துக்களாக மாறும் எனத் தொல்காப்பியனார் கூறுகின்றார். தொல்காப்பியனார் கூற்று இக்கால உடல் நூலார் கொள்கையோடு ஒத்து நிற்றல் காண்க.

தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

தமிழ் ஒலிகளின் உச்சரிப்பொலியியலை விளக்கத் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தில் 'பிறப்பியல்' என்னும் ஓர் இயல் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வியலில் காணப்படும் இடைவெளிகள், பிற்காலத்தில் சில நூற்பாக்கள் சேர்க்கப்பட்டுங்கூட, நூல் பழைய முழுமையான வடிவத்தில் நமக்குக் கிடைக்கவில்லை என்பதைக் காட்டுகின்றன. தொல்காப்பியப் பிறப்பியலின் முதல் நூற்பாவானது பாணினியின் சிக்ஷையை (Sikṣā) நினைவு படுத்துவது போலத் தோன்றுகிறது. இந்நூற்பாவில் கூறப்படும் பிறப்புறுப்புக்களில் இரண்டான தலையும், நெஞ்சும் பின்னர் வரும் விளக்கங்களில் இடம் பெறவில்லை; பின்னர் சேர்க்கப்பட்டது என்பது புலனாகும்*—தமிழ் மொழி வரலாறு பக். 79—80.

க. முருகையன்

உந்தியின் முறையான தொழிலினால் உயிர்த்தல் நடைபெறுகின்றது என்பதும், உயிர்த்தல் தொழிலின்போது வெளிச் செல்லும் காற்றின் (முந்து வளி) உதவியால் தமிழ் மொழியின் ஒலிகள் அனைத்தும் (எல்லா எழுத்தும்) பிறக்கின்றன என்பதும் தொல்காப்பியர் கருத்து.

வெளியேறும் நுரையீரல் மூச்சுக் காற்றே தமிழ் மொழியின் ஒலிகள் அனைத்தும் பிறத்தற்குக் 'காரணமாக உள்ளது என்பதைத் தொல்காப்பியர் "நெஞ்சில்...நிலைஇ முந்துவளி தோன்றி..." (நெஞ்சில் நிலை கொண்டு பெருகி முந்திக் கொண்டு வெளிப்படுகின்றது) என்று கூறுகின்றார். அவர் கூறும் தலை, மிடறு, நெஞ்சு என்ற கலைச் சொற்களைத் தலையறை (தொண்டைக்கு மேற்பட்ட பகுதி-அதாவது மேற்றொண்டை, வாய், மூக்கறைகள்), தொண்டையறை, நெஞ்சறை (நுரையீரல்களும் மூச்சுக் குழலும்) ஆகியவற்றைக் குறிப்பன என்று கொண்டு அவற்றை முறைமாற்றி நெஞ்சு, மிடறு, தலை என்று வரிசைப் படுத்திக் கொள்ள வேண்டும். தலையில் உள்ள மூக்கறையைத் தனியே பிரித்துப் பல், இதழ், நா, அண்ணம்

* இக்கருத்தின் மறுப்பாக அமைந்துளது. அடுத்து வரும் க. முருகையன் கூறும் விளக்கம். இவ்விளக்கமே சிறப்புடையது.

என்பனவற்றோடு சேர்த்து அவற்றையும் மேலே கூறிய நெஞ்சு, மிடறு, தலை என்பனவற்றையும் சேர்த்து ஒலியுறுப்புகளைக் கணக்கிட வேண்டும்.

காற்றறைகளையும் ஒலியெழுப்பிகளையும் தனித் தனியே பிரித்துத் தொல்காப்பியர் மூக்கறையை விதந்துகூறி, ஒலி யெழுப்பிகளுடன் சேர்த்து ஒலி யுறுப்புக்கள் எட்டு (எண்முறை நிலை) என்று வகைப் படுத்தியுள்ளார். தனி ஒலிகளை உண்டாக்கத் தேவைப்படாததும் ஒலி யெழுப்பிகள் அற்றதுமான மூக்கறையைப்* பல், இதழ், நா, அண்ணம் போன்ற பிற காற்ற றையின் உதவிகொண்டே ஒலிகளை உண்டாக்கவல்லது என்னும் அடிப்படையில் அதனைப் பல், இதழ், நா, அண்ணம் என்ற ஒலி யெழுப்பிகளுடன் ஒன்றாக வைத்து (பல்லும் இதழும் நாவும் அண்ணமும் மூக்கும்) எண்ணியுள்ளார். காற்றறைகள் மூன்று, ஒலியெழுப்பிகள் நான்கு, (முன்பே உண்டான ஒலிகளை வலி பெறச் செய்து காற்றறை போல வாயறையின் உதவியாலேயே ஒலிகளை யுண்டாக்குவதால் ஒலி யெழுப்பி போலச் செயல்படும்) ஒலியூக்கியாகிய மூக்கறை ஒன்று என்று ஒலியுறுப்புகளை எட்டாக வகுத்துள்ளதன் நுண்மை யறியத் தக்கது.

எழுத்துகள் அனைத்தையும் உச்சரிக்கும்போது அவற்றின் பிறப்பிற்கான வழிமுறையை நன்கு உணர்ந்து ஒருவன் செயலாற்றுவதன் மூலம் வாயறையில் உள்ள இயங்கு உறுப்புக்கள் அவற்றோடொத்த இயங்கா உறுப்புக்களோடு** இணைய (உறுப்புற்றமைய) ஒலிகள் பிறப்பதற்கான முயற்சி (ஆக்கம்) வெவ்வேறாக அமையும். இதன் மூலம் ஒலிகள் இயல்பாகப் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

இயங்குறுப்பு இயங்காவுறுப்பை அணுகும் முயற்சியில் பலவகை உண்டு. இவ்வுறுப்புக்கள் இணைந்து மூச்சுக்காற்று வரும்வழியை ஏதேனும் ஓரிடத்தில் முழுமையாக அடைப் பதனால் அடைப்பொலி (Stop) பிறக்கிறது. இவை நெருங்கிச் சிறு இடைவெளிவிட்டு அமையும்போது உரசொலி (Fricative) உண்டாகின்றது. நா இருபக்கமும் தாழ்ந்து நடுவில் உயர்ந்து வாய் வழியை நடுவில் அடைப்பதன் மூலம் மூச்சுக்காற்று வாயின் மருங்குகளின் வழியே வெளியேறி மருங்கொலி (Lateral)யை உண்டாக்குகின்றது. வாயறையின் வழியே விரைந்து செல்லும்

* மூக்கறையில் ஒலியெழுப்பும் உறுப்புகள் இல்லை

** இயங்கு உறுப்புகள்—இதழ், நா
இயங்கா உறுப்புகள்—பல், அண்ணம்

மூச்சுக்காற்று நா நுனி, உதடு, உள்நாக்கு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை அதிரச் செய்கின்றது. இவ்வகை அதிர்வு ஒரே ஒருமுறை மட்டும் நிகழ்ந்தால் தட்டொலி (Falp)யும் பல முறை நிகழ்ந்தால் ஆடொலி(trill)யும் பிறக்கின்றன. இவ்வாறன்றி வாயறையின் உறுப்புக்கள் (நா, இதழ்) ஓரளவுக்கு நெருங்கி (open approximation) மூச்சுக்காற்று தடையின்றி வெளியேறும் வகையில் அமைவதன் மூலம் உயிரொலி (vowel)யும் உயிர்ப்பொலி (opproximant)யும் பிறக்கின்றன. இவ்வாறு பல வொலிகளையும் பிறப்பிக்கும் இயங்குறுப்புக்கள் இயங்கா வுறுப்புக்களை அணுகும் விதத்தைத்தான் தொல்காப்பியர் ''பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல'' என்று கூறுகின்றார்.

மேலே கண்டவற்றின் மூலம் பேச்சொலிகளை எழுப்ப உதவும் அடிப்படைச் சக்தி (source of energy) நுரையீரல் (நெஞ்சு) காற்றால் உண்டாகின்றது என்றும், இக்காற்று குரல்வளையின் வழியே செல்லும்போது குரல்வளை மடல் (தொண்டை)களால் குரல் உண்டாகின்றதென்றும், ஒலிகள் உண்டாவதும் ஊக்கப் படுவதும் வலிபெறுவதும் வாய், மூக்கறை (தலை)களால் நிகழ் கின்றன என்றும் அறிகின்றோம். இதனைத்தான் தொல்காப்பியர் ''உந்திமுதலா......வேறுவேறியல'' என்று கூறுகின்றார். (தொல் காப்பிய மொழியியல் பக்கம். 18—25).

ப. அருணாசலம்

எழுத்துக்களின் பிறப்பைப் பற்றிக் கூறும்போது குறிப்பாக வடமொழிக்கும் தமிழுக்கும் உள்ள பொதுவெழுத்துக்களின் பிறப்பை விளக்கும்போது தொல்காப்பியமும் வடமொழி இலக் கணமும் பெரிதும் ஒத்த நிலையிலேயே பேசுகின்றன,[1]

''உந்தி முதலா ...... காட்சியான.''

என்பது எழுத்துகளின் பிறப்புப் பற்றிய பொதுநூற்பா. சிலர் இந்நூற்பா இன்றைய மொழிநூல் அடிப்படையைக் கொண்டு பார்க்கும்போது பொருள் தெளிவற்றிருப்பதாகக் கொண்டு இதில் சில வரிகளை இடைச் செருகல் என்று கூற விரும்புகின்றனர்.[2] ஆயின் இச் சூத்திரக்கருத்து வடமொழி இலக்கண ஆசிரியர்களும் கொண்ட ஒன்று; இந்திய இலக்கணக் கொள்கைகள் என்ற

1. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, 'வடமொழி வரலாறு' பக். 30-32

2. C. R. Sankaran—Tholkappiyar and the Science of Phonemics. pp. 117—130. Tamil culture, Vol IX. No 2 Apr—June 1961.

பொதுமையிலிருந்தே தொல்காப்பியரும் இக்கருத்தினை வெளிப்படுத்துகிறார் என்று கொண்டால் இடைச் செருகல் எனக் கூறுவதற்கு இடம் இல்லை. வடமொழி இலக்கண நூலிலும் இத்தகைய கருத்து உள்ளது என்று அறிஞர்கள் எடுத்துக் காட்டுவர்[3]. அச்சூத்திரத்திலும், எட்டு இடங்கள்— உரம், கண்டம், தலை, பல், இதழ், நாக்கு, மூக்கு, அண்ணம் (ஜிஹ்வா மூலம்) —தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

தலையை எழுத்துக்கள் பிறக்கும் இடமாக அறிஞர்கள் இன்று உடன்படுவதில்லை. காற்று, தலைக்குச் சென்று வாய்க்கு வரும் என்று கூறுவது பொருந்தாது என்பர்.[4] இப்பொருந்தாமையும் தொல்காப்பியர் வடமொழி இலக்கண ஆசிரியர்கள் சென்ற வழியே சென்றதால் வந்த தவறாக இருக்கலாமல்லவா? தொல்காப்பியர் தமிழ் எழுத்துக்களுக்கும், பாணினி வடமொழி எழுத்துக்களுக்கும் பிறப்புக் கூறினும் இருவரும் பொது நிலையில் நின்று பேசும் குரல் இருவர் சூத்திரங்களிலும் தெளிவாகவே கேட்கிறது. எழுத்துக்களின் பிறப்பினைத் தனித்தனியாகக் கூறும்போதும் வடமொழிவாணர் கூறும் பாங்கிலேயே தொல்காப்பியர் கூறுவதாக எடுத்துக்காட்டும் இங்டகளும் உண்டு.

(தொல்காப்பியர், பக்கம், 43—44. தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5 1975)

3. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, 'வடமொழி வரலாறு'. பக். 30—32.

4. குறிப்பு 2-இல். பக்கம். 100

* "இந்திய இலக்கணக் கொள்கைகள்' என்ற பொதுமையிலிருந்தே தொல்காப்பியரும் இக்கருத்தினை வெளிப்படுத்துகிறார் என்று கொண்டால் இடைச்செருகல் எனக் கூறுதற்கு இடம் இல்லை" என முன்னர் எழுதியவர், "எழுத்துக்களின் பிறப்பினைத் தனித் தனியாகக் கூறும்போதும் வடமொழிவாணர் கூறும் பாங்கிலேயே தொல்காப்பியர் கூறுவதாக எடுத்துக் காட்டும் இடங்களும் உண்டு" என்றெழுதியது, மாறுபடக் கூறல்போல் தோன்றினும்—அதாவது வடமொழி இலக்கணங்களைப் பின்பற்றித் தொல்காப்பியர் கூறினார் என்னும் கருத்துபடத் தோன்றினும் எழுதியவர்க்கு அக்கருத்தில்லை என்பதை அவர் பிறிதோர் இடத்தில், "எனவே அங்கு ஒருவர் கருத்தைப் பிறிதொருவர் ஏற்றுப் பேசுவது என்ற பேச்சுக்கே இடமில்லை" (பக். 45) என எழுதியதால் அறியலாம்.

தே. ஆண்டியப்பன்

உந்தி முதலாகத் தோன்றிப் பரவி நிற்கும்போது ஒலியின் தொடக்கத்தை (Sound source) உணர்கிறோம். மிடற்றில் வரும் போது ஒலிக்காற்று குரலாகிறது. குரல் இடையறாத அதிர்வுடையது; இசைத் தன்மை யுடையது. அக்குரல், வாயுறுப்பால் அடைபட்டு. சில குறிப்பிட்ட அலை நீளமும் அதிர்வும் கொண்டு வெளிப்படும் போது எழுத்தொலி பிறக்கிறது. 1 ஒலிக்காற்று 2 குரல் 3 எழுத்தொலி என்னும் மூன்று நிலைகள் உருவாகின்றன. அலை நீளம் மாறுபடும் ஒலிக் கூறுகளை உருவாக்கினாலும், பல் இதழ் நா அண்ணம் முதலியவற்றால் நெறிப்பட (Modified) அமைந்து வெளியேறும். அதனால் இவ்வுறுப்புக்களை ஒலிச் சல்லடை (Filter) என்பர். சல்லடை வழியாக வெளியேறும் எழுத்தொலி ஒவ்வொன்றும் நிச்சயமாகத் திறப்படத் தெரியும் நுண் அலகுகளைப் (distinctive feature) பெற்றிருக்கும். பிறப்பின் ஆக்கத்தால் வேறுபடும். (காப்பிய நெறி-எழுத்தியல் பக்கம் 41.)*

ஆபிரகாம் அருளப்பன்

உந்தி முதலாக எழுகின்ற வாயுவானது தோன்றி இயங்கி முதன்மையாகத் தலையிலும் மிடற்றிலும் நெஞ்சிலும் நிலைபெறுகின்றது. இம்மூன்றனுள் மிடறு நடுவணிடம்: குரலாக்குங் கருவியாகிய நாண்களைத் தன்னுட்கொண்டிருத்தலின் அது, வளியோடு ஒலியெழுந்து வெளிப்படுதற்குரிய சிறப்பிடமாகும். தலையும் நெஞ்சும் வளியானது தங்கி நின்று ஊக்கந் தருதற்குரிய இடங்கள்.

தலை மிடறு நெஞ்சு என்னும் முதன்மையிடங்களோடு பல் இதழ் நா அண்ணம் மூக்கு என்னும் ஐந்தும் வாயு நிலையாவதற்கு உரிய துணையிடங்கள்.

தொல்காப்பியத்தின்படி பல் இதழ் நா மூக்கு அண்ணம் என்னும் ஐந்தினும் நாக்கு நடுவண் அமைகின்றது. மிடற்றுக்கு அடுத்தபடியாக இது சிறந்த உறுப்பாகும்.

உந்தி முதலா என்ற நூற்பாவில் தொல்காப்பியர், வளியின் எட்டு வகை நிலைகளை முறையாகக் கூறி, 'உறுப்புற்றமைய' எனப் பொதுவாகக் கூறுகிறார். ஈண்டுக் 'காட்சி' என்பது செவிப்புலனால் கேட்டு அகத்தால் கண்டுணர்ந்து தெளியப்படும் ஒலி வடிவம் ஆகும். மிடற்றொடும் மூக்கொடும் வாயின் உறுப்

* இக்கருத்து நூற்பா விளக்கமாக அமைந்துளது.

புக்களாகிய நாவும் அண்ணமும் பல்லும் இதழும் எழுத்துகள் உருவங் கொள்ளுதற்கு உரிய இடமாதலேயன்றி, எவ்வாறு உறுப்பும் ஆம் என்பதை 84 முதல் 101 வரையுள்ள நூற்பாக் களால் உணர்த்துகிறார்.

"மூக்கைத் தொல்காப்பியர் உறுப்பென்றார். நன்னூலார் இடம் என்றார். இருவரும் தலையை ஓர் இடமாகக் கொண்ட னர். இஃது உடல் நூலுக்கும் ஒலி நூலுக்கும் பொருந்து வதாய்த் தோன்றவில்லை" என அடிக் குறிப்புத் தரும் பாவாணர் சுட்டிய 83-ம் நூற்பாவில், வளியின் இரண்டாம் நிலையிடங்கள் ஐந்தனுள் ஒன்றாக மூக்கைத் தொல்காப்பியர் கொள்கின்றாரே யன்றி உறுப்பெனக் கூறவில்லை. மற்று

1. "உந்தியொடு புணர்ந்த இருவகை வளியும்
தந்த மியக்கம் தடுப்பது வளிநிலை"

2. ஒப்பார் பிராணன் அபானன் உதானனுடன்
தப்பா வியானன் சமானனே—இப்பாலும்
நாகன் தனஞ்சயன் கூர்மன் கிருகரன்
தீதிலாத் தேவதத்த னே (சிலம்பு அடியார் உரை)

(1. பிராணன்—உயிர்க்காற்று; 2. அபானன்—மலக் காற்று; 3. வியானன்—தொழிற்காற்று; 4. உதானன்—ஒலிக்காற்று; 5. சமானன்—நிரவுக்காற்று; 6. நாகன்—விழிக் காற்று; 7. தனஞ்சயன்—வீங்கற்காற்று; 8. கூர்ன்—இமைக் காற்று; 9. கிருகரன்—தும்மற்காற்று; 10. தேவதத்தன்—கொட்டாவிக் காற்று).

இவ்விரண்டு மேற்கோட் பாடல்களைக் கொண்ட நூல் களின் முதல் நூல்கள் தொல்காப்பியர் முதலிய தொன்னூ லோர்க்குத் துணையான உடல்நூலும் ஒலிநூலும் எனக் கருதலாம்.

(தமிழ் எழுத்து வைப்பு முறை. பக்கம். 31—34)

2. உயிர் எழுத்துகள் பிறக்குமாறு

84. **அவ்வழிப்**
பன்னீ ருயிரும் தந்நிலை திரியா
***மிடற்றுப் பிறந்த வளியின்[1] இசைக்கும்** **(2)**

ஆ. மொ.: இல.

In the course of production
The twelve vowels are born by the air which finds place in the larynx.

க. சு.

In the way
all the twelve vowels, with out Changing their quality are uttered with the air born in the throat.

பி. இ. நூ.

நன். 75. அவ்வழி
ஆவி...இடம் மிடறு ஆகும்.
இல. வி. 10. அவ்வழி ஆவி...மிடறு...இடையிற்றோன்றும்
தொன். 3. உயிர்...மிடறு...இடம்.
முத்து. 43. உயிர்...மிடறு...இடமாம் என வேண்டப்படுமே.
சாமி. 5. உயிர்...மிடற்றின்
பேர. 62. ஆவி...இடம் மிடறாகும்.

இளம்.

இது, [2]உயிர் எழுத்திற்குப் பொதுப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அ வழி—அவ்விடத்து, பன்னீர் உயிரும் தம் நிலை திரியா—பன்னிரண்டு உயிர் எழுத்தும் தத்தம் நிலையில் திரியாவாய், மிடற்று பிறந்த வளியின் இசைக்கும்—மிடற்றின்கண் பிறந்தவளியான் ஒலிக்கும்.

---

* மிடற்றுப் பிறந்தவளி—ஒலித்தசையின் அதிர்வால் ஒலியுறுப்புக்களில் ஏற்படும் இசைமையைக் குறிப்பதாக இதற்கு நாம் விளக்கந் தரலாம்—தெ. பொ. மீ. தமிழ் மொழி வரலாறு. பக். 87

சு. வே. 1. ஒலிக்கும்
2. உயிரெழுத்துப் பிறவி

'தந்நிலை திரியா' என்றதனால், குற்றியலிகரம் குற்றியலுகரம் *தந்நிலை திரியும் என்பது [1]பெறப்பட்டது.

நச்.

இஃது உயிர் எழுத்திற்குப் பொதுப் பிறவி கூறுகின்றது.

(இ—ள்.) பன்னிரண்டு உயிரும் தத்தம் மாத்திரை திரியாவாய், அவ்வுந்தியிடத்துப் பிறந்த மிடற்றின்கண் நிலை பெற்ற காற்றான் ஒலிக்கும்; எ—று.

எனவே குற்றியலிகரமும் குற்றியலுகரமும் தந்நிலை திரியும் என்றாராயிற்று. இவ்வெழுத்துக்களைக் கூறியுணர்க.

சுப்பிர.

(பொ—ள்.) அவ்விடத்து மிடற்றுத் தோன்றிய வளியினின்றும் பன்னீருயிரும் தத்தம் இடங்களின் கண்திரிந்து ஒலிக்கும்.

திரியா என்பது விதிவினையெச்சம். இளம்பூரணர் அதனை மறைவினையா லணையும் பெயராகக் கொண்டு அதன் பின்னர் 'ஆய்' என்ற வினையெச்சத்தை வருவித்துக் கூறினர். உயிர்கள் தத்தம் இடங்களில் திரிகின்றமையான் அவ்வாறு கூறுதல் பொருந்தாது.

நச்சினார்க்கினியர் 'அவ்வழி' என்றதைப் 'பிறந்த' என்றதனோடு கூட்டி 'அவ்வுந்தியிடத்துப் பிறந்த' எனப் பொருள் கூறுதலோடு 'நிலை' என்ற சொற்கு 'மாத்திரை'யெனப் பொருள் கூறினர். வாயை விட்டுப் புறத்தே வளிவருகின்ற காலத்தானே உயிர்களின் மாத்திரை வேறுபடுகின்றமையானும், வளி மிடற்றின் கண்ணே யிருக்கு மளவில் அவற்றிற்கு மாத்திரை புலப்படாமையானும், அவர் தங் கூற்று ஆராய்தற்குரியது. அன்றியும் இருவரும் ''தந்நிலை திரியா' என்றதனால் குற்றியலிகரம் குற்றியலுகரம் தந்நிலை திரியும் என்பது பெறப்பட்டது'' எனக்கூறினர். ஈண்டுப் பன்னீருயிரைப் பற்றி மாத்திரம் கூறப்படுகின்றமையானும், சார்பெழுத்துக்களைப்பற்றிப் பின்னர் ஆசிரியர் கூறுகின்றமையானும் இத்தொடர் இடைச் செருகலாய் இருக்கலாம்.

பிறகுறிப்புகள்:

ஆசிரியர் தொல்காப்பியர் மிடற்றுவளியாற் பிறப்பனவாகப் பன்னிரண்டு உயிர் எழுத்துகளை மட்டும் கூறியிருப்ப நன்னூலார்

சு. வே. 1. கூறப்பட்டது

* தந்நிலை திரிதல்—மாத்திரையிற் குறைதல்

''ஆவியிடைமையிடம் மிடறாகும்'' (நன். 75) என இடையெழுத்தையும் சேர்த்துக் கூறினர்.

''தொல்காப்பியத்துள் உயிர் எழுத்திற்குப் பொதுப் பிறப் புணர்த்திய நூற்பா காணப்படவில்லை. அவிநயத்துள் மெய் யெழுத்திற்குப் பொதுப்பிறப் புணர்த்திய நூற்பா உண்டென் பதை 'அவிநயத்துள்ளும், முதலிடை நுனிநாப் பல்லிதழ் மூக்கின் —வன்மை முதலா மும்மையும் பிறக்கும்' எனப் பொதுவகையாற் கூறி ''இன்னவிடத்து இன்ன எழுத்துப்பிறக்கும் என்று கணக்கிய லுட் புறனடை யெடுத்தோதினார் அவிநயனார் ஆகலானும்'' என்னும் யாப்பருங்கல விருத்தியால் (15) உணரலாகும்— திரு. அடிகளாசிரியர் (தொல்-எழுத்து. இளம். பதிப்பு)

இந்நூற்பாவில் 'தந்நிலை திரியா' என்பதற்கு விளக்கமாக டாக்டர். ச. அகத்தியலிங்கமும் டாக்டர் க. புஷ்பவல்லியும் கூறு வன வருமாறு:

''பொதுவாக மொழியியலாளர் ஒலிகளை (Phones) இரண்டாகப் பிரிப்பர். இவ்வடிப்படையில் ஒரு மொழியில் காணப் படும் ஒலியன்களும் இரண்டாகப் (உயிர், மெய்) பிரிவுபடும். இப் பிரிவினைத் தொல்காப்பியத்திலும் காணமுடிகிறது. மொழியிய லாளர்கள் உயிர் எழுத்துகளின் தன்மையைக் குறிப்பிடும்போது இவை உள்ளேயிருந்து வரும் காற்று எந்தவிதமான தங்குதடையு மின்றி வாயினூடே வந்து வெளிவருகின்ற தன்மையைக் கொண்டன என்பர். எனவே, உயிர்கள் எவ்விதத் தடையு மின்றிக் காற்று எவ்வாறு புறப்பட்டதோ அவ்வாறே தங்கு தடையின்றி வருவதால் உருவானவை என்பது இன்றை மொழி யியல் கொள்கை. இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தொல்காப்பியர் மிக நாசுக்காகப் பன்னீ ருயிரும் தந்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்'' என்று கூறிப்போந்தார்..............

''மிடற்றிலிருந்து பிறக்கின்ற வளி தந்நிலையின் திரியாது; அதாவது தடைபடாது என்பதைக் குறிப்பிடவே இவ்வடை மொழியை இணைத்தார் என்னலாம்.'' ''தந்நிலை திரியா என்ப தனைத் ''தங்குதடையின்றி, எஎவிதக் குறுக்கீடுமின்றி'' எனக் கொள்ளுவதே பொருந்தும். இவ்வாறு கொள்ளின் உயிர்களின் பண்பு பற்றி இன்றைய மொழியலாளர் கொண்டுள்ள கருத் துடன் பொருந்தி நிற்றல் காணலாம்.'' (மொழியியல் II வாழ்வும் வரலாறும் பக். 17, 18.)

அ ஆ பிறக்குமாறு

85. *அவற்றுள்
அஆ வாயிரண்டு அங்காந்து இயலும். **(3)**

ஆ. மொ: இல.

Among the vowels, 'a' and 'ā' are born because of the opening of the mouth.

க. சு.

Among them,
a, ā those two, are uttered by opening the mouth.

பி. இ. நூ.

நன். 76. அவற்றுள்
முயற்சியுள் அஆ அங்காப் புடைய.

இல. வி. 11. அவற்றுள் முயற்சியுள் அஆ அங்காந்து...இயலும்

முத்து. 44. அவற்றுள்
அஆ அங்காப்பொடு வரும் என்ப.

சாமி. 6. அஅ அங்காப்பு.

பேர. 63. அவற்றுள்
அஆ ஆயிரண் டங்காந் தியலும்.

இளம்.

இது, உயிர் எழுத்துக்களுள் சிலவற்றுச் சிறப்புப் பிறவி உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) *அவற்றுள்—மேற் சொல்லப்பட்ட உயிர் பன்னிரண்டினுள், அஆ ஆஇரண்டும் அங்காந்து இயலும்—அகர ஆகாரங்களாகிய அவ்விரண்டும் அங்காந்து சொல்ல அஃது இடமாகப் பிறக்கும்.*

---

*"ஆயிரு தொடைக்கும் கிளையெழுத்துரிய" (செய். 93) என்னும் நூற்பாவுரையுள் பேராசிரியர் மேற்கோள்.

குறிப்பு

"அ ஆ வாயிரண்டு என்பதற்கு, அஆ என்னும் எழுத்துக்கள் கீழ்வாயும் மேல் வாயுமாகிய இரண்டு வாய்களும் என்றும் உரை கூறலாம்" என்பர் திரு—அடிகளாசிரியர்.

நச்.

இஃது அவ்வுயிர்களுள் சிலவற்குச் சிறப்புப் பிறவி கூறு கின்றது.

(இ—ள்.) முற்கூறிய பன்னிரண்டு உயிர்களுள் அகர ஆகாரங் களாகிய அவ்விரண்டும் அங்காந்து கூறும் முயற்சியால் பிறக்கும்; எ—று.

முயற்சி உயிர்க்கிழவன்கண்ணது. அஆ என இவற்றின் வேறுபாடு உணர்க.

சுப்பிர.

அங்காத்தல் என்ற சொல்லான் ஈண்டு அகர ஆகாரங்கட்குப் பிறப்பிடமும் முயற்சியும் கூறப்பட்டன வென்க. முதல் நாவும் முதலண்ணமும் சேர்கின்ற இடந் திறத்தலே அங்காத்தல் என்ற சொல்லான் உணர்த்தப் படுதலின், அவ்விடமே அவ்விரண் டெழுத்திற்கும் பிறப்பிடமாகும். வாய்திறத்தல் என்ற பொருளால் அதன் முயற்சியும் கூறப்பட்டதாகும். இதனை யுணர்ந்தே இளம்பூரணர் "அங்காந்து சொல்ல அஃது இடமாகப் பிறக்கும்" என்றனர். நச்சினார்க்கினியர் "அங்காந்து கூறும் முயற்சியாற் பிறக்கும்" என்றனர். அவர் கூற்றில் அகர ஆகாரங்கட்குப் பிறப்பிடம் கூறப்படாததாகும். சிலர் அவற் றிற்கு வாய் முழுவதையும் பிறப்பிடமாகக் கொள்வர்.

வேங்கட.

உயிர் எழுத்தினை ஒலிக்கையில்' எந்தவிடத்தில் உபஸம் ஹாரம் (ஸம்ஸ்பர் சானாதி ஸம்ஸ்லேஷம்) நேர்கின்றதோ அஃது அதன் பிறப்பிடம் (தைத். 2:31) என்றும், எதற்கு யாது உபஸம் ஹாரமாகின்றதோ அஃது அதற்குக் காரணம் (தைத். 2:32) என்றும் கொள்ளப்படும்.

அகர ஆகாரங்களுக்குப் பிறப்பிடம் கண்ட்டம் என்பது, 'கண்ட்யாவஹெள' என்னும் பாணினீய சிக்ஷையால் (17) அறியலாகும்.

'அஹவிஸர்ஜ்ஜநீயா: கண்ட்டே'

என்பது சுக்லயஜுர்வேத ப்ராதிசாக்யயம்.

அகர ஆகாரங்களை ஒலித்தற்கு அங்காத்தல் செய்யுமிடத்து, அகர ஒலிக்கு இதழையும் கவுளையும் மிகக் குவித்தல் செய்யா

மையும், ஆகார ஒலிக்கு அவற்றை மிகவிரித்தல் செய்யாமையும் வேண்டும்.

இது,

அவர்ணே நாத்யுபஸம் ஹ்ருதமோஷ்ட்டஹநு
நாதிவ்யஸ்தம் (தைத். 2 : 12)

என்னும் சூத்திரத்தானும் அதன் உரையானும் அறியப்படுகின்றது.

க. முருகையன்

அ ஆ ஆகிய இரு உயிர்களும் வாய் அங்காந்த நிலையிலும் நா முன்னும் பின்னும் தாழ்ந்து நடுவில் உயர்ந்த நிலையிலும் இதழ் குவியாது பரந்த நிலையிலும் உள்ளபோது பிறக்கின்றன.

அ ஆ ஆகிய இரண்டும் அங்காப்பு உயிர்கள்.
இ ஈ எ ஏ ஐ ஆகிய ஐந்தும் முன் உயிர்கள்.

உ ஊ ஒ ஓ ஔ ஆகிய ஐந்தும் பின் உயிர்கள்.

முன்பின் உயிர்களை நோக்க அஆ ஆகிய இரண்டும் நடு உயிர்கள்.

அ முதல் ஐவரையுள்ளன இதழ்குவியா வுயிர்கள். உ—ஔ: குவியுயிர்கள்.

(தொல்காப்பிய மொழியியல்—பக். 34, 35)

இகரம் முதலியன பிறக்குமாறு

86. **இஈ எஏ ஐயென இசைக்கும்**
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய **(4)**

ஆ. மொ: இல.

i, ī, e, ē and ai—these five sounds are born in the same way: the sides (edge) of the (trunk of the) tongue will touch the upper teeth.

க. சு.

The five sounds i, ī, e, ē, ai are produced in a similar way like those, but they have contact of the edge of the back of the tongue with the teeth-ridge.

பி. இ. நூ.

நன். 77. இ ஈ எ ஏ ஐ அங் காப்பொடு
அண்பல் முதல்நா விளிம்புற வருமே.

இல. வி. 11. இ ஈ எ ஏ ஐகான் அதனொடு
அண்பல் முதல்நா விளிம்புற...இயலும்

முத்து. 45. இ ஈ எ ஏ ஐஅங் காப்பொடு
மேல்வாய்ப் பல்லடி நாவிளிம் புறவரும்.

சுவாமி. 6. அங்காப்போடு அண்பல்
அடிநாவின் விளிம்புற இ ஈ எ ஏ ஐயாம்.

பேர. 64. இ ஈ எ ஏ ஐஅங் காப்புடன்
அண்பல் முதல்நா விளிம்புற லுடைய

இளம்.

இதுவும் அது.

(இ—ள்.) இ ஈ எ ஏ ஐ என இசைக்கும் அப்பால் ஐந்தும்—இ ஈ எ ஏ ஐ என்று சொல்லப்படும் அக்கூற்று ஐந்தும், அவற்று ஓர் அன்ன—மேற்கூறிய அகர ஆகாரங்கள்போல அங்காந்து சொல்லப் பிறக்கும், அவைதாம் பல்அண் நாமுதல் விளிம்பு உறல் உடைய—அவைதாம் (அவ்வாறு சொல்லப் பிறக்கு மிடத்துப்) பல்லினது அணிய இடத்தினை நாவினது அடியின் விளிம்பு சென்று உறுதலையுடைய.

நச்.

இதுவும் அது.

(இ—ள்.) இ ஈ எ ஏ ஐ என்று கூறப்படும் அக்கூற்று ஐந்தும், அகர ஆகாரங்கள் போல அங்காந்து கூறும் முயற்சியாற் பிறக்கும், அவைதாம் அங்ஙனம் பிறக்குமாயினும் அண்பல்லும் அடிநா விளிம்பும் உறப் பிறக்கும் வேறுபாடுடைய; எ—று.

அண்பல் வினைத்தொகை. எனவே, நாவிளிம்பு அணுகு தற்குக் காரணமான பல்லென்று அதற்கோர் பெயராயிற்று. இ ஈ எ ஏ ஐ என இவற்றின் வேறுபாடு உணர்க.

சுப்பிர.

(பொ—ள்.) இ ஈ எ ஏ ஐ என்ற ஐந்தெழுத்துக்களும் அவற்றின் தன்மையவாய் அங்காந்திசைத்து மேல்வாய்ப் பற் களுக்குப் பின்னர் உள்ள அண்ணமும் நாவிளிம்பும் பெருந்து தலையுடைய.

ஈண்டு 'இசைக்கும்' 'உடைய' என இரண்டு பயனிலைகளும், 'அப்பாலைந்தும்' 'அவைதாம்' என்ற இரண்டு எழுவாய்களும் இருத்தலின் வாக்யபேதம் என்ற குற்றம் வாராதோ எனின், வாராதென்க, 'அவைதாம்' 'அப்பாலைந்தும்' என்ற இரண்டு சொற்களானும் ஒரு பொருள் குறிக்கப்படுதலின்.

'அவற்றோரன்ன' என்ற சொல்லான் 'அங்காந்தியலும், என்றது குறிக்கப்படுகின்றமையான் அதனானே பிறப்பிடம் முயற்சி இரண்டுங் குறிக்கப்படும் எனக்கொள்ளலாமே எனின், அற்றன்று; அண்பல் முதனா விளிம்புறல் உடைய' என்றதனான் பிறப்பிடங் குறிக்கப்படுதலின், 'அவற்றோரன்ன' என்றதனான் அவற்றின் முயற்சி மாத்திரங் கொள்ளப்படும்.

ஈண்டு 'அண்பல் முதல்நா விளிம்புறல்' என்றது இரண்டாம் வேற்றுமையாய் 'உடைய' என்பதற்குச் செயப்படு பொருளா யிற்று. 'உடைய' என்ற குறிப்புவினை செயப்படு பொருளைக் கொள்ளுமோ எனின், கொள்ளும் என ஆசிரியர்,

> "இரண்டா குவதே
> ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
> அவ்விரு முதலிற் றோன்றும் என்ப" (சொல். 71)

என்ற சூத்திரத்திற் கூறினர் என்க.

'அண்பல் முதல் நாவிளிம்பு' என்றதை அண்பல் முதல், நாவிளிம்பு எனப் பிரித்தல் தகும். அண்ணம் நண்ணிய பல் முதல் என்பதே அதற்குப் பொருளாகும். அண்பல் முதனா என உரைகாரர் பிரித்தது ஆராய்தற்பாலது.

வேங்கட.

இச்சூத்திரத்தில் 'அண்பல் முதல்நா விளிம்புறல்' என்னும் பகுதிக்கு, 'பல்லினது அணிய இடத்தினை நாவினது அடியின் விளிம்பு சென்று உறுதல்' என்று இளம்பூரணர் உரை கூறினார். 'அண்பல்லும் அடிநா விளிம்பும் உறல்' என்று நச்சினார்க்கினியர் உரைத்தார். இகரம் முதலாயின, வடமொழியில் 'தாலவ்யம்' எனப்படுதலின், இடை நாக்குத் தாலுவினைச் சார அவை பிறக்கும் என்பது புலனாகின்றது. [1]தாலு ஆவது மூர்த்தாவின் மேற்பகுதி (அண்ணம்) என்றது ஸ்ரீ வஜ்ஜல, சின ஸீதாராமஸ் வாமி சாஸ்த்ரியாரவர்கள் ஆராய்ந்துரைத்துள்ளார்கள். ஆதலின், அடிநாக்கின் விளிம்பு அண்பல்லைப் பொருந்துதலின்று என்பது விளங்கும். அன்றியும் நச்சினார்க்கினியர் கூறியவாறு

அண்பல்லும் அடிநா விளிம்பும் உற இவை ஒலிப்பன அல்ல. ஆகலின் அவர், 'அண்பல் முதனா விளிம்புறல்' என்பதை, 'அண் பல், முதனா விளிம்பு உறல்' எனப் பிரித்துக் கூறியது அமைவுடை யதன்று. அண்பல்முதல், நாவிளிம்பு உறல்' எனப் பிரித்து, 'மேற்பல்லின் முதலிடத்தை நாவின் விளிம்பு பொருந்துதல்' என்று பொருள் கூறுதலே இயைபுடைத்தாகும்.

முன்னர்,

''அண்ணம் நண்ணிய பன்முதல் மருங்கின்'' (11)

என்றும்,

''நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல்உற'' (14)

என்றும் வருதல் காண்க. இக்கூறியவற்றான்,

''அண்பல் முதல்நா விளிம்புற வருமே'' (நன். 77)

என்னும் நன்னூற் சூத்திரத்திற்கு, அண்பல்லை அடிநா விளிம்பு பொருந்தப் பிறக்கும் என்ற நன்னூல் விருத்தியுரையும் பொருந் தாமை தானே போதரும்.

''[2]தாலௌ ஜிஹ்வாமத்ய மிவர்ணே''

என்னும் சூத்திரத்தானும்,

''[3]இவர்ணே ஜிஹ்வாமத்யம் தாலாவுப ஸம்ஹர்தவ்யம்பவதி''

என்னும் அதன் உரையானும், இடைநாக்குத் தாலுவினில் அடுத் தலால் இகர ஈகாரங்கள் ஒலிக்கின்றன என்பது தெளிவாகும்.

இனி, இவ்வாசிரியர் இகர ஈகார எகர ஏகார ஐகாரங் களாகிய ஐந்தெழுத்திற்கும் இடமும் முயற்சியும் ஒன்றாகக் கூறினாராயினும், எகர ஏகாரங்களுக்கும் முயற்சியிற் சிறிது மாறுபாடு உண்டு எனத் தெரிகின்றது. அது ''தத்தந்திரிபே....'' என்னும் சூத்திரத்தான் அறிவிக்கப்பட்டுள்ளது.

சு. வே. 1. நன்னயாதர்வ, ப. 149

2. தைத். ப்ராதி. 2 : 22

3. 'இகர இகாரங்களில், நாக்கின் இடைப்பாகம் (இடை நாக்கு) தாலுக்களிற் சென்று முடிய வேண்டுவதா யுளது' என்பது பொருள்.

[1]"ஜிஹ்வாமத்யாந்தாப்யாம் சோத்தராஞ் ஜம்ப்யாந்
ஸ்பர்சயதி"

என்னும் சூத்திரத்தானும் அதன் உரையானும் ஏகாரத்தின் பிறப்பிடமும் முயற்சியும் இகர ஈகாரங்களினும் வேறுபாடுடையன என்பது நன்கு விளங்கும்.

[2]. ஐகாரத்தில் கண்டத்துப் பிறக்கும் அகரம் முதலிலும் தாலுவிற் பிறக்கும் ஏகாரம் முடிவிலும் உளது என்பதும் அவற்றின் ஒலி முறையே அரை மாத்திரையும் ஒன்றரை மாத்திரையும் என்பதும் அறியப்படுகின்றன.

க. முருகையன்

இ ஈ எ ஏ ஆகிய நான்கும் வாய் அங்காவாது கீழ்த்தாடை மேல்தாடையுடன் நெருங்கியிருக்கும் போது நாவினது முன் விளிம்பு (நாவின் முன்பக்க ஓரம்) கீழ் முன் பல்லின் ஈற்றைத் தொட்ட நிலையில் (அண்பல் முதல்நா விளிம்புஉற) அமைந்தும், இதழ் விரிந்த நிலையில் அமைந்தும் இருக்கும்போது பிறக்கின்றன. "தத்தம் திரிபே" (88) என்றதனால் இவ்வுயிர்கள் பிறக்கும்போது ஒவ்வொரு உயிர்க்கும் ஏற்ப நாவின் நுனி படிப்படியாகத் தாழ்ந்துகொண்டுவரும் என்று கொள்ளவேண்டும். எனவே, நுனிநாவின் உயரம் குறைவதோடு வாயும் சிறிது சிறிதாகத் திறந்து அங்காத்தலைப் பெறுகின்றது.

ஐ பிறக்கும்போது (அகர ஒலிக்கூறு இருத்தலின்) அகரத்தின் பிறப்பிடம் தன் இயல்பான பிறப்பிடத்தினின்றும் சற்று முன்னதாகத் தள்ளி அமையப் பிறக்கின்றது.

(தொல்காப்பிய மொழியியல்—பக். 35, 36)

1. தைத். ப்ராதி. 2:17. "இடை நாக்கின் விளிம்புகள் ஹநுமூலப்ராந்தத்தின் மேலிடங்களைத் தொட ஏகாரம் பிறக்கும்.
2. எகரம் வடமொழியில் இல்லையாகலின், ஏகாரம் மட்டும் கூறப்பட்டது.

உகரம் முதலியன பிறக்குமாறு

87. உ ஊ ஒ ஓ ஒளவென இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும் (5)

ஆ. மொ. இல.

u, ū, o, ō and au, these five sounds are born because of the rounding of the lips.

க. சு:

The five sounds u, ū, o, ō au are produced by rounding the lips.

பி. இ. நூ.

நன். 78. உ ஊ ஒ ஓ ஒளஇதழ் குவிவே
இல. வி. 11. உ ஊ ஒ ஓ ஒளகாண் இதழ்குவிந் தியலும்
முத்து. 46. உ ஊ ஒ ஓ ஒளஇதழ் குவிவே.
சுவாமி. 6. இதழ்குவிவின் உஉ ஒஓ ஒள உதிக்கும்
பேர. 65. உ ஊ ஒஓஒள இதழ்குவிந் தியலும்

இளம்.

இதுவும் அது.

(இ—ள்.) உ ஊ ஒ ஓ ஒள என இசைக்கும் அப்பால் ஐந்தும்— உ ஊ ஒ ஓ ஒள எனச் சொல்ல இசைக்கும் அக்கூற்று ஐந்தும், இதழ் குவிந்து இயலும்—இதழ் [1]குவித்துச் சொல்ல நடக்கும்.

நச்.

இதுவும் அது.

(இ—ள்.) உ ஊ ஒ ஓ ஒள என்று சொல்லப்படும் அக்கூற்று ஐந்தும் இதழ் குவித்துக் கூறப் பிறக்கும்; எ—று.

உ ஊ ஒ ஓ ஒள என இவற்றின் வேறுபாடு உணர்க.

சுப்பிர.

இவற்றின் பிறப்பிடமும் பகார மகாரங்களின் பிறப்பிடமும் ஒன்றாக ஆசிரியர் கூறியிருத்தல் நோக்கத்தக்கது.

ஈண்டு முதற் சூத்திரத்தினின்று 'அவற்றோரன்ன' என்ற தொடர் அதிகரித்தது.

சு. வே. 1. குவியச்

க. முருகையன்

உ ஊ ஒ ஓ ஔ ஆகிய நான்கும் வாய் பெரிதும் மூடிச் சிறிதே திறந்த நிலையில் அமைந்தும் நாவின் பின்பகுதி உயர்ந்தும் இதழ்கள் குவிந்தும் உள்ள நிலையில் பிறக்கின்றன. "தத்தம் திரிபே சிறிய (88) என்பதனால் இவ்வுயிர்கள் பிறக்கும்போது ஒவ்வொரு உயிருக்கும் ஏற்ப முதல்நா படிப்படியாகத் தாழ்ந்து கொண்டே வருகிறது.

ஔ பிறக்கும்போது (அகர ஒலிக்கூறு இருத்தலின்) அகரத்தின் பிறப்பிடம் தன் இயல்பான பிறப்பிடத்தினின்றும் சற்றுப் பின்னாகத் தள்ளி அமையப் பிறக்கின்றது.—

(*தொல்காப்பிய மொழியியல். பக்.* 35, 36)

உயிர்க்கும் மெய்க்கும் ஒரு பொது விதி

88. தத்தம் திரிபே சிறிய ஏன்ப. **(6)**

ஆ. மொ: இல.

The manner of producing each sound will differ a little they say.

க. சு.

They say that the difference among them is slight.

பி. இ. நா.

வீர. 4.

எடுத்தல் படுத்தல் நலிதல்
ஓயாது உரப்பல் எனநால் வகையில்
பிறக்கும் மெய்கள்

நன். 88.

எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமிற் சிறிதுள வாகும்

இல. வி. 14.

தத்தம் திரிபே சிறிய என்ப

முத்து. 59.

எடுத்தல் படுத்தல் இரண்டே ஓசை

சுவாமி. 7.

ஓரிடத்தினிற் பல எழுத்துத்
தம்பிறப்பு ஓதினும் எடுத்தல் படுத்தல் நலிவுழப்பில்
தத்தமில் சில பேதம் உள.

பேர. 79.

தத்தமில் திரிபே சிற்சில வுளவாம்

இளம்.

இது, முன் கூறிய உயிர்க்கும் மேற் [1]கூறும் மெய்க்கும் ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) தத்தம் திரிபு சிறிய என்ப—(எழுத்துக்கள் ஒருதானத்துக் கூடிப் பிறக்கும் எனப்பட்டன; அவ்வாறு கூடிப் பிறப்பினும்) தத்தம் வேறுபாடுகளைச் சிறிய [2]வேறுபாடுகள் என்று சொல்லுவர்.

அவ்வேறுபாடு அறிந்து கொள்க.

நச்.

இது முற்கூறிய உயிர்க்கும் மேற்கூறும் மெய்க்கும் பொது விதி கூறிச் சிங்க நோக்காகக் கிடந்தது.

(இ—ள்.) உயிர்களும் மெய்களும் ஒவ்வொரு தானங்களுட் பிறப்பனவற்றைக் கூட்டிக் கூறினேமாயினும் நுண்ணுணர்வான் ஆராயுமிடத்துத் தம்முடைய வேறுபாடுகள் சிறியவாக உடைய என்று கூறுவர் புலவர்; எ—று.

அவை எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் என்றவாற் றானுந் தலைவளி நெஞ்சுவளி மிடற்றுவளி மூக்குவளி என்ற வாற்றானும் பிறவாற்றானும் வேறுபடுமாறு நுண்ணுணர் வுடையோர் கூறி உணர்க. ஐ விலங்கலுடையது. வல்லினந் தலைவளியுடையது. மெல்லினம் மூக்குவளியுடையது. இடையினம் மிடற்றுவளியுடையது. ஏனையவும் கூறிக் கண்டு கொள்க.

சுப்பிர.

(பொ—ள்.) இ ஈ எ ஏ ஐ என்ற எழுத்துக்களுள் இ ஈ இரண்டும் ஓரிடத்திற் பிறப்பினும், எ, ஏ இவ்விரண்டும் வேறிடத் திற் பிறப்பினும், ஐகாரம் வேறிடத்திற் பிறப்பினும் அம்மூவகை எழுத்துக்களுக்கும் முயற்சியும் வேறுபடினும், அவ்வாறே உ, ஊ,

---

சு. வே. 1. கூறிய
2. வேறுபாடுண்டென்று, வேறுபாடுகள் எனச்

ஒ, ஓ, ஔ இவற்றுள் உகர ஊகாரங்கட்கும் ஒகர ஓகாரங்கட்கும் ஔகாரத்திற்கும் பிறப்பிடமும் முயற்சியும் வேறுபடினும், தத்தம் வேறுபாடு சிறிய என்று கூறுவர் புலவர்.

இச்சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் ''இது முற்கூறிய..... சிங்க நோக்காகக் கிடந்தது'' என்பர். பின்னர் உள்ள மெய் களின் இடத்தையும் முயற்சியையும் வெளிப்பட நன்கு ஆசிரியரே கூறியிருத்தலின், இச்சூத்திரம் மெய்களின் பிறப்பிடத்தைக் கூறுமிடத்துச் சொல்ல வேண்டுவதில்லை. அன்றியும் ''அவை எடுத்தல்......நுண்ணுணர்வுடையோர் கூறியுணர்க'' என்று அவர் கூறுகின்றார்; எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் என்ற சொற்கள், உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் ப்ரசயம் என்ற ஸ்வரங்களைக் குறித்தலானும், அவை வடமொழியிற் போல தமிழ் மொழியில் அவ்வாறே வழங்கப்பட்டன என்றற்குப் பழைய சான்று ஒன்றுமில்லையாயினும் அவை ஒவ்வோர் எழுத் திற்கும் இருக்கின்றமையான் 'தத்தம்' என்ற சொல் பொருந் தாமையானும், அவர் தங் கூற்று ஆராய்தற்பாலது.

வல்லினம் தலைவளியுடையது என்றும், இடையினம் மிடற்றுவளியுடையது என்றும் நச்சினார்க்கினியர் இங்குக் கூறியதற்குக் காரணம் 100ஆவது சூத்திரவுரையில் இளம்பூரணர் அவ்வாறு கூறியதாயிருத்தல் கூடும். அவ்வாறாயின், நெஞ்சு வளியால் உண்டாம் இனம் யாதென இருவரும் கூறவில்லை. அன்றியும் மெல்லினங்களெல்லாம் தாங்கூறிய இடங்களுடன் மூக்கினையும் இடமாகக் கொள்ளும் என ஆசிரியரே 100ஆவது சூத்திரத்தில் கூறினமையான் மூக்குவளியான் மாத்திரம் அவை பிறக்கின்றன என்று கூறுதல் தவறாகும். அவற்றை ஒலிக்கும் போது சிறிது வளி வாய் வழியாகவும், சிறிது மூக்கு வழியாகவும் வருதலை ஒவ்வொருவரும் உணரலாகும். இடையினம் என்பன, முழுதும் வாய் திறந்து ஒலிக்கப்படும் உயிருக்கும், முழுதும் வாய் மூடி ஒலிக்கப்படும் வல்லின மெல்லினங்களுக்கும் இடையே, வாய் சிறிது மூடியும், சிறிது திறந்தும் ஒலிக்கப்படுகின்றமையின் அப்பெயர் பெற்றனவேயன்றித் தலைக்கும் நெஞ்சிற்கும் இடை யிலுள்ள மிடற்றுவளியால் பிறத்தலான் அப்பெயர் பெற வில்லை. ஆகலின் இடையினம் மிடற்றுவளியுடையது எனக் கூறுதலும் பொருந்தாது.

---

1. சுக்லயஜுர் 73. உரை; தைத். 2: 26, 29.

வேங்கட.

இது மேலவற்றிற்கோர் புறனடை.

இகரம் முதலிய ஐந்து எழுத்துக்களுக்கும், உகரம் முதலிய ஐந்து எழுத்துக்களுக்கும் தனித்தனியே முயற்சி ஒன்றாகக் கூறினராயினும், அவ்வெழுத்துக்களுள் ஒவ்வொன்றற்கும் முயற்சியில் சிறிது வேறுபாடு உண்டு என்றபடி.

ஒரே விதமான முயற்சியால் பல எழுத்துக்கள் தோன்றுதல் எப்படி என ஐயம் உண்டாகுமாதலின், அதனை நீக்குதற் பொருட்டு இது கூறினார்.

இச்சூத்திரம் சிங்க நோக்காகக் கிடக்கின்றது என்பர் உரையாசிரியர்கள். முன்னர் மெய்யெழுத்துக்களைக் கூறுகையில், இரண்டிரண்டெழுத்துக்களைச் சேர்த்துக் கூறுகின்றனராயினும், அவற்றுள் மெல்லெழுத்தாறற்கும் மூக்கின் வளியே வேறுபாடன்றி இடவேறுபாடு இன்மையானும், ளளக்களுக்கு முயற்சி வேறுபாடு கூறியிருத்தலானும், இகரம் முதலிய ஐந்தெழுத்துக்களுள்ளும் உகரம் முதலிய ஐந்தெழுத்துக்களுள்ளும் திரிபுடையன உண்மையானும், இவ்விதி, மேற்கூறிய உயிர் எழுத்துக்களுக்கே புறனடையாகும்.

இகர ஈகாரங்களுக்கும், ஏகாரத்திற்கும் முயற்சி வேறுபாடு மேற்கூறியதனாற் போதரும் அன்றே? இனி,

> **"ஓஷ்ட்டோபஸம் ஹார உவர்ணே"** (2 : 24)
> **"ஓகாரேச"** (2 : 13)
> **"ஓஷ்ட்டௌ தூபஸம் ஹ்ருததரௌ"** (2 : 14)

என்னும் தைத்ரீய ப்ராதிஸாக்யத்தான், உகர ஊகாரங்கட்கும் ஓகாரத்திற்கும் முயற்சி வேறுபாடுண்மை அறியப்படும்.

'ஔகாரத்தில் முதற்கண்' அகர ஒலியும் பின்னர் ஓகார ஒலியும் உள என்பதும், அவை முறையே அரை மாத்திரையும் ஒன்றரை மாத்திரையும் என்பதும் அறியப்படுகின்றன.

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

ஒலிப்பு முறைகளை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியர் ஒலிகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறார். அவை பின் வருமாறு:—

1. அ ஆ 2. இ ஈ எ ஏ ஐ 3. உ ஊ ஒ ஓ ஔ. அகரமும் ஆகாரமும் வாயைத்திறத்தலாலேயே பிறக்கின்றன. (தொல்.

85) நாவானது இடைப்பட்ட நிலையில் இருக்கவேண்டும் என அவர் எதிர்பார்க்கக் கூடும். இது அ, ஆ ஆகிய உயிர்களைக் கீழ் நடு உயிர்களாக்கும். இரண்டாவது பிரிவில் முன் உயிர்கள் உள்ளன. பல்லை நுனிநா விளிம்புற இவைபிறக்கும் (தொல்.86) முன் உயிர் ஒலிகள் பற்றிய அதிச அண்ண அச்சில் இனிட யண்ணத்தின் நடுவில் ஒலிகளின் ஒலிப்புக்கு ஏற்ப அகலமுடைய தொடப்படாத பகுதி உள்ளது. தொடுதல் நாவின் எஞ்சிய பகுதியின் அருகிலும் அப்பாலும் நிகழ்கிறது. இந்த நூற்பா தெளிவாக இல்லாதபோதும் தொல்காப்பியர் இத்தகைய விளக்கத்தையே தருகிறார் எனக்கொள்வது தவறாகாது. மூன்றாவது பிரிவு உயிர்கள் தொல்காப்பியத்தின்படி இதழ் குவிதல தன்மையைப் பெற்றுள்ளன. இதைத் தொல்காப்பியர் குறிப்பிடுவதிலிருந்து இரண்டாவது பிரிவு உயிர்கள் இதழ்குவிதல் தன்மையைப் பெற்றில எனக் கொள்ளலாம். கடைநா உயர் தலைப் பற்றித் தொல்காப்பியர் ஒன்றும் குறிப்பிடவில்லை. அக்காலத் தமிழில் இதழ்குவிதல் நிலையை ஒட்டி நாவின் இயக்க மும் அமைந்திருக்கலாம். குற்றியலுகரத்தை உச்சரிக்கையில் இதழ் விரிவதை அவர் குறிப்பிடவில்லை.

—(தமிழ் மொழிவரலாறு—பக். 87, 88.)

பி. கு.

தலைவளி எழுத்திற்குப் பயன்படுவதாய்த் தெரியவில்லை. விலங்கல்—நலிதலையடுத்த படுத்தல் ஒலிகளைச் சேர்த்துக்கூறும் போது உள்ள ஓசை

வல்லினம் நெஞ்சுவளியுடையது என்பதே பொருத்தமானது —பாவணர். முன்நூற்பாவில் கூறப்பட்ட உ ஊ ஒ ஓ ஔ ஆகியவைபற்றி இந்நூற்பாவில் கூறப்படுதலின், 'அவைதாம்' என்ற சுட்டு சில ஏடுகளிற் காணப்பட்டனபோலும். எஸ். இராசம் வெளியீட்டில் இது காணப்படுகிறது.

மெய்யெழுத்துகள் பிறக்குமாறு

க. ஙர்†

89. ககார ஙகாரம் முதல்நா அண்ணம்* (7)

ஆ. மொ: இல.

K and ñ, are born by the joining of the back of the tongue with that of palate.

க. சு:

K (and) ñ (are produced by the contact of) the back tongue with the palate.

பி. இ. நூ.

நன். 79. **கஙவும்...முதல்...நா அண்ணம்உற வரும்.**
இல. வி. 12. **முதல்நா அண்ணம்உற கஙவும் தோன்றும்**
முத்து. 47. **அடிநா அடியணம் அழுத்த கங வரும்**
சுவாமி. 6. **அடிநா அடியணம் உறக் கஙவாம்.**
பேர. 66. **ககார ஙகாரம் முதல்நா முதலணம்.**

இளம்.

இது மெய்களுள் சிலற்றிற்குப் பிறவி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) ககாரம் ஙகாரம் நாமுதல் அண்ணம் (முதல்)— ககாரமும் ஙகாரமும் நாமுதலும் அண்ண முதலும் உறப் பிறக்கும்.

---

† ஙகர மெய்யைத் தனிஒலியனாகக் கொள்ள முடியாது. கடையண்ண வெடிப்பொலிக்கு முன்னர் வரும் மகர மெய்யின் மாற்றொலி என்றே இதைக் கொள்ள வேண்டும்.

* கடை இடை நுனி என மூவிடங்களாக நாக்கு பிரித்துக் கொள்ளப்படுகிறது. அண்ணத்தை இங்ஙனம் தொல்காப்பியர் பகுக்கிறாரா என்ற வினா இங்கு எழுகிறது. முதல்நா அண்ணம் இடைநா அண்ணம் நுனிநா அண்ணம் முதலிய தொடர்களை அவரே ஆள்கிறார். இவ்வடைமொழிகள் நாவிற்கு மட்டுமா அல்லது நா, அண்ணம் ஆகிய இரண்டிற்கும் பொதுவானதா என்பது விளங்கவில்லை. முதல் அண்ணம் இடையண்ணம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இரு வழிகளிலும் கொள்ளலாம். ஆகையால் சிக்கல் ஏதும் இல்லை.— தெ, பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழ்மொழி வரலாறு பக்கம் 82.

வல்லொலியை வெடிப்பொலி என்பர்,

நச்.

இது மெய்களுள் சிலவற்றிற்குப் பிறப்புக் கூறுகின்றது.

(இ—ள்.) ககாரமும் ஙகாரமும் முதல் நாவும் முதல் அண்ணமும் உறப் பிறக்கும்; எ—று.

உயிர் மெய்யாகச் சூத்திரத்துக் கூறினும் தனிமெய்யாகக் கூறிக்காண்க. முதலை இரண்டிற்கும் கூட்டுக. க, ங என இவற்றின் [1]வேறுபாடு உணர்க.

சுப்பிர.

(பொ—ள்.) க் ங் இவையிரண்டும் நாவடியோடு பொருந்திய அண்ணத்தின்கண் பிறக்கும்.

'இயலும்' என்ற சொல் 87ஆவது சூத்திரத்தினின்று அதிகரித்தது.

முதனாவண்ணம் என்றது முதல்நாவோடு பொருந்திய அண்ணம் என்ற பொருளில் வந்த வேற்றுமைத் தொகை. அஃது ஈண்டு ஏழாம் வேற்றுமையுருபு தொகப் பெற்றது.

இச்சூத்திரவுரையில் உரைகாரர்கள் இருவரும் முதல் என்றதை அண்ணம் என்றதனோடும் கூட்டியுரைத்தனர். முதல் நாவோடு பொருந்தும் அண்ணத்தின் பகுதி அண்ணத்தின் முதல் ஆகுமேயன்றி மற்றொரு பகுதி ஆகாமையானும், சிறப்பித்துக் கூறவேண்டிய இடத்தே அடைமொழி இன்றியமையாததானும், அவ்வாறு கூட்டிச் சொல்ல வேண்டுவதின்று. அவர்கள் கூட்டிச் சொன்னதற்குக் காரணம் முதனா அண்ணம் என்றதை இரண்டு தனிச் சொற்களாகக் கொண்டமையும், உறஎன்ற சொல்லை வருவித்தமையும் ஆகும்.

உயிர்களின் பிறப்பிடத்தைக் கூறிய பின்னர் ககர ஙகரங்களின் பிறப்பிடத்தை ஏன் ஆசிரியர் கூறினர் எனின், நெடுங்கணக்கில் உயிர்களின் பின்னர் அவ்வீரெழுத்தே இருக்கின்றமையானும், அம்முறையை 'எழுத்தெனப்படுப வகரமுத னகரவிறுவாய்' என்ற முதற் சூத்திரத்தில் ஆசிரியர் கொண்டமையானும் என்க.

வேங்கட.

மெய்யெழுத்தினை ஒலிக்கையில் எதனில் ஸ்பர்சம் உண்டாகின்றதோ அஃது அவ்வெழுத்தின் பிறப்பிடம் என்றும், எதனால்

சு. வே. 1. வேறுபாடும்

தொடுவிக்கின்றோமோ அது கரணம் என்றும் கொள்ளப்படும். உதாரணமாக,

கஙக்களுக்குப் பிறப்பிடம் அடியண்ணம்
கரணம் அடிநாக்கு
அண்ணமாவது—நாக்கிற்கு மேற்பட்ட தலைப்பகுதி
அடியண்ணம் ஹநுமூலம் எனப்படும்.

பி. கு.

சுப்பிரமணிய சாஸ்திரியார் 'நாவடியோடு பொருந்திய அண்ணம்' என்றது பொருத்தமாகத் தோன்றவில்லை. அப் பொருளாயின் நாவடியோடு பொருந்திய அண்ணம் இடமாகும். அவ்விடத்து நிகழும் முயற்சியாதென்பதற்கு விடையில்லை. நாவடி பொருந்துதலே முயற்சியாதலின், நாவடியும் அண்ண முதலும் உற என்றாவது நாவடியானது அண்ண முதலை உற என்றாவது பொருள் காண்பதுவே சிறக்கும்.

ச, ஞ.

90. சகார ஞகாரம் இடைநா அண்ணம். (8)

ஆ. மொ: இல.

C and ñ, are born because of the joining of the middle of the tongue with that of the palate.

க. சு.

C (and) ñ (are produced by the contact of) the middle tongue with the palate.

பி. இ. நூ.

நன். 79. சஞவும் இடைநா அண்ணம் உற வரும்.

இல. வி. 12. இடைநா அண்ணம் உற சஞவும்...தோன்றும்.

முத்து. 48. இடைநா அண்ணம் இறுக்கச் சஞ எழும்.

சுவாமி. 6. இடைநாத் துன்னும் இடையண்ணம் உற சஞவாகும்.

பேர. 67. சகார ஞகாரம் இடைநா இடையணம்

இளம்.

இதுவும் அது.

(இ—ள்.) சகாரம் ஞகாரம் நாஇடை அண்ணம் (இடை)— சகாரமும் ஞகாரமும் நாவது இடையும் [1]அண்ணத்தது இடையும் உறப்பிறக்கும்.

நச்.

இதுவும் அது.

(இ—ள்.) சகாரமும் ஞகாரமும் இடைநாவும் இடையண்ண மும் உறப் பிறக்கும்; எ—று.

இடையை இரண்டிற்குங் கூட்டுக. ச ஞ என இவற்றின் வேறுபாடு உணர்க.

சுப்பிர.

(பொ—ள்.) ச் ஞ் இவை இடைநாவோடு பொருந்தும் அண்ணத்தின்கண் பிறக்கும்.

ஈண்டும் 'இயலும்' என்ற சொல் அதிகரித்தது.

'இடை'யை இரண்டற்கும் கூட்டவேண்டும் என்ற உரை காரர்களது கொள்கை இன்றியமையாததன்று என்பது முதற் சூத்திரவுரையான் விளங்கும்.

பி. கு.

'இடைநாவோடு பொருந்தும் அண்ணம்' என்ற உரை பொருந்துவதன்று என்பதற்கு 'முதல்நா அண்ணம்' என்பதற்கு உரைத்தவாறே கொள்க.

ட, ண

91. டகார ணகாரம் நுனிநா அண்ணம். (9)

ஆ. மொ: இல.

t and ṇ are produced by the meeting of the tip of the tongue and that of the palate.

க. சு.

t (and) ṇ (are produced by the contact of) the tip of tongue with the palate.

சு. வே. 1. அண்ணத்திடையும்

பி. இ. நூ.

நன். 79. டணவும்...நுனிநா அண்ணம் உற வரும்.

இல. வி. 12. நுனிநா அண்ணம்உற டணவும்...தோன்றும்.

முத்து. 49. நுனிநா நுனியணம் நோக்க டண வரும்.

சுவாமி. 6. முடிநா முடியண்ணம் உற டணவாம்.

பேர. 68. டகார ணகாரம் நுனிநா நுனியணம்.

இளம்.

இதுவும் அது.

(இ—ள்.) டகாரம் ணகாரம் நா நுனி அண்ணம் (நுனி)—டகாரமும் ணகாரமும் நாவது நுனியும் அண்ணத்தது நுனியும் உறப் பிறக்கும்.

நச்.

இதுவும் அது.

(இ—ள்.) டகாரமும் ணகாரமும் நுனிநாவும் நுனி அண்ணமும் உறப் பிறக்கும்; எ—று.

நுனியை இரண்டிற்கும் கூட்டுக. ட ண என இவற்றின் [1]வேறுபாடு உணர்க.

சுப்பிர.

(பொ—ள்.) ட், ண் என்பன நா நுனியோடு பொருந்திய அண்ணத்தின்கண் பிறக்கும்.

'இயலும்' என்பது ஈண்டும் அதிகரித்தது.

தெ. பொ. மீ.

ட், ண் ஒலிகள் தொல்காப்பியர் காலத் தமிழில் நுனிநா ஒலிகளாக இருக்கவில்லை என்றே கருதவேண்டும். அவற்றில் நாவிளிம்பு தொடுதல் (Blade contact) என்பது இருந்தது. டகர மெய் இன்று எல்லா இந்திய மொழிகளிலும் நாவளை ஒலியாக உள்ளது. 'நுனிநா அண்ணம்' என்ற தொடருக்கு 'நுனி நாவானது அண்ணத்தின் எப்பகுதியுடனாவது தொடர்பு கொள்வது' எனப் பொருள் கொண்டாலும்கூட நாவிளிம்பு அண்ணத்தைத் தொட டகர மெய் பிறப்பதாகவும், நுனிநா அண்ணத்தைத் தொடத் தகர மெய் பிறப்பதாகவும் தொல்

சு. வே. 1. வேறுபாடும்

காப்பியர் கூறும் வேற்றுமையை (Contrast) நன்கு வலியுறுத்திக் கூறவேண்டும். 'நுனியண்ண ஒலி'யான தகர மெய்யானது 'நுனிநா ஒலி' என்றும் 'நாவண்ண ஒலி' எனக் கருதப்படும் டகர மெய்யானது 'நாவிளிம்பு ஒலி' என்றும் முடிவு கூறலாம். ஆனால் பின்னர் இவ்விரு ஒலிகட்கு இடையேயான வேறு பாட்டைத் தெளிவாக்க டகர மெய்யானது நாவளை ஒலியாக வும் அண்ண முடியைத் தொடும் ஒலியாகவும் ஆனது. இது சமஸ்கிருதச் செல்வாக்கின் விளைவால் நிகழ்ந்ததாகவும் இருக்க லாம். —(தமிழ்மொழி வரலாறு. பக். 83, 84)

மேலனவற்றிற்கோர் புறனடை

92. அவ்வாறு எழுத்தும் மூவகைப் பிறப்பின. (10)

ஆ. மொ: இல.

Those six letters have different births in three different ways.

க. சு.

Those six sounds are produced in three (different) ways.

இளம்.

இது, மேலனவற்றிற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அ ஆறு எழுத்தும் மூவகை பிறப்பின—மேற்கூறப் பட்ட ஆறு எழுத்தும் நிரல்நிறை வகையான்(அறுவகைப் பிறப்பின அல்ல;) மூவகைப் பிறப்பின.

நச்.

இது மேலனவற்றிற்கோர் ஐயம் அகற்றியது.

(இ—ள்.) அக்கூறப்பட்ட ஆறு எழுத்தும் மூவகையாகிய பிறப்பினையுடைய; எ—று.

எனவே, அவை ககாரம் முதல் நாவினும் ஙகாரம் முதல் அண்ணத்தினும் பிறக்கும் என்று இவ்வாறே நிரனிறை வகை யான் அறு வகைப் பிறப்பின அல்ல என்றார்.

சுப்பிர.

இச்சூத்திரம் "மேலனவற்றிற்கு...நுதலிற்று" என இளம் பூரணரும், "மேலனவற்றிற்கோர் ஐயம் அகற்றியது" என

நச்சினார்க்கினியரும் கூறி, 'அவை நிரனிறை வகையான் அறு வகைப் பிறப்பின அல்ல' என இச்சூத்திரம் உணர்த்துகின்றது என இருவருங் கூறினர். வருஞ் சூத்திரங்களில், "நாநுனி அண்ணம் நண்ணிய பல் முதல் மருங்கின் ஒற்ற" எனவும், "நாநுனி அண்ணம் வருட" எனவும் ஆசிரியர் கூறியிருத்தலைக் காணின், நிரனிறை வகையாற் கொள்ளுதல் இயலாது எனப் பெறப்படுமாதலானும், "றஃகா னஃகா னாயிரண்டும்" "ரகார ழகாரமாயிரண்டும்" "லகார ளகார மாயிரண்டும்" என்ற விடத்து 'ஆயிரண்டும்' என்ற தொகைச் சொல்லையும் ஈண்டு 'அவ்வாறெழுத்து' என்ற தொகைச் சொல்லையும் நோக்கின், இந்நான்கு சூத்திரங்களையும் 'ககரஙகரம் சகரஞகரம் டகர ணகரம் ஆகிய ஆறெழுத்தும் முதனா வண்ணம் இடைநா வண்ணம் நுனிநா வண்ணம் ஆகிய மூன்று வகைப்பட்ட பிறப் பிடத்தையுடையன' என்ற பொருளைக் கொண்ட ஒரே சூத்திரமாக ஆசிரியர் கருதினர் என்னலாம். இவ்வாறு கூறா விடின், இச்சூத்திரம் வெற்றெனத் தொடுத்ததாகும். அவ்வாறு நான்கினையும் ஒரே சூத்திரமாகக் கொள்ளின் வாக்கியபேதம் என்ற குற்றம் வாராதோ எனின், 'அவ்வாறெழுத்தும்' என்ற ஒரே எழுவாயும் 'மூவகைப் பிறப்பின' என்ற ஒரே பயனிலையுங் கொண்டமையின் வாராதென்க.

வெள்ளை.

89, 90, 91 ஆகிய மூன்று சூத்திரங்களுக்கும் பொருள் கொள்ளுங்கால் ககரம் முதல் நாவிலும் ஙகரம் முதல் அண்ணத் திலும்; சகரம் இடைநாவிலும் ஞகரம் இடையண்ணத்திலும், டகரம் நுனிநாவிலும் ணகரம் நுனியண்ணத்திலும் பிறக்கும் என இவ்வாறு நிரல்நிறை வகையாற் கொண்டு இவற்றை அறு வகைப் பிறப்பினவாகக் கூறலாமோ என ஐயுறுவாரை நோக்கி, அம்மூன்று சூத்திரங்களிலும் கூறப்பட்ட ஆறெழுத்துக்களும் அறுவகைப் பிறப்பினையுடையன அல்ல; அவை மூவகைப் பிறப் பினையுடையனவே என இச்சூத்திரத்தால் ஆசிரியர் ஐய மகற்று கின்றார்.

....

கங இரண்டும் முதல்நா முதலண்ணத்தையும், சஞ இரண்டும் இடைநா இடையண்ணத்தையும், டண இரண்டும் நுனிநா நுனி யண்ணத்தையும் பொருந்தப் பிறக்கும் என மேற்கூறிய நான்கு சூத்திரங்களின் பொருளையும் நன்னூலாசிரியர்,

கஙவும் சஞவும் டணவும் முதலிடை
நுனிநா வண்ண முறமுறை வருமே (நன். 79)

என ஒரு சூத்திரத்தால் தொகுத்துக் கூறினார்.

க. முருகையன்

மூச்சுக் காற்றைப் பேச்சுக் குழலின் ஒரு பகுதியில் ஏதேனும் ஒரு இயங்குறுப்பைக் கொண்டு முழுவதும் தடைசெய்வதன் மூலம் பிறக்கும் ஒலியே தடையொலியாகும்.

இத்தடையால் அடைபடும் காற்று, தடைநீங்கிய வழி வாய் வழியே வெளியேறி வல்லொலிகளையும், தடை நீங்காவழி மூக்கறையின் வழியே வெளியேறி மூக்கொலிகளையும் பிறப்பிக் கின்றது.

முதல்நா (dorsum) இடைநா (Centre) நுனிநா (blade or tip) ஆகிய இயங்குறுப்புக்கள் எழுச்சிபெற்று முதலண்ணம் (soft palate) இடையண்ணம் (hard palate) அண்ணம் (dome) ஆகிய வற்றோடு இணைவதன் மூலம் ஏற்படும் காற்றறைகளைக் கொண்டு க்ங், ச்ஞ், ட்ண் என்பவை பிறக்கின்றன. ஒலியுறுப்புக் கள் தம்முள் இணைவதால் உண்டாகும் வாயறையில் அடை படும் மூச்சுக்காற்று (அழுத்த மிகுதியால்) அவ்வுறுப்புக்கள் திடீ ரென விலகுவதன் மூலம் வெடித்து வெவ்வேறு ஒலிகளை உண்டாக்குகின்றது.

ஒலியெழுப்பிகள் வன்மையாகவோ (tense), மென்மை யாகவோ (lex), இவ்விருவகையிலுமல்லாமல் சாதாரணமாகவோ (normal) தம்முள் இயைந்து ஒலிகளை எழுப்ப உதவுகின்றன. தொல்காப்பியர் க், ச், ட் என்னும் இம்மூன்று தடையொலி களுக்குப் பிறப்பாக்கம் கூறாவிடினும் ஏனைத் தடையொலி களாகிய த், ப், ற் ஆகியவற்றிற்கு விதந்து பிறப்பாக்கம் கூறி யுள்ளமையால், முதலில் கூறிய மூன்று தடையொலிகளுக்கும் சாதாரண இயைபே பிறப்பாக்கம் என்பதனை உய்த்துணர்ந்து கொள்ளலாம். வல்லொலிகளுக்கான இப்பிறப்பாக்கம் அவற் றோடொத்த மெல்லொலிகளுக்கும் பொருந்தும்
—(தொல்காப்பிய மொழியியல். பக் 38, 39)

த, ந

93. **அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்**
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம்இனிது பிறக்கும் தகார நகாரம்: (11)

ஆ. மொ: இல.

th and n̲ are easily born when the tip of tongue widens and touches the junction of the root of the upper teeth and the palated

க. சு.

t (and) ṇ they are easily produced by the tip of tongue spread out (its) body touching (and) striking the place adjacent to the teeth (where they) join the palated.

பி. இ. நூ.

நன். 80. அண்பல் அடிநா முடியுறத் தநவரும்.
இல. வி. 12. அண்பல் அடிநா முடியுறத் தநவும்...தோன்றும்.
முத்து 50. அண்பல் அடிநா முடியுறத் தநவரும்.
சுவாமி. 6. அண்பல் அடியதில் நாமுடியுறவாம் தந.
பேர. 69. அண்பல் அடிநா முடியுறத் தநவாம்.

இளம்.

இதுவும் மெய்களிற் சிலவற்றிற்குப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்—அண்ணத்தைப்[1] பொருந்திய பல்லினது[2] அணிய இடத்தின் கண்ணே, நா நுனி பரந்து மெய்உற ஒற்ற—நாவினது நுனி பரந்து வடிவை உறும்படி ஒற்ற, தாம் இனிது பிறக்கும்—தாம் இனிதாகப் பிறக்கும், தகாரம் நகாரம்—தகாரமும் நகாரமும்.

முன்னே 'உறுப்புற்றமைய' என்று வைத்துப் பின்னும் 'மெய்யுற' என்றதனான், எல்லா[3] எழுத்துக்களும் மெய்யுற்ற போதே இனிது பிறப்பது என்பது கொள்க.

நச்.

இது மெய்களுட் சிலவற்றிற்குப் பிறவி கூறுகின்றது.

(இ—ள்.) அண்ணத்தைச் சேர்ந்த பல்லினது அடியாகிய இடத்தே, நாவினது நுனி பரந்து சென்று தன் வடிவு மிகவும்

சு. வே. 1. பொருந்தின்
2. அடியாகிய
3. எழுத்துக்களுக்கும்

உறும்படி சேர, தகார நகாரம் என்றவைதாம் இனிதாகப் பிறக்கும்; எ—று.

த ந என இவற்றின் [4]வேறுபாடு உணர்க. முன்னர் உறுப் புற்று அமைய என்று கூறி ஈண்டு மெய்யுற ஒற்ற என்றார், சிறிது ஒற்றவும் வருடவும் பிறப்பன உளவாகலின்.

சுப்பிர.

(பொ—ள்.) அண்ணத்தை நெருங்கிய பற்களின் அடியிடத் தினை நாவின் நுனிப்பகுதி பரந்து நின்று தான் அதனோடு ஒன்றுபடுமாறு ஒற்றத் தகர நகரங்கள் பிறக்கும்.

தாம் என்ற சொல் கட்டுரைச்சுவைபட வந்தது எனக் கொள்ளல் தகும்.

பரந்து என்ற சொல்லைக் கூறாது 'மெய்யுற ஒற்ற' என்றே கூறின் லகரத்தை ஒலிக்கும்போது எவ்வாறு நாநுனி அண்பல் முதலினை ஒற்றுகின்றதோ அவ்வாறே தகர நகரங்களை ஒலிக்கும்போதும் ஒற்றும் எனக் கொள்ள வரும்; கொள்ளின், அஃது இயற்கைக்கு மாறாகும். ஆயின் பரந்து ஒற்ற எனக் கூறின் சாலும், 'மெய்யுற' எனல் வேண்டா எனின், அற்றன்று; மெய்யுற என்றது இல்லாவிடின் நாவின் நுனிப் பகுதி அண்பல் முதலோடு முழுமையும் ஒற்ற எனப் பொருள் கொள்ளுதல் இயலாது; அப்போது தகர நகரங்களை ஒலிக்கும்போது சிறிது காற்று வெளியிற் போகுமாறு உளது எனக் கொள்ளவரும். அஃதும் இயற்கைக்கு மாறாகும். ஆகலினன்றே லகரத்தின் பிறப்பினைக் கூறுமிடத்து, பரந்து மெய்யுற என்ற இரண்டு சொற்களையும் ஆசிரியர் வழங்காராயினர்? 'அண்ண நண்ணிய' என்ற அடைமொழியின் பயன் யாதெனின், 'பன்முதல்' என்றது கீழ்வாய்ப் பல்லின் அடியையும் குறிக்குமாகலின் அதனைத் தவிர்க்க என்க.

83-ஆவது சூத்திரத்திலுள்ள 'உறுப்புற்றமைய' என்றது 'மெய்யுற' என்றதின் பொருளைத் தாராமையான், "முன்னே உறுப்புற்றமைய......இனிது பிறப்பது என்பது கொள்க" என்ற இளம்பூரணர் கூற்றும், "முன்னர் உறப்புற்றமைய......பிறப்பன உளவாகலின்" என்ற நச்சினார்க்கினியர் கூற்றும் ஆராய்தற் பாலன. அன்றியும் மெய்யுறுதலானே இனிது பிறக்கும் என இளம்பூரணர் கூறியவாறு கொளின், மெய்யுறுத லின்றிப்

4. வேறுபாடும்

பிறக்கும் உயிர்களும் இடையெழுத்துக்களும் இனிது பிறக்கவில்லை என்று கொள்ளல் வேண்டும்; அஃது பொருந்தாக் கூற்றாம். கங, சஞ, டண இவையும், நாவின் ஒரு பகுதி அண்ணத்தின் ஒரு பகுதியோடு மெய்யுறுதலாற் பிறக்கின்றமையின் ஏன் அங்கு 'மெய்யுற' என்றதை ஆசிரியர் வழங்கவில்லையெனின், ஆங்கு முதல்நா வண்ணம் இடைநாவண்ணம், நுனிநாவண்ணம் எனத்தொகைச் சொல்லை வழங்கினமையானும், அவற்றிற்கு விரி, முதல்நாவோடு மெய்யுற்ற அண்ணம், இடைநாவோடு மெய்யுற்ற அண்ணம், நுனிநாவோடு மெய்யுற்ற அண்ணம் எனக் கூறல் அமையுமாகலானும் என்க. பகர மகரங்களும் இதழ்கள் ஒன்றுக்கொன்று மெய்யுற்றுப் பிறக்கின்றமையானும், வகரம் பல்லும் இதழும் மெய்யுற்றுப் பிறக்கின்றமையானும்

''இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்'' (எழுத். 97)
''பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்'' (எழுத். 98)

என்ற சூத்திரங்களில் ஏன் 'மெய்யுற' என்ற சொல்லை ஆசிரியர் வழங்கிலர் எனின், அச்சூத்திரங்களில் 'இயைந்து' 'இயைய' என்ற சொற்களுக்கு 'மெய்யுற்று', 'மெய்யுற' எனப் பொருளாகலின் என்க.

இளம்பூரணத்திலுள்ள, ''முன்னே உறுப்புற்றமைய...... பிறப்பதென்பது கொள்க'' என்ற தொடர் இடைச்செருகலாய் இருத்தலும் கூடும்.

வேங்கட.

பிறப்பிடம் நோக்கி முறைபடக் கூறல் வேண்டின், இச்சூத்திரம் ''அணரி நுனிநா'' என்னும் அடுத்த சூத்திரத்தின் முன்னர்க் கூறல் வேண்டும். அவ்வாறின்மையின், நெடுங்கணக்கு முறை நோக்கியே இதை இங்கு நிறுத்தினாராவர்.

''ஜிஹ்வாக்ரணே தவர்க்கே தந்தமூலேஷு'' (தைத். ப்ரா. 2:38) என்னும் சூத்திரந்தான் தநக்கள் பல்லினடியிற் பிறப்பன என்பது போதரும்.

பிறகுறிப்புகள்:

நுனிநா பரந்த நிலையில் (laminal) அண்ணத்தோடு ஒட்டிய மேல் வரிசை முன்பற்களின் உட்புற அடிப்பகுதியை (gingival) நன்கு அழுந்தி உறுவதால் த், ந் என்பவை பிறக்கின்றன— க. முருகையன் (தொல்காப்பிய மொழியியல். பக், 39)

இச்சூத்திரத்திற்குப் பல்லின் அடியில் தகாரமும், அதன் மருங்கில் நகாரமும் பிறக்கும் என நிரல்நிறை வகையால் பொருள்கொள்ளினும் பொருந்தும்"—வெள்ளைவாரணனார்.

ற, ன

94. அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும் (12)

ஆ. மொ: இல.

ṛ and n—these two are born when the tip of the tongue touches palate in a raised position.

க. சு.

ṛ and ṇ the two are produced when the tip of the tongue is raised and strikes the palate.

பி. இ. நூ.

நன்.	86.	அண்ணம் நுனிநா நனியுறிற் றனவரும்.
இல. வி.	12.	அண்ணம் நுனிநா ஒற்ற றனவும் தோன்றும்.
முத்து.	57.	அண்ணம் நுனிநா அழுத்த றன வரும்.
சுவாமி.	7.	நுனிநா அண்ணத்தின் வலிதுஒற்ற றனவாம்.
பேர.	76.	அணரி நுனிநா அணைய றன வரும்.

இளம்.

இதுவும் அது.

(இ—ள்.) அணரி நுனிநா அண்ணம் ஒற்ற—அணர்ந்து நுனிநா அண்ணத்தைச் சென்று ஒற்ற, றஃகான் னஃகான் அ இரண்டும் பிறக்கும்—றகர னகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும்.

இங்கு [1]நின்றும் நெடுங்கணக்கு முறைமை [2]விட்டும் நா அதிகாரம் பட்டது கண்டு கூறுகின்றதென வுணர்க.

நச்.

இதுவும் அது.

(இ—ள்.) நாவினது நுனி மேல்நோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவ, றகார னகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும்; எ—று.

சு. வே. 1. நின்று
2. வீட்டு

இது முதலாக நெடுங்கணக்கு முறையன்றி நாவதிகாரம் பற்றிக் கூறுகின்றார்.

ற ன என இவற்றின் வேறுபாடு உணர்க.

சுப்பிர.

(பொ—ள்.) நாவின் நுனி மேல்நோக்கிச் சென்று அண்ணத்தை ஒற்ற றகர னகரங்கள் இரண்டும் பிறக்கும். ஈண்டு நோக்கத் தக்கன இரண்டு உள. அவையாவன:—

(1) நகரத்தை ஒலிக்கும்போதுபோல னகரத்தை ஒலிக்கும் போது நாநுனி அண்ணத்தோடு மெய்யுறுதலின்று; பரந்து நிற்றலும் இன்று. (2) நகரம் பிறக்குமிடம் அண்பல் முதல், னகரம் பிறக்குமிடம் அதற்குப் பின்னர் உள்ள அண்ணம்.

இதற்கு முன்னர் உள்ள சூத்திரம் வரை நெடுங்கணக்கின் முறைப்படிக் கூறி, ஈண்டு பகர மகரத்தைக் கூறாது முறை மாற்றியதற்குக் காரணம் நா அதிகாரப்பட்டமையின் என உரைகாரர்கள் கூறினர். அஃதாவது ப, ம இவற்றை ஒலிக்கும் போது நாவிற்குச் செய்கை வெளிப்படையாய் இல்லாமை யானும், ற், ன், ர், ழ், ல், ள் இவற்றையும், க், ங், ச், ஞ், ட், ண், த், ந் இவற்றையும் ஒலிக்கும்போது நாவிற்குச் செய்கை வெளிப்படையாய் இருத்தலானும், த், ந் இவற்றைப் பற்றிக் கூறிய பின்னர் ற், ன் இவற்றைப் பற்றிக் கூறினர் என்னலாகும்.

தகர நகரங்களை ஒலிக்கும்போதுள்ள நாவின் தன்மை பெரும்பான்மையும் லகர ளகரங்களை ஒலிக்கும்போது இருத்த லானும், றகர னகரங்களை ஒலிக்கும்போது இல்லாமையானும், "அண்ண நண்ணிய" (எழுத். 93) என்ற சூத்திரத்திற்குப் பின்னர் "நாவிளிம்பு வீங்கி" (எழுத். 96) என்ற சூத்திரத்தை வையாது ஏன் இச்சூத்திரத்தைக் கூறினர் என்ற கடாவிற்கு விடை:— வல்லின மெல்லினங்கள் முறையே ஒரே இடத்திற் பிறத்தலானும், நாவதிகாரம் பற்றிப் பகர மகரத்தை ஈண்டுக் கூறாமையான் பகரத்திற்கு அடுத்த வல்லினம் றகரமும், மகரத் திற்கு அடுத்த மெல்லினம் னகரமும் ஆதலானும் இச்சூத்திரத்தை ஈண்டு ஆசிரியர் வைத்தனர் என்க.

வேங்கட.

வடமொழியில்,

"மூர்த்தந்யா: ப்ரதிவேஷ்ட்யாக்ரம்"

(சுக்லயஜுர். ப்ரா. 1:78)

என்றும்,

"ஜிஹ்வாக்ரேணப்ரதிவேஷ்ட்ய மூர்த்தநி டவர்க்கே"

(தைத். ப்ரா. 2:37)

என்றும் கூறியிருத்தலான், 'நாக்கின் நுனி மேல் நோக்கி வளைந்து மூர்த்தாவை (அண்ணத்தை)த் தொட டவர்க்கம் ஒலிக்கும்' எனத் தெரிகின்றது. அம்முயற்சியை இவ்வாசிரியர் றனக்கட்குக் கூறியுள்ளார். இதனால், றகாரம் வடமொழி டகார ஒலியையுடையது என்பது புலனாதல் கூடும்.

[1]றகார னகாரங்களின் பிறப்பிடம் [2]வர்த்ஸம் ஆகும். வர்த்ஸமாவது—தந்த மூலத்துக்கு மேலும் மூர்த்தத்திற்குக் கீழும் உள்ள இடம்.

இக்காலத்தில் றகாரம் இரட்டித்துவரும் இடங்களில் ஒருவாறாயும், னகாரத்தோடு சேர்ந்துவரும் இடங்களில் ஒருவாறாயும், தனியே நிற்கும் இடங்களில் ஒருவாறாயும் ஒலிக்கின்றது. தனியே நிற்கும் றகாரத்தைப் பெரும்பாலோர் ரகாரம்போல் ஒலிக்கின்றனர். இனி, எதுகை நியதியுள்ள செய்யுட்களில் எதுகைக் கண், நகார னகாரம் விரவி வருதலை நோக்கின், அவற்றின் ஒலிவேறுபாடும் கருதப்படாமை விளங்கும்.

றகாரம், டகாரம் பிறக்குமிடத்தை அடுத்துக் கீழ்ப் பிறப்பது. டகாரம் தனியே வருமிடங்களில் வல்லொலியின்றி (d என) நாத ஒலியில் ஒலித்தல் போன்று, றகாரம் தனியே வருமிடங்களில் வல்லொலியின்றி ஒலிப்பதாயிற்று. இக்காலத்தில், நகார னகாரங்கட்கும் ஒலிவேறுபாடு தோன்றுமாறு தமிழ் மக்கள் ஒலித்தல் இன்மையின், அவ்வெழுத்துக்கட்கு வரி வடிவிலன்றி ஒலி வடிவில் வேறுபாடு இல்லை[1] என்பார் உளராயினர். இதுபற்றிக் [2]கேரள பாணினீயத்தில் எழுதியிருப்பது ஈண்டு அறியத்தக்கது.

இக்காலத்தில் தமிழில் உச்சாரணம் மிக்க மோசமாயிருக்கின்றது. ந னக்கட்கும் ர றக்கட்கும் எழுத்திலல்லாமல்

1. கேரள பாணினீ, பீடிகை, பக். 77.
2. நன்னயாதர்வ. ப. 147.

உச்சாரணத்தில் ஒருபேதமும் காணவில்லை. அறிகையும் அரிகையும் எழுத்தினால் வேறே; தமிழில் உச்சரித்தால் ஒன்று தான். ந என்றும் ண என்றும் உள்ள எழுத்துக்களை எங்கே உபயோகிக்க வேண்டும் என்பதை இலக்கணங் கற்றவனே அறியக்கூடும், டாக்டர் கால்டுவெல்லும் ந ண க்கட்கு எழுத்தில் மாத்திரமே பேதம் உண்டு என்று ஒழிந்தார்.........தமிழின் நிலைமையை நோக்கும்பொழுது, மலையாளத்தில் உச்சாரண முறை மிக்க உயர்ந்த நிலைமையதாகும். நகாரத்திற்கும் ணகாரத்திற்கும் வெவ்வேறெழுத்துக்கள் (வரிவடிவு) இல்லையாயினும், மலையாளிகள் இரண்டொலிகளையும் வேண்டுமிடத்து வேறுபடுத்தி உச்சரிக்கின்றனர். ரகார றகாரங்கட்கு எழுத்துக்கள் (வரிவடிவுகள்) தனித்தனியே யிருத்தலின் சிறு குழந்தைகட்கும் உச்சாரணத்தில் தவறு வருவதில்லை.''

வெள்ளை.

(பொருள்) நாவினது நுனியானது மேல்நோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவ றகார னகாரமாகிய அவ்விரண்டெழுத்துகளும் பிறப்பன; எ—று.

அணர்தல்—மேல் நோக்குதல். அணர் என்பதன் அடியாகப் பிறந்த வினையெச்சம் அணரி என்பதாகும். அணர்ந்து பார்த்தல் என்பது மேல்நோக்கிப் பார்த்தல் என்னும் பொருளுடையதாகும். அச்சொல் இக்காலத்து அண்ணாந்து பார்த்தல் என மருவி வழங்குகிறது.

அண்ணத்தின் நடுவிடத்தே நாவினது நுனி பொருந்த றகரமும், அது பிறக்குமிடத்திற்குச் சிறிது கீழே னகரமும் பிறக்கும் என்பார் றகரத்தை முன்னரும் னகரத்தை அதன் பின்னரும் வைத்துரைத்தார் ஆசிரியர். இந்நுட்பத்தை உணர்ந்த நச்சினார்க்கினியர், 'ற, ன இவற்றின் வேறுபாடு உணர்க' என்ற தொடரில் இதனைப் புலப்படுத்தியுள்ளார்.

பி. கு.

நுனிநா குவிந்து கூரிய முனையோடு (apieal) அமைந்து நுனி அண்ணத்தை (alveolar) மென்மையாய்த்தொட ற், ன் என்ற இரு ஒலிகளும் பிறக்கின்றன—க. முருகையன். (தொல்காப்பிய மொழியியல் பக். 39)

1. கேரள பா. ப. 45
2. ஷை பீடிகை ப. 45.

சூத்திரத்தில் உள்ள ஒற்ற என்பதற்குத் 'தடவ' என வெள்ளை வாரணனார் பொருள் உரைத்தது பொருத்தமில்லை. "அண்ண நுனிநா நனியுறிற் றன வரும்" (நன். 86) என நன்னூலாரும் ஒற்ற என்பதற்கு 'நனியுறுதல' என்றே கொண்டார். அன்றியும் "அண்ணத்தின் நடுவிடத்தே நாவினது நுனி பொருந்த றகரம் பிறக்கும்" என அவரே எழுதியிருப்பதும் காணலாம். (ஒற்ற—பொருந்த—நன்றாகப் பொருந்த.)

"அண்ணத்தின் நடுவிடத்தே......புலப்படுத்தியுள்ளார்"

என்ற பகுதியில் நச்சினார்க்கினியர் கூற்றைக் காட்டியிருக்க வேண்டுவதில்லை. நச்சினார்க்கினியர் பிறவிடங்களிலும் ஒரே பிறப்பினவான எழுத்துக்களைக் காட்டி வேறுபாடு உணர்க என்றெழுதியுள்ளார்.

மேலும் றகரத்தை முன் வைத்ததற்குக் காரணம் வல்லெழுத்தாதலேயாம்.

ர, ழ

95. நுனிநா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும் (13)

ஆ. மொ: இல.

r and ḻ these two are born when the tip of the tongue embraces the roof of the mouth.

க. சு.

r and l the two are produced when the tip of the tongue is raised and rubs the palate.

பி. இ. நூ.

நன். 83. **அண்ணம் நுனிநா வருட ரழவரும்**
இல. வி. 12. **அண்ணம் நுனிநா வருட ரழவும்...தோன்றும்**
முத்து. 53. **அண்ணம் நுனிநா வருட ரழவரும்.**
சுவாமி. 7. **அண்ணம் நுனிநா வருட ரழவாம்**
பேர. 72. **அண்ணம் முடிநா வருடரழ வருவன**

இளம்.

இதுவும் அது

(இ—ள்.) நுனிநா அணரி அண்ணம் வருட—நுனிநா அணர்ந்து அண்ணத்தைத் தடவ, ரகாரம் ழகாரம் அ இரண்டும் பிறக்கும்—ரகார ழகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும்.

நச்.

இதுவும் அது.

(இ—ள்) நாவினது நுனி மேல்நோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவ ரகார ழகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும்; எ—று.

ர ழ என இவற்றின் வேறுபாடு உணர்க.

சுப்பிர.

(பொ—ள்,) நாவின் நுனி மேற்சென்று அண்ணத்தைத் தடவ ரகாரம் ழகாரம் ஆகிய இரண்டும் பிறக்கும். இவ்விரண்டிற்கும் றகார னகாரங்கட்கும் பிறப்பிடம் ஒன்றாயிருத்தலின், அவற்றின் பின்னர் இவற்றைக் கூறினர். றகர னகரங்கள், ரகர ழகரங்கள் இவை நான்கற்கும் பிறப்பிடம் ஒன்றாயிருப்பினும், முன்னிரண்டும் உண்டாம்போது நா நுனி அண்ணத்தை ஒற்றுகின்றது, பின்னிரண்டும் உண்டாம்போது அஃது அண்ணத்தைத தடவுகின்றது, ரகர ழகரங்கள் இரண்டும் உண்டாம்போது ஒன்றுக்கொன்று வேறுபாடு சிறிதே யாகலின், அதனைக் கூறாது விடுத்தனர் ஆசிரியர். அவ்வேறுபாடு யாதெனின், ரகரத்தை ஒலிக்கும்போது காற்றிற்கு வாயைவிட்டு வெளியிற் செல்ல எவ்வளவு இடன் இருக்கின்றதோ அவ்வளவு இடன் ழகரத்தை ஒலிக்கும்போது இல்லை. (ஆகலின் மொழிநூல் வல்லோர் ரகரத்தை Liquid என்றும் ழகரத்தை Frieative என்றும் கூறுவர்.)

வேங்கட.

ரகாரத்திற்கும் றகாரத்திற்கும் பிறப்பிடம் ஒன்றே; முயற்சியே வேறுபாடு. அஃதாவது, றகாரத்திற்கு நுனிநா அண்ணத்தை ஒற்றும்; ரகாரத்திற்கு நுனிநா அண்ணத்தை வருடும். ஒற்றுதலும் வருடுதலும் ஆகிய இவையே வேற்றுமை. ரகாரம் பிறக்குமிடத்தில் நன்கு ஒற்றின் றகாரம் பிறக்கும் என்று கன்னட மொழியிலும் கூறப்பட்டுள்ளது ஆகலின் இம்முயற்சி சரியாக நடைபெறுதல் இன்றேல் அவ்விரண்டொலியும் ஒரொலி போன்று கேட்கும்.

ஒற்றுதல் வருடுதல் என்னும் இவையே றகார ரகார வேற்றுமைக்குக் காரணமாய் இருப்ப, நச்சினார்க்கினியர் இவ்விரண்டு சொற்களுக்கும் தடவ என்னும் பொருளே கூறியது அமைதியன்று.

ஒற்றுதல்—நன்கு தாக்குதல்

வருடுதல்—பட்டும் படாமலும் வருமாறு தடவுதல். இவ்விரண்டு சொற்களும் தம்முட் பொருள் வேறுபாடுடையவாதலை 'நாவிளிம்பு வீங்கி......ஒற்றவும் வருடவும்......பிறக்கும்' (பிறப். 14) என்னுமிடத்தானும் அறியலாகும்.

க. முருகையன்

இயங்குறுப்பாகிய நாநுனி குறுகி மேலெழுந்து உள்நோக்கி வளைந்து பின் விரைந்து விழும்போது இயங்கா உறுப்பில் வேகமாக மோதுவதால் எழும் ஒலியே வருடொலியாகும்.

ர், ழ் ஆகியவற்றைத் தொல்காப்பியர் வருடொலிகள் என்று கூறினும் இவை தற்போது அவ்வாறு உச்சரிக்கப்படுவதில்லை. கூர்நாநுனி அண்ணம் நண்ணிய பல்லை ஒரு முறைக்கு மேல் அடித்தால் 'ர்' பிறக்கும். 'ழ்' ஒரு சிக்கலான ஒலி. கூர்நாநுனி இடையண்ணத்திற்கு நேராக மேலே எழுந்து உள்நோக்கி வளைவதோடு மற்ற இரு விளிம்பும் தடித்து உயர்ந்து கரண்டியைப்போல் உருப்பெற்று இயங்கா உறுப்போடு இணையாது இடம்விட்டு அமைந்து மூச்சுக்காற்றுத் தடையேதுமின்றி வாயின் நடு இடத்திலிருந்து சற்றுப்பக்கவாட்டில் தள்ளியமைந்த வழியின் மூலம் வெளியேறும்போது இது பிறக்கின்றது.

ல, ள

96. **நா விளிம்பு வீங்கி அண்பல் முதல்உற**
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும் (14)

ஆ. மொ: இல.

when the edge of the tongue having swelled and reaching the trunk of the teeth touches the palate l is born, and when it embraces it ḷ is born.

க. சு.

l and ḷ the two are produced by the edge of the tongue swelling and coming into contact with the place adjacent the teeth, so that (it respectively) strikes and rubs the palate at the place.

பி. இ. நூ.

நன். 84 **அண்பல் முதலும் அண்ணமும் முறையின்**
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

இல. வி. 12. அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லளவும்.........தோன்றும்.

முத்து 54. லகரம் அண்பலலடி நாவிளிம்புற வரும்
ளகரமேல் வாயை நாநுனி தடவப்
பிறக்கும் என்மனார் பெரிதுணர்ந் தோரே.

சுவாமி. 7. நம்பும் அண்பல் முதலை நாவிளிம்பு ஒற்ற லவ்வாம்,
நாவின் விளிம்பு அண்ணத்தை வருடவும் ளவ்வாம்.

பேர. 73. அண்பல் லடியை நாவிளிம் பொற்ற லவ்வரும்
74. அண்பல் முதலைநாத் தடவ ளவ்வரும்.

இளம்.

இதுவும் அது.

(இ—ள்.) நாவிளிம்பு வீங்கி பல் அண் முதல் உற—நாவினது விளிம்பு தடித்துப் பல்லினது அணிய [1]இடத்தைப் பொருந்த, அ வயின் அண்ணம் ஒற்ற லகாரமும் வருட ளகாரமும் அ இரண்டும் பிறக்கும்— அவ்விடத்து (முதல்நா) [2]அவ் வண்ணத்தை ஒற்ற லகாரமும் அதனைத் தடவ [3]ளகாரமுமாக அவ்விரண்டும் பிறக்கும்.

நச்.

இதுவும் அது.

(இ—ள்.) நாமேல் நோக்கிச் சென்று தன் விளிம்பு அண் பல்லின் அடியிலே உறாநிற்க அவ்விடத்து அவ்வண்ணத்தை அந்நாத் தீண்ட [4]லகாரமாயும், அவ்விடத்து அவ்வண்ணத்தை அந்நாத் தடவ [5]ளகாரமாயும் இவ்விரண்டெழுத்தும் பிறக்கும்; எ—று.

ல ள என இவற்றின் வேறுபாடு உணர்க.

இத்துணையும் நா அதிகாரம் கூறிற்று.

சு. வே. 1. இடத்துப் பொருந்தி
2. அண்ணத்தை
3. ளகாரமுமாகிய
4. லகாரமுமாய்
5. ளகாரமுமாம்

சுப்பிர.

ஆவயின் என்றதிலுள்ள அகரச்சுட்டு அண்பல் முதலைக் குறிக்கும். இச்சூத்திரத்திற்கு அந்நுவயம்

"நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல் உற ஒற்றவும்,
நாவிளிம்பு வீங்கி ஆவயின் அண்ணம் வருடவும்
லகார ளகார மாயிரண்டும் பிறக்கும்" என்றது,
"அண்பல் முதலும்......இரண்டும் பிறக்கும்" (நன். 84)

என்ற நன்னூற் சூத்திரத்தான் விளங்கும்.

நச்சினார்க்கினியர், "நாமேல் நோக்கி........பிறக்கும்" எனப் பொருள் கூறினர். ஈண்டு 'வீங்கி' என்ற சொல்லையும் 93-ஆவது சூத்திரத்தில் 'பரந்து' என்ற சொல்லையும் ஒரு பொருட் கிளவியாய்க் கொள்ளுதல் தகரலகரங்களை ஒலிக்கும் முறைக்கு ஒத்திருக்க, வீங்கி என்றதற்கு 'மேனோக்கிச் சென்று' எனப் பொருள் கொள்ளுதலும், நாவிளிம்பு என்றதைத் தொகை மொழியாகக் கொள்ளாது, நாவினை வீங்குதற்கு எழுவாயாக வும், 'விளிம்பினை' 'உற' என்றதற்கு எழுவாயாகவும் கொண்டதும் ஆராய்தற் பாலன. இளம்பூரணர் நச்சினார்க் கினியர் இருவரும் 'ஆவயின்' என்றதற்குப் பொருள் விளக்கமாய்க் கூறவில்லை. நன்னூலாரும் அதன் பொருளைத் தன் சூத்திரத்திற் குறிக்கவில்லை. தகர லகரங்களுக்கு முயற்சி வேறுபட்டிருப் பினும் பிறப்பிடம் ஒன்றாயிருத்தலின், இச்சூத்திரத்திலுள்ள 'நாவிளிம்பு' என்றதும் 'நாநுனி' என்றதும் ஒரு பொருட் கிளவியாய் இருத்தல் கூடும்.

இச்சூத்திரத்தை நோக்கின் ஆசிரியர் காலத்தில் ளகாரம் தற்போது போல் ஒலிக்கப்பட்டிலது எனத் தோற்றுகின்றது.

தற்போது ளகாரத்தை ஒலிக்கும்போது நாநுனி மேல் நோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவுகின்றது. ஆகலின் ழகர ளகரம் இரண்டும் மயங்குகின்றன. (பழம்—பளம்).

வேங்கட.

இச்சூத்திரத்திற்கு, "நாவினது விளிம்பு........ அவ்விரண்டும் பிறக்கும்" என இளம்பூரணரும், இதனையே விளக்கமாக, "நா மேல்நோக்கிச்.........இவ்விரண்டெழுத்தும் பிறக்கும்" என்று நச்சினார்க்கினியரும் உரை கூறினர். இவ்வுரைகளால் லகார ளகாரம் இரண்டற்கும் பிறப்பிடம் ஒன்றே எனவும் முயற்சி மாத்திரமே வேறுபாடு எனவும் போதரும். ஆகலின், லகாரத்

திற்கு இடம் அண்ணம் என்பது அவர்தம் கருத்தாகும். லகாரம் பல்லின் முதலிற் பிறப்பது என்பதுவே எல்லா நூலினாலும் அறியப்படுகின்றது.

இச்சூத்திரக் கருத்தை நன்னூலார்,

> **அண்பல் முதலும் அண்ணமும் முறையின்**
> **நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்**
> **லகார ளகார மாயிரண்டும் பிறக்கும்** (நன் 84)

என்று கூறினார். இதனால் லகாரம் அண்பல்லடியிற் பிறப்பது என்றே அவர் கொண்டமை தெளிவாகும். இலக்கண விளக்க நூலாரும் நன்னூலையே தழுவியுள்ளார். இவ்வாற்றால் தொல்காப்பியவுரையாளர் இருவர் உரையும் பொருந்தாமை போதரும்.

> **''தந்த மூலேஷு ச லகாரே''** (தைத். ப்ரா. 2 : 42)

என்பதும்,

> **''(இ)லுது லஸாநாம் தந்தா''** (ஸித்தாந்த கௌமுதீ சூ. 10. உரை)

என்பதும்,

> **''ஸகாரரேப லகாரா ஸச''** (ருக்வேத; ப்ராதி, படலம். 1)

என்பதும்,

> **''(இ)லுலஸிதா தந்தே''** (ஸுக்ல யஜுர். 69)

என்பதும் காண்க.

வெள்ளை.

விளிம்பு—ஓரம். வீங்குதல்—முன் மெல்லியதாய் இருந்த நாவின் ஓரம் மேல்நோக்கி வளைந்து நிற்கும்போது நாவின் மற்றையிடத்திலுள்ள தசைகளும் சேர்ந்து சிறிது பருத்து நிற்றல். இவ்வாறு தடித்த நாவிளிம்பு அண்ணத்திற்கும் பல்லினது அடிக்கும் இடைப்பட்டு நிற்றல் லகார ளகாரமாகிய அவ்விரண்டற்கும் பொருந்த 'நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல்உற' என அச்செயலை முதலிற் பிரித்துக் கூறினார். அவ்விரண்டற்குந் தனித்தனி வேண்டப்படும் சிறப்புத் தொழில்களாகிய ஒற்றுதலையும் வருடுதலையும் முறையே லகரத்திற்கும் ளகரத்திற்கும் உரியனவாக நிரல்நிறையாற் கூறினார்.

இதன் பொருளை நன்கு அறிந்த பவணந்தி முனிவர், ''அண்பல் முதலும்......பிறக்கும்'' (நன். 84) எனச் சூத்திரம் செய்தார். இதனால் அண்பல் முதலை நாவிளிம்பு வீங்கி ஒற்ற

லகாரம் பிறக்கும் எனவும், அண்ணத்தை நாவிளிம்பு வீங்கி வருட ளகாரம் பிறக்கும் எனவும் பொருள் இனிது விளங்குதல் காண்க.

க. முருகையன்

ல், ள் ஆகிய இரண்டும் மருங்கொலிகள். பேச்சுக் குழலின் நடுஇடம் அடைபட்டு மூச்சுக் காற்று வாயின் இருமருங்கிலும் வெளியேறும்போது மருங்கொலிகள் பிறக்கின்றன. இவ்விரு ஒலிகளின் பிறப்பாக்கத்தையும் கூறவந்த தொல்காப்பியர் 'நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற' என்று மருங்கொலி முயற்சி அமைப்பைக் குறிப்பிடுகின்றார். 'ஆவயின் அண்ணம்' என்று இயங்கா உறுப்பையும் 'ஒற்றவும் வருடவும்' என்று இயங்குறுப்பின் தொழிலையும் குறிப்பிட்டுள்ளார். இவற்றால் இயங்கு உறுப்பு நா நுனி என்பதும், நாவிளிம்பு என்று இங்குக் கூறியது நாவினுடைய பக்க விளிம்பு என்பதும், 'அண்பல் முதல்' என்றது உள்ளீற்றோடு கூடிய மேல்கடை வாய்ப் பற்களை ஒட்டியமைந்த இடம் என்பதும் தெளிவாகின்றன. இம்முறையில் நாவிளிம்பு வீங்கி (தடித்து) அண்பல் முதலை யுற்று நுனிநா அண்ணத்துடன் இயைந்து தொழிற்படுவதால் பேச்சுக்குழலின் நடுஇடம் அடைபட்டு இருமருங்கிலும் இடைவெளி ஒதுங்குவதை உணரலாம். உள்ளிருந்து வரும் மூச்சுக் காற்று, இரு ஓரங்களிலும் உள்ள இடைவெளி வழியாக வெளியேறி ல், ள் என்ற மருங்கொலிகள் பிறக்க வழி செய்கின்றது. 'ஒற்றவும் வருடவும்' என்றதனால் 'ல்' மென்மையான இயைபினால் பிறக்கின்றது என்பதும், 'ள்' நுனிநா மேலெழுந்து உள்நோக்கி வளைந்து பிறகு விரைந்து அண்ணத்தைத் தட்டிக்கொண்டு விழும்போது உண்டாகும் ஒலி என்பதும் அறியக் கிடக்கின்றன.

(தொல்காப்பிய மொழியியல் பக் 41)

ப, ம

97. இதழ்இயைந்து பிறக்கும் பகார மகாரம் (15)

ஆ. மொ: இல.

p and m are born when the lips meet.

க. சு.

p (and) m are produced by the contact of the lips.

பி. இ. நூ.

நன்.	81.	மீகீழ் இதழ்உறப் பம்மப் பிறக்கும்
இல. வி.	12.	மீகீழ் இதழ்உறப் பகார மகாரம்...தோன்றும்
முத்து.	48.	இரண்டிதழ்உறப் பம எழும் என மொழிப.
சுவாமி.	6.	மீகீழ் இதழ்உறவாம் பமவே.
பேர.	70.	இரண்டிதழ் பொருந்தப் பகரமகரம் வரும்.

இளம்.

இதுவும் அது.

(இ—ள்.) இதழ் இயைந்து பிறக்கும் பகாரம் மகாரம்—[1]கீழ் இதழும் மேல்இதழும் தம்மில் இயையப் பிறக்கும் பகாரமும் மகாரமும்.

நச்.

இதுவும் அது.

(இ—ள்.) மேலிதழும் கீழ் இதழும் தம்மிற்கூடப் பகாரமும் மகாரமும் பிறக்கும்; எ—று.

ப ம என இவற்றின் வேறுபாடு உணர்க.

சுப்பிர.

(பொ—ள்.) பகர மகரங்கள் இதழ்களை மெய்யுறச் செய்து பிறக்கும்.

'இயைந்து' என்றதை 'இயைய' என்ற வாய்ப்பாடாகத் திரித்துக்கொண்டனர் உரைகாரர்கள். அவ்வாறு கூறியதற்குக் காரணம் முன்னர் உள்ள சூத்திரங்களில் செயவென் வாய்பாட்டிலே உற, வருட, ஒற்ற முதலிய எச்சங்கள் வந்திருத்தலான் என்னலாம். வினைகள் உருவத்தில் தன்வினையாகவும் பொருளில் பிறவினையாகவும் மிகுதியாகப் பண்டை யிலக்கியங்களில் வருதலின் 'இயைந்து' என்றதற்கு 'இயைச் செய்து' என்ற பொருள் கூறலாம் எனவும், 'இதழ்' என்றதை இரண்டாம் வேற்றுமையாகக் கொள்ளலாம் எனவும் தோற்றுகின்றது.

பி.கு.

இயைந்து என்பதை இயைய எனத் திரித்ததை உடன்படாத சுப்பிரமணிய சாஸ்திரியார் 'இயைந்து' என்ற தன்வினையை அப்படியே கொள்ள முடியாமல் இயையச் செய்து (இயைவித்து)

சு. வே: 1. இதழும்

எனப் பிறவினையாகக் கொள்வர். சொல் இருந்தவாறே பொருள் உணர்த்தவில்லையென்பது இவர்க்கும் உடன்பாடே. அதனால் உரைகாரர்கள் 'இயைய' எனக் கொண்டதற்கு இவர் உரைத்த காரணமே கொண்டு 'இயைய' என்பதே சாலும் என்னலாம். அடுத்த நூற்பாவில் 'இயைய' என்ற சொல்லே ஆசிரியரால் ஆளப்பட்டுள்ளது. —சிவலிங்கனார்.

வ

98. பல்இதழ் இயைய வகாரம் பிறக்கும்

ஆ. மொ: இல.

V is born when the upper teeth and lower lip meet together.

க. சு.

V is produced by the contact of the teeth and lips.

பி. இ. நூ.

நன். 85. **மேற்பல் இதழ்உற மேவிடும் வவ்வே.**
இல. வி. 12. **மேற்பல் இதழ்உற வகாரமும்...தோன்றும்.**
முத்து. 58. **மேற்பல் இதழ்உற மேவிடும் வவ்வே.**
சுவாமி. 7. **மேற்பல் வம்பில் இதழ்குற்ற வவ்வாம்.**
பேர. 75. **மேற்பல்லை இதழ்உற மேவும் வகரமே.**

இளம்.

இதுவும் அது •

(இ—ள்.) பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும்—மேற்பல்லும் கீழ்இதழும் தம்மில் இயைய வகாரம் பிறக்கும்.

நச்.

இது வகாரம் பிறக்குமாறு கூறுகின்றது.

(இ—ள்) மேற்பல்லும் கீழ்உதடும்கூட வகாரமானது பிறக்கும்; எ—று.

வ எனவரும். இதற்கும் இதழ் இயைதலின் மகரத்தின் பின்னர் வைத்தார்.

க. முருகையன்

கீழ்இதழ் மேற்பல்லோடு நெருங்கிச் சிறு இடைவெளி விட்டமையும்போது இவ்வமைப்பிற்குப் பின்னால் வாயறையில்

வந்து சேரும் மூச்சுக் காற்று இச்சிறு வழியின் மூலம் அடைத்துக் கொண்டு உராய்வுடன் செல்லும்போது 'வ்' பிறக்கின்றது.

'வ்'வின் பிறப்பாக்கத்தைப் பற்றிய முழு விவரமும் பெற இவ்வொலி பற்றி விளக்கும் நூற்பாவோடு 99, 4, 42, 54, 55, 56* ஆகிய நூற்பாக்களையும் இணைத்துப் பார்க்க வேண்டும். அகர உயிரும் வகர மெய்யும் சேர்ந்த 'அவ்' என்னும் தொகுப்பு ஔகாரத்திற்கான மாற்றுரு என்பதை 56 ஆவது நூற்பாவிலிருந்து உய்த்துணரலாம். இக் கருத்தை மேலே சொல்லப் பட்ட நூற்பாக்களின் கருத்துகளோடு ஒப்பிடும்போது வகர மெய்யும் ஒரு உரசொலியே என்பது தெளிவாக விளங்குகிறது. தொல்காப்பியர், வகரத்தைவிட தமிழ்மொழியில் பெரும் பான்மையாகப் பயின்று வரும் யகர மெய்க்கு முயற்சி கூறும் போது, அஃது ஓர் உரசொலி என்பதைப் பெற வைத்து விடுகிறார். யகரம்போல் வகரமும் ஓர் உரசொலியே என்று நாம் முன்னர்க் கூறியதிலிருந்து அவர் யகர (உரசு) ஒலிக்கு முயற்சியாகக் கூறுவதையே இதற்கும் முயற்சியாகக் கொள்ள வேண்டும் என்பது பெறப்படும்.

ஒலியெழுப்பிகள் தம்முள் இயைந்து உயரப்போக்கிலோ (Vertical) படுக்கைப் போக்கிலோ (Horizontal) மிகவும் குறுகிய இடைவெளியை உண்டாக்கும்போது அதன் வழியே அடைபட்ட மூச்சுக் காற்று பிழியப்படுவது போல உரசிக்கொண்டு செல்லும் போது உரசொலிகள் உண்டாகின்றன. தமிழில் 'ய்' 'வ்' என்ற இவ்விரு ஒலிகளும் ஒலியெழுப்பிகளின் படுக்கைப்போக்கில் அமைந்த இடைவெளியின் மூலம் பிறப்பவை. இவை ஒலி நூல் களில் பொதுவாகக் கூறப்படும் உரசொலிகளைவிட உராய்வு குறைந்தவை. இவ்வகை உரசொலிகளைப் பிறப்பாக்கத்தால்

---

* 99. அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்.

4. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும்
அப்பாலேழும்
ஈரளபிசைக்கும் நெட்டெழுத் தென்ப.

42. ஐ ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும்.

54. அகர இகரம் ஐகார மாகும்.

55. அகர உகரம் ஔகார மாகும்.

56. அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.

சிறிதளவு உராய்வுடைய உயிரொலிகள் என்னும் பொருள்பட உயிர்ப்போலிகள் என்று ஒலிநூலார் கூறுவர்.

தெ. பொ. மீ.

அவ்வை—ஔவை
தவ்வை—தௌவை
நவ்வி—நௌவி
பவ்வம்—பௌவம்
மவ்வல்—மௌவல்
வவ்வல்—வௌவல்

இச்சொற்களில் உள்ள வகர மெய்யானது தொல்காப்பியர் காலத்தில் பல்லிதழ் ஒலியாக இருந்திருக்க முடியாது என்பதன் விளைவே இதுவாகலாம் (அவ்—ஔ ஒற்றுமை)

எல்லா வகரமெய்களும் பல்லிதழ் ஒலியாக இருக்கவேண்டும் என அவர் விரும்பியதால், இந்த ஈரிதழ் வகரமெய்யை அவர் உகரத்துடன் ஒன்றாக்கிக் காண விழைகிறார் என்றே கொள்ள வேண்டும். எனவே வகரமெய் முதலில் ஈரிதழ் ஒலியாக இருந்து பின்னர் பல்லிதழ் ஒலியாக ஆகியிருக்க வேண்டும் என நாம் உய்த்துணரலாம். இருந்த போதிலும் மேலே கட்டப் பட்டதுபோன்று சில இடங்களில் முதலசையில வகரமெய் வருகையில் அது தொடர்ந்து ஈரிதழ் ஒலியாகவே இருப்பதைக் காணலாம்—(தமிழ் மொழிவரலாறு. பக். 96)

**99. அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும். (17)**

ஆ. மொ: இல.

y is born with the air from the throat brushes against the palate.

க. சு.

y is produced when the air arising in the throat reaches the palate (and) the place is choked up

பி. இ. நூ.

நன்.	82.	**அடிநா அடிஅணம் உறயத் தோன்றும்**
இல. வி.	12.	**அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை கண்ணுற் றடைய யகரமும்...தோன்றும்**
முத்து.	52.	**அடிநா அடியணம் உற வரும் யகாரம்.**

சுவாமி. 7. **பம்பும் அண்ணக் குழிசேர்ந்த மிடற்றுக்கால் பற்ற யவ்வாம்.**

பேர. 71. **முதல்நா முதலண முயற்சியின் யவ்வரும்.**

இளம்.

இதுவும் அது.

(இ—ள்.) அண்ணம் சேர்ந்த மிடற்று எழுவளி இசை கண் உற்று அடைய யகாரம் பிறக்கும்—அண்ணத்தை நாச் சேர்ந்த மிடற்றினின்றும் எழும் வளியானாய இசை அவ்வண்ணத்தை அணந்து செறிய யகாரம் பிறக்கும்.

நச்.

இது யகாரம் பிறக்குமாறு கூறுகின்றது.

(இ—ள்) உந்தியில் எழுந்த காற்று மிடற்றிடத்துச் சேர்ந்த அதனாற் பிறந்த ஓசை, அண்ணத்தை அணைந்து உரலாணி யிட்டாற்போலச் செறிய யகார ஒற்றுப் பிறக்கும்; எ—று.

ஆணி—மரம். ய என வரும்.

சுப்பிர.

(பொ—ள்) அண்ணத்தோடு பொருந்திய கழுத்தினின்றும் எழுகின்ற வளியானாகிய ஓசை முன்புறத்தை அடைய யகாரம் பிறக்கும்.

கண் என்றது முன்புறம் என்ற பொருளில் "கண்ணின்றிரப் பவர்" (குறள் 1058) முதலிய இடங்களில் வழங்கப்பட்டிருத் தலின், ஈண்டும் அப்பொருளிலே ஆசிரியர் வழங்கினரோ என்பது என் எண்ணம்.

அண்ணஞ் சேர்ந்த என்றதற்கு, அண்ணத்தை நாச் சேர்ந்த (விடத்து) எனப் பொருள் கூறினர் இளம்பூணர். நச்சினார்க்கினியர் "எழுவளி மிடற்றுச் சேர்ந்த இசை அண்ணம் கண்ணுற்றடைய யகாரம் பிறக்கும்" எனச் சூத்திரத் திற்கு அந்நுவயம் கொண்டனர். நாவின் அதிகாரம் இன்மை யான் இளம்பூரணர் கூற்றும், மிடற்றெழு வளியிசை என்பதை முறை மாற்றக் கூறுதல் பொருத்தம் இன்மையின் நச்சினார்கினி யர் கூற்றும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

வேங்கட.

அண்ணம் சேர்ந்த இசை உற்று அடைய என இயைக்க. அண்ணஞ் சேர்ந்த இசை, மிடற்றெழுவளி இசை எனத் தனித் தனியே கூட்டுக. நச்சினார்க்கினியர், வேண்டியவாறே பிரித்து மாற்றிக் கூட்டியது முறையன்று.

தைத்ரீய ப்ராதிசாக்யத்தில்,

''தாலௌ ஜிஹ்வா மத்யாந்தப்யாம் யகாரே'' (2:40)

நடுநாக்கின் விளிம்பு தாலுக்களில் படுதலால் யகரம் தோன்று கின்றது என்று கூறப்பட்டுள்ளது. அன்றியும், 'இசுய சாநரும் (ஸத். கௌமுதீ சூ. 10. உரை) என்பது சித்தாந்த கௌமுதியில் காண்கின்றது.

''அடிநா அடியணம் உறயத் தோன்றும்'' (நன் எழுத் 27)

என்றது அமைதியாதல் இன்று. இதனை இலக்கண விளக்க நூலார்,

''அடிநா அடியணம் உறயத் தோன்றும் என்றார்;
அதன் இயல்பு உணராமை; மெய் பொய் எனக்
கூறிக்காண்க''

என்று மறுத்துள்ளார். பிறமொழிகளிலும் யகாரம் தாலவ்யம் எனவே கூறப்பட்டிருத்தல் அறியத் தக்கது. நன்னூலார் கொள்கையின்படி யகரம் கண்டயம் ஆகும். அங்குப் பிறக்கும் ஒலி ஒருவகையான கனைப்புப் போறலின் யகார எழுத்தாகக் கொள்ளப்படாமை ஓர்ந்துணரத் தகும்.

தெ. பொ. மீ.

தொல்காப்பியருக்கு முற்பட்ட காலத் தமிழில் உயிரொலி மயக்கங்கள் மிகுதியாக வழங்கி வந்தன என்பது தெளிவு. தொல்காப்பியருக்கு முற்பட்ட காலத் தமிழில் யகர மெய் ஒலியனா என்பதை ஆராயலாம். ஓரசைவேரின் ஈற்றில் உள்ள யகர மெய் இகர உயிரின் மாற்றொலியாகக் கருதப்படுகின்றது. தொல்காப்பியத்தின்படி யகர மெய் ஆகாரத்துடனேயே மொழி முதலில் வரும். பர்ரோ குறிப்பிடுவதுபோல 'யா'வை 'இ+ஆ' எனப் பிரித்தால், யகரமெய் ஒலியனாக இருக்கத் தேவையில்லை. சில சமயங்களில் வேர்கள் ஓரசைக்கு மேற்பட்டவையாய் இருக்குமாயின் உயிர்கட்கு நடுவில் வரும் சகர மெய் மறைந்து இகரம் தோன்றுகிறது. இந்த இகரமெய் பின்னர் யகர மெய்யாகிறது. இங்கு சகர மெய் இழப்புற்றது எனக் கூறலாம். பசி - பை. சான்று : பைங்கிளி.

—(தமிழ்மொழி வரலாறு. பக். 93, 94.)

க. முருகையன்

'ய்' ஓர் உரசொலியாகும். ஆனால் இது உயிரொலித் தன்மையைக் கொண்ட ஓர் உயிர்ப் போலியாகும் இது தமிழ் மொழியில் ஓர் அசையில் உயிராக அமைந்து விளங்குகின்றது.

'இ' மிடற்றெழுவளியிசையால் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இந்த அசையில் உயிர் மொழியில் பயின்று வரும் போது மெய்யொலிகளைப் போன்று செயல்படுவதால் தொல்காப்பியர் இதனை மெய்யெழுத்துக்களுடன் சேர்த்துள்ளார்.

மிடற்றில் குரல்வளை மடல்களின் அதிர்வால் பிறக்கும் குரல் ஒலியோடு கூடிய மூச்சுக் காற்று, நா நுனி அண்ணம் நண்ணிய கீழ் முன்பல்லை உற்றிருக்க, நுனிநா உயர்ந்து மேல் நுனி அண்ணத்தோடு நெருங்குவதால் உண்டாகும் வாயறையில் செறிய, தடைப்பட்ட காற்றில் அழுத்தம் மிகுந்து, இயங்குறுப்பிற்கும் இயங்கா உறுப்பிற்கும் இடைப்பட்ட குறுகிய வழியில் உரலாணி இட்டாற்போலச் செறிந்து அடைத்து உரசிக்கொண்டு வெளிப்படுகின்றது. இவ்வகை முயற்சியால் பிறக்கும் ஒலியே யகர மெய்யாகும்.

மேலே கூறிய ஒலியெழுப்பிகள் அதிக அளவு இடைவெளி விட்டு இயையும்போது இகர அசை உயிர் பிறப்பதால் அதே இடத்தில் உராய்வோடு பிறக்கும் யகர மெய்யை இகர உயிரோடொத்த அசையில் உயிர் என்று கூறலாம்.

மெல்லின மெய்களின் பிறப்புக்கு ஒரு சிறப்பு விதி

100. மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும். (18)

ஆ. மொ: இல.

Though the six soft consonants have their birth in the places noted above, the air passing througth the nose gives them shape.

க. சு.

Though the six soft (=Nasal) sounds have (their) places of articulation in the regions discussed (above), the air of the nose appears to give them shape.

பி. இ. நூ.

நன். 75 **மேவும் மென்மை மூக்கு.**

இல. வி. 10. **மென்மை மூக்கிசையிற் றோன்றும்.**

தொன். 3. **உச்சி மெலி யியை முதல்இடம்.**

முத்து. 43. **உச்சி மெலி இடமாம்.**
சுவாமி 6. **மெலி மூக்கு**
பேர. 62. **மேவும்......மெல்லினம் மூக்கே.**

இளம்.

இது, மெல்லெழுத்திற்கு ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம் சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்— மெல்லெழுத்துக்கள் ஆறும் [1]தத்தம் பிறப்பினது ஆக்கம் மேற் [2]சொல்லப்பட்ட இடத்தே நிலை பெற்றன ஆயினும், மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்— அவை மூக்கின்கண் உளதாகிய [3]வளியது இசையான் யாப்புறத் தோன்றும்.

'யாப்புற' என்றதனான், இடையெழுத்திற்கு மிடற்று வளியும், வல்லெழுத்திற்குத் தலை வளியும் கொள்க.

நச்.

இது மெல்லெழுத்திற்குச் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ—ள்.) மெல்லெழுத்துக்கள் ஆறும் தத்தம் பிறப்பினது ஆக்கம் சொல்லிய இடத்தே நிலைபெற்றன ஆயினும், ஓசை கூறுங்கால் மூக்கின்கண் உளதாகிய வளியின் இசையான் யாப்புறத் தோன்றும்; எ—று.

அவை அங்ஙனமாதல் கூறிக் காண்க. 'யாப்புற' என்றதனான் இடையினத்திற்கு மிடற்று வளியும் வல்லினத்திற்குத் தலை வளியும் கொள்க.

சுப்பிர.

(பொ—ள்.) ஆறு மெல்லெழுத்துக்களும் தம் பிறப்பு சொல்லப்பட்ட இடங்களில் நிலைபெற்றாலும், மூக்கின் வழியாகச் செல்லும் காற்றினிசையோடு பொருந்தித் தோன்றும்.

மூக்கின் வளியிசை என்றதற்கு 'மூக்கின் வளியிசையான்' எனப் பொருள் கொண்டு 'யாப்புற' என்றதை மிகையாகக் கருதி, அம்மிகைக்குக் கருத்தாக 'இடையெழுத்திற்கு மிடற்று வளியும் வல்லெழுத்திற்குத் தலை வளியும் கொள்க' எனக் கூறினர் உரைகாரர்கள். மெல்லெழுத்துக்களை ஒலிக்கும்போது

சு. வே. 1. தம்
2. சொல்லிய
3. வளியிசை

வளியின் ஒரு பகுதி வாய்வழியாகவும் ஒரு பகுதி மூக்குவழியாக வும் செல்லுகின்றமையான் 'மூக்கின் வளியிசை' என்றதற்கு 'மூக்கின் வளியிசையோடு' எனவும், 'யாப்புற' என்றதற்குப் 'பொருந்த' எனவும் பொருள் கொள்ளின் 'யாப்புற' என்றது மிகையாகாது.

வெள்ளை.

மெல்லெழுத்தாறுக்கும் மேல் தனித்தனியே கூறப்பட்ட நிலைக்களங்களே பிறப்பிடங்களாமெனவும் அவையாறும் மூக்கு வளியால் ஒலிக்கும் எனவும் தொல்காப்பியனார் பிரித்துச் கூறி யுள்ளார். அங்ஙனமாகவும் பவணந்தியார் தொல்காப்பியனார் கருத்துக்கு மாறாக மெல்லெழுத்தாறுக்கும் மூக்கையிடமாகக் கூறியிருப்பது ஆராயத்தக்கதாகும்.

சோ. ந. கந்தசாமி

இடையெழுத்துகளில் ஒன்றாகிய யகரம் மிடற்றுவளியால் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறியதாலும், இடையினத்தில் உயிர்த்தன்மை (Semi vowels) இருத்தலானும், உயிர்களைப் போலவே இடையினமும் மிடற்றுவளியால் பிறக்கும் என்று இளம்பூரணர் எண்ணியது ஏற்றம் உடைய கருத்தே.

பவணந்தியார் வல்லினம் நெஞ்சுவளியால் பிறக்கும் என்று கருதினார். "ஆவி யிடைமை யிடம்மிடறு ஆகும், மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை" என்று நூற்பா யாத்தார். நன்னூலார்க்கு நூறாண்டுகட்கு முற்பட்ட பெருந் தேவனார், "உரத்தை வல்லினமும், சிரத்தை ஆய்தமும் கண்டத்தை உயிரும் இடையினமும் மூக்கை மெல்லினமும் பொருந்தும் எனக் கொள்க" என்று வீரசோழிய உரையில் (8) எழுதியிருத்தல் காண்க. எனவே இவரைப் பின்பற்றி நன்னூலார் நூற்பா எழுதியிருக்கலாம். (தொல்காப்பியத் தெளிவு பக். 97, 98) அபிராமி பதிப்பகம் அண்ணாமலை நகர் (197 ,)

சார்பெழுத்துகள் பிறக்குமாறு

101. **சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்பிலவெனத்**
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியில் தம்மியல்பு இயலும் (19)

ஆ. மொ: இல.

Those three which are said to have no separate (indipendent) existence have their birth along with their own primary sounds and maintain their nature as their own.

க. சு.

The three which are revealed by research as such as to be said not to have their own nature with out accurring as dependent, resemble in production their respective support (ing sounds) and maintain their nature (as their own) nature, being alike in appearance.

பி. இ. நூ.

நன். 87. ஆய்தக்கு இடம்தலை; அங்கா முயற்சி
சார்பெழுத்து ஏனயம் தம்முதல் அனைய.

இல. வி 13. ஆய்தம் நெஞ்சுஓசையின் அங்காந்து இயலும்
சார்பெழுத்து ஏனவும் தம்முதல் அனைய.

முத்து. 58. உந்தி தனிநிலை உற்று அங்காந் தியலும்.

சுவாமி. 8. நெஞ்சு ஒலியான் அங்காந்தியன்று குறிற்கீழ் வரும்
உயிர்ச் சார் வலிமேல் ஒற்றியல்போல்
ஆய்தப் புள்ளி.

பேர. 78. தலைமை யக்கரம் போற் சார்பெழுத் துற்பவம்.

இளம்.

இது, சார்பிற் றோற்றத்து எழுத்திற்குப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்பு இல எனத் தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்—சிலவற்றைச் சார்ந்து[1]வரின் அல்லது தமக்குத் தாமே வரும் இயல்பு இலவென்று ஆராய்ந்து [2]வெளிப்படுத்தப்பட்ட ஒழிந்த மூன்றும், தம்தம் சார்பின் பிறப்பொடு சிவணி ஒத்த காட்சியில் தம் இயல்பு இயலும்—தத்தமக்குச் சார்பாகிய எழுத்துக்களது பிறப்பிடத்தே பிறத்தலொடு [3]பொருந்தி அவ்விடத்தே தமக்குரிய [4]இயல்பில் நடக்கும்.

சு. வே: 1. *வருதல்*
2. *வெளிப்படுக்கப்பட்ட*
3, *பொருந்திப் பொருந்தின*
4. *இயல்பு*

'ஒத்தகாட்சி' என்றதனான், ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச் சார்பே எனினும் தலைவளியாற் பிறத்தலின், உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கும் என்பது கொள்க. 'தம்மியலபியலும்', என்றதனான், அளபெடையும் உயிர்மெய்யும் தமக்கு அடியாகிய எழுத்துக்களது பிறப்பிடமே இடமாக வரும் என்பது கொள்க

நச்.

இது சார்பிற் றோற்றங்கள் பிறக்குமாறு கூறுகின்றது.

(இ—ள்.) சில எழுத்துக்களைச் சார்ந்து தோன்றினல்லது தமக்கெனத் தோன்றுதற்கு ஓர் இயைபுஇல என்று ஆராய்ந்து வெளிப்படுக்கப்பட்ட எழுத்துக்கள் தம்முடைய பிறப்பியல்பு மூன்றனையும் கூறுங்கால், தத்தமக்கு உரிய சார்பாகிய மெய்களது சிறப்புப் பிறப்பிடத்தே பிறத்தலோடு பொருந்தி நடக்கும்; ஒழிந்த ஆய்தந் தமக்குப் பொருந்தின நெஞ்சு வளியாற் பிறக்கும்; எ—று.

காட்சி என்றது நெஞ்சினை. கேண்மியா, நாகு, நுந்தை எனவும், எஃகு எனவும் வரும்.

ஆய்தத்திற்குச் சார்பிடம் 'குறியதன் முன்னர்' (எழுத். 38) என்பதனாற் கூறினார். இனி ஆய்தந்தலைவளியானும் பிறக்கும் என்பாரும் உளர். மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் என்பதனான் அளபெடையும் உயிர்மெய்யும் தம்மை ஆக்கிய எழுத்துக்களது பிறப்பிடமே இடமாக வரும் என்று உணர்க.

சுப்பிர.

(பொ—ள்) சார்ந்து வாராது தாமே தனியாய் வருதற்குத் தன்மையில் என ஆராய்ந்து வெளிப்படுத்தப்பட்ட ஏனைச் சார்பெழுத்துக்கள் மூன்றும் தத்தமது சார்பாயுள்ள எழுத்துக்களின் பிறப்பொடு பொருந்தித் தகுந்த இடங்களின்கண் தம்மியல் போடு தோன்றும்.

'சார்ந்துவரி னல்லது...ஏனை மூன்றும்' என்ற தொடரால் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் இவை குறிக்கப்பட்டன என்றது நூல்மரபு முதல் இரண்டு சூத்திரங்களான் அறியப் படும்.

'சார்ந்து வரினல்லது தமக்கியல்பிலவெனத் தேர்ந்து வெளிப் படுத்த ஏனை மூன்றும்' என்று கூறாது 'சார்த்து வரும் ஏனை மூன்றும்' எனக் கூறின், ஆஅ. ஈஇ போன்ற இடத்துள்ள அளபெடையாகிய அகர இகரங்களில் அதி வியாப்தி வரும், அவை ஆகாரத்தையும் ஈகாரத்தையும் சார்ந்து வந்தமை யின் அல்லது தமக்கியல்பில என்றதனான் ஆங்கு அதிவியாப்தி வாராது, அவற்றிற்குத் தனியாய் வருதற்கும் இயல்புண்மையின். சார்பு என்பதற்குச் சார்பாகிய எழுத்து என்பது பொருளாகும். பிறப்பொடு என்பதற்குப் பிறப்பிடதது எனப் பொருள் கொண்டு "தத்தம் சார்பிற் பிறப்போடியலும்" என ஆசிரியர் கூறாது, "தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி-ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும்" என ஏன் கூறினர் எனின், ஆசிரியர் அவ்வாறு கூறியிருப்பின், சார்பெழுத்துக்களுக்கு அவற்றின் சார்பாகிய எழுத்துக்களின் பிறப்பிடமே பிறப்பிடம் எனப் பொருளாகும். அவையே இவற்றிற்கும் இடமாகாது அவ்விடங்களுக்கு அருகா மையில் இவற்றை ஒலிக்கத் தகுந்த இடமே இவற்றிற்கு இடமாகும் எனக்கூறவேண்டி அவ்வாறு சூத்திரித்தார் என்க. காட்சி என்றதற்கு இடம் என்பது பொருளாகும்.

இளம்பூரணர் 'ஒத்த காட்சி என்றதனான்......என்பது கொள்க', என்றனர். இஃது குறியதன் முன்னர் ..(எழுத். 38) என்ற சூத்திரத்தானே உணர்த்தப்பட்ட பொருளாகும்.

"தம்மியல்பியலும் என்றதனான்......வருமென்பது கொள்க" என இளம்பூரணத்தில் உளது. உயிர்மெய் என்றது ஓரொலி எழுத்தாகாமையானும், 'கி' என்ற விடத்துள்ள இகரத்திற்குக் ககரத்தினிடம் இடம் ஆகாமையானும். அளபெடைகள் எல்லாம் தனியாய் நிற்குந் தன்மையுள்ள குற்றெழுத்துக்களாதலானும், அவற்றிற்குப் பிறப்பிடம் ஆசிரியராற் கூறப்பட்டமையானும் இத்தொடர் வேண்டுவதின்று.

நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்குக் கொண்ட அந்நுவயம் "சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலவெனத் தேர்ந்து வெளிப்படுத்த தம் இயல்பு மூன்றும் தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி இயலும், ஏனை ஒத்த காட்சியின் இயலும்" என்பது. இவ்வாறு கொண்டதற்குக் காரணம்.

ஆய்தக் கிடந்தலை அங்கா முயற்சி
சார்பெழுத் தேனவும் தம்முத லனைய (நன். 87)

என்ற நன்னூற் சூத்திரத்தில் ஆய்தத்திற்குத் தனியிடமும் ஏனையவற்றிற்குத் தத்தஞ் சார்பிடமும் எனக் கூறியிருத்தல் ஆகலாம். இங்ஙனம் கூறின் தம்மியல்பு, ஏனை என்ற சொற்களைச் சூத்ரப் போக்கின்படி அந்நுவயிக்காதது ஒரு குற்றமாகும். அன்றியும் 'தேர்ந்துவெளிப்படுத்த தம்மியல்பு மூன்றும்' என்றதற்கு 'ஆராய்ந்து வெளிப்படுக்கப்பட்ட எழுத்துக்கள் தம்முடைய பிறப்பியல்பு மூன்றினையுங் கூறுங்கால்' எனப் பொருள் கூறுதல் பொருத்தம் இன்று. 'ஏனை' என்றது எவ்வாறு ஆய்தத்தைக் காட்டும்? 'ஏனை' என்றதனான் ஆய்தத்தைக் கொள்ளுமவர்க்கு ஈண்டு 'மூன்று' எது? இரண்டு தானே உள, 'கூறுங்கால்' என்றதனையும் வருவிக்க வேண்டுமே? மேலும் 'ஏனை ஒத்த காட்சியின் இயலும்' என்றதற்கு 'ஒழிந்த ஆய்தம் தமக்குப் பொருந்திய நெஞ்சுவளியாற் பிறக்கும்' எனப் பொருள் கொண்டனரே; காட்சி என்றதற்கு நெஞ்சுவளி என்பது பொருள் என இவர்க்கு எங்ஙனம் தெரிந்தது? 'ஒத்த' என்ற சொல் எற்றுக்கு? ஆகலின் இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறும் பொருள் ஆசிரியர்க்கு உடன்பாடின்று என்பது என் கொள்கை.

ஆய்தத்திற்கு இடம் தலை என்று இளம்பூரணர் நன்னூலார் சொல்லியிருக்கவும் நச்சினார்க்கினியர் நெஞ்சு இடம் என்றது எவ்வாறு?

தற்போதுள்ள ஆய்த ஒலி வடமொழியில் 'க' வருக்கத்தின் முதல் இரண்டெழுத்துக்களுக்கு முன்னருள்ள விஸர்க்க ஒலியை ஒத்திருத்தலானும்,வடமொழியில் அவ்விஸர்க்கம் 'ப' வருக்கத்தின் முதலிரண்டெழுத்துகளின் முன்னர் வேறாக ஒலிக்கப்படுகின்றமையானும், ஆசிரியர் தொல்காப்பியனார் ஆய்தத்தின் பின்னர் ஆறுவல்லெழுத்தும் வரலாம் எனக் கூறினமையானும் ஆய்தத்திற்கு அவர் காலத்து அறுவகையொலியிருந்தன என்றும், அவற்றுள் ககரத்தின் முன்னர் உள்ள ஒலியே பிற்காலத்து எல்லாவிடத்தும் வந்ததென்றும் கொள்ளல் தகும். அவ்வாறு கொள்ளாக்கால் 'முட்டீது' என்றது 'முஃடீது' எனவும், 'கற்றீது' என்றது 'கஃறீது' எனவும் வரும் என ஆசிரியர் புணரியலிற் கூறுவது பொருந்தாக் கூற்றாகும், ககரஒலியோடு இயைந்த ஆய்த ஒலியும் டகார றகார ஒலிகளும் ஒன்றுக்கொன்று மயங்காமையின்.

வேங்கட.

அஃதாவது சார்பெழுத்துக்கள் மூன்றும் அவை சாரும் எழுத்துக்களின் பிறப்பிடத்தோடு ஒத்துத்தோன்றும் என்பதாம்.

வரலாறு :

குற்றியலிகரத்திற்கு :
நாகியாது, காசியாது, வீடியாது என்பன முதலாயின.
குற்றிய லுகரத்திற்கு :
நாகு, காசு, வீடு முதலாயின.
ஆய்த எழுத்திற்கு :
எஃகு, கஃசு முதலாயின கொள்க.

குற்றியலிகரம் குற்றியலுகரங்கள், எவ்வெவ் வல்லெழுத்துக்களைச் சார்ந்து வருமோ அவ்வவ் வல்லெழுத்துக்களின் பிறப்பிடமே தமக்கும் பிறப்பிடமாகக் கொள்ளும். ஆய்தம், தனக்கு முன் நிற்கும் வல்லெழுத்தோ டொத்து, அது பிறக்குமிடத்திற் பிறக்கும். முதலிலுள்ள குற்றெழுத்தும் ஆய்தத்திற்குச் சார்பாயினும் முன்னிற்கும் வல்லெழுத்தின் பிறப்பிடமே தனக்குப் பிறப்பிடமாக வரும் என்பது, 'ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச் சார்பேயெனினும், தலைவளியாற் பிறத்தலின் உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கும் என்பது கொள்க' என்று உரையாசிரியர் எழுதியிருப்பதனானும் அறியலாகும். உரையாசிரியர் 'தலைவளியாற் பிறத்தலின்' என்று எழுதியதனால் நன்னூலார் 'ஆய்தக் கிடந்தலை' என்றார்.

''அயோஹவாஹா விஜ்ஞேயா ஆஸ்ரயஸ்த்தா நபாகிநா''

என்னும் பாணினீய சிக்ஷையில், 'அயோஹவாஹம்' எனப்படும் அநுஸ்வாரம், விஸர்க்கம், ஃக, ஃப இவை, தாம் ஆஸ்ரயித்த வர்ணத்தின் ஸ்த்தானத்தை உடையன என்று கூறியிருப்பது ஈண்டைக்கு ஒப்பு நோக்கற்பாலது.

ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தின்படி, எஃகு என்பது எக்கு என்பது போலவும், கஃசு என்பது கச்சு என்பது போலவும் ஒலிக்கும். இம்முறையானே, பஃது என்பது பத்து என்று வழங்குவதாயிற்று. வடமொழியில் 'துஸ்கம்' என்னும் சொல் தமிழில் 'துக்கம்' என்று அமைந்ததுவும் இம்முறையானேயாயதாகும்.

தமிழில் வழங்கும் ஆய்த எழுத்து வடமொழி விஸர்க்கத்தோடு ஒப்பது. அதன் வடிவமும் விஸர்க்கத்தின் வடிவுபோன்று இரண்டு புள்ளி வடிவமாதலை மேலே கூறியுள்ளேன்*. வடமொழியில் விஸர்க்கம் ககர பகரங்களோடு சேருமிடத்து அவற்றின் ஒலியைப் பெறும். ஆயினும் வேறுபாடு சிறிதளவுண்டு. அவ்வாறே தமிழிலும் 'எஃகு' என்பதற்கும் 'எக்கு' என்பதற்கும் வேறுபாடு சிறிது உளதாகும். அதனைக் கணியாததனான் பஃது என்பது பத்து என்றாயிற்று; அஃகடிய, அஃசிறிய, அஃபெரிய என்பவை அக்கடிய, அச்சிறிய, அப்பெரிய என்று எழுதப்பட்டன; அதனால் ஆய்தத்தோடு கூடிய வடிவம் காண்டல் இல்லை.

நச்சினார்க்கினியர், இச்சூத்திரத்தை, 'சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்பு இல எனத் தேர்ந்து வெளிப்படுத்த தம்மியல்பு மூன்றும், தத்தம் சார்பில் பிறப்பொடு சிவணி இயலும்; ஏனை ஒத்த காட்சியின் இயலும்' எனப் பிரித்துக் கூட்டி வேண்டியாங்கு உரைத்தார். அவர், 'ஏனை' என்பதற்கு, 'ஒழிந்த ஆய்தம்' என்றார். 'ஏனை மூன்றும்' என்னுந் தொடரில், மூன்று என்பதைத் தனியாகப் பிரித்துப் பொருள் கூறின், ஏனை என்பதற்கு ஆய்தம் என்று— அம்மூன்றனுள் ஒன்று என்று— பொருள் வருதல் எப்படி?

"அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே" (எழுத். 12)

என ஆசிரியர் மேலே கூறியாங்கு, ஈண்டும் 'ஏனை மூன்று' என்றார். ஆண்டுக் கூறிய பொருளன்றே ஈண்டும் கூறுதல் வேண்டும்?

பின்னும் நச்சினார்க்கினியர் 'காட்சியென்றது நெஞ்சினை' என்றார். அச்சொற்கு அப்பொருளும் அமைவதன்று.

ஆதலின், அவர் கொள்கையைப் பின்பற்றி,

"ஆய்தநெஞ் சோசையின் அங்காந் தியலும்"

என்று இலக்கண விளக்க நூலார் கூறியது பொருந்தாமை, கூறாமலே விளங்கும்.

வெள்ளை.

(பொ—ள்.) முதல் எழுத்துக்களைச் சார்ந்து தோன்றி னல்லது தமக்கெனத் தனி நின்றொலிக்கும் இயல்பினையுடைய

* நூன்மரபு. 2-ஆம் நூற்பாவுரை. பக்கம். 48.

வல்ல என முன்னர் ஆராய்ந்து வெளிப்படுத்தப்பட்ட சார்பெழுத்துக்கள் மூன்றும் தமக்குச் சார்பாகிய முதல் எழுத்துக்களது பிறப்பிடத்தோடு பொருந்தித் தமக்கு ஒத்த இடத்தே தமக்குரிய இயல்பில் தோன்றி ஒலிப்பனவாம். எ—று.

எழுத்துக்களின் பிறப்பிடமும் வளியும் ஆகியவற்றைக் காட்சி என்றார். "ஒத்தகாட்சி என்றதனான்......... பிறக்கும் என்பது கொள்க" என விளக்கங் கூறுவர் இளம்பூரணர். எனவே, சார்பெழுத்துக்கள் தமக்கென வேறிடமுடைய வல்லாதனவாய்த் தமக்குச் சார்பாய் முன்னும் பின்னும் நின்ற முதல் எழுத்துக் களின் பிறப்பிடத்தோடு ஒத்த இடங்களிற் பிறக்கும் என்பது பெறப்படும்.

இவ்வாறன்றிக் குற்றியலிகரம் குற்றியலுகரம் இரண்டும் தத்தம் சார்பிற் சிவணியியலும் எனவும், இச்சூத்திரத்திற் காட்சி என்றது நெஞ்சு எனவும், ஏனை என்றது ஆய்தம் எனவும் கொண்டு 'ஏனை ஒத்த காட்சியின் தம்மியல்பியலும் என்ற தொடர்க்கு, 'ஒழிந்து நின்ற ஆய்தம் தனக்குப் பொருந்தின நெஞ்சு வளியாற் பிறக்கும்' எனப் பொருளுரைப்பர் நச்சினார்க் கினியர். 'ஏனை மூன்றும்' என்னும் எழுவாய்க்கு 'இயலும்' என்பது பயனிலையாதலானும், ஏனை என்பது ஒழிந்த என்னும் பொருட்டாய் மூன்றென்பதனைத் தொடர்ந்த அடைமொழி யாதலானும் சார்பெழுத்து மூன்றனுள் குற்றியலிகரம் குற்றிய லுகரம் என்னும் இரண்டினையும் முன்னர்ப் பிரித்தபின் அல்லது ஏனையென்ற சொல்லால் மூன்றாவதாகிய ஆய்தத்தைப் பிரித் துரைத்தல் கூடாதாகலானும் இச்சூத்திரத்திற்கு நச்சினார்க் கினியர் கூறிய உரை, ஆசிரியர் கருத்திற்கு முரணாதல் துணியப் படும். ஆசிரியர் பவணந்தியாரும் இச்சூத்திரத்திற்கு இளம்பூரண அடிகள் கூறிய உரையினையேயுளங் கொண்டு,

> "ஆய்தக் கிடந்தலை அங்கா முயற்சி
> சார்பெழுத் தேனவும் தம்முத லனைய"

எனச் சார்பெழுத்துக்களின் பிறப்புணர்த்தினார். ஆய்த வெழுத்திற்கு இளம்பூரணர் கூறிய தலைவளியை இடமாக்கி, 'ஆய்தக்கு இடம்தலை' என்றும், அவர் கூறாத அங்காத்தலை முயற்சியாக்கி, 'அங்கா முயற்சி' என்றும் பவணந்தியார் கூறியது ஆராய்தற்குரியதாகும்.

சிவலிங்கனார்.

ஒத்தகாட்சி என்பதற்குப் பொருள் கூறாமல் அதனை மிகையாகக் கொண்டார் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியர் காட்சி என்பதற்கு நெஞ்சு எனப் பொருள் கொண்டார். இப்பொருள் யாவரானும் மறுக்கப் பட்டது. நச்சினார்க்கினியரது கொள்கை ஆய்தம் நெஞ்சு வளியிற் பிறக்கும் என்பது. அவர் காலத்திலேயே ஆய்தம் தலை வளியாற் பிறக்கும் என்ற கருத்தும் (ஆய்தக்கு இடம் தலை என்பது நன்னூல்) மிடற்று வளியாற் பிறக்கும் என்ற கருத்தும் இருந்தன என்பதை அவர், "ஆய்தந் தலை வளியானும் மிடற்று வளியானும் பிறக்கும் என்பாரும் உளர்" என எழுதியதால் அறியலாம். ஆய்தத்துக்கு நெஞ்சுவளியை நச்சினார்க்கினியர் கொள்வதால் ஆசிரியர் தொல்காப்பியர்பால் சாரும் ஒரு குற்றம் நீங்கும். ஆசிரியர் எழுத்துக்களின் பொதுப்பிறப்பு கூறிய முதல் நூற்பாவில், "உந்திமுதலா முந்து வளி தோன்றி தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ" எனக் கூறியுள்ளார். அவர் கூற்றில் தலை வல்லெழுத்துக்கும் மிடறு இடை யெழுத்துக்கும் உயிரெழுத்துக்கும் உரிய இடங்களாயின. ஆனால் நெஞ்சு எதற்கிடம் என்பது ஆசிரியரானும் இளம்பூரணரானும் கூறப்படவில்லை. அதனால் ஆய்த எழுத்தை ஒலித்துக்கண்டு நெஞ்சிலிருந்து ஒலி வருவதாக நச்சினார்க்கினியர் கருதியதால் ஆய்தத்துக்கு இடம் நெஞ்சு என்று கொண்டு விட்டார்.

இனி 'ஒத்த காட்சி' என்பதற்கு 'ஒத்த தோற்றம்' எனப் பொருள் கொள்ளலாம். சார்பெழுத்து மூன்றும் தாம் சார்ந் துள்ள எழுத்துக்களின் பிறப்பிடங்களிலே பிறப்பன என்றாலும் தமக்கென ஓர் தனித்த ஒலியியல்பும் உடையன. அதனால் ஆசிரியர் தம்இயல்பு இயலும் (தமக்குரிய இயல்பில் நடக்கும்) என்றார்.

குரங்கு என்ற சொல்லில் முதலிலும் ஈற்றிலும் 'கு' எழுத் துண்டு. முதலில் உள்ள குகரம் ஒலிக்கும்போது க் என்ற வல்லெழுத்தொலியும் உ என்ற உயிர் எழுத்தொலியும் புலனாம்படியுள்ளது. அதாவது வல்லெழுத்துக்குரிய முயற்சி யாகிய முதல்நா அண்ணச் சேர்க்கையும், உகர உயிர்க்குரிய முயற்சியாகிய இதழ்குவிதலும் புலனாகின்றன. இறுதியில் உள்ள குகரத்தை ஒலிக்கும்போது க் என்ற வல்லெழுத்துக்குரிய முயற்சி புலனாகின்றதே ஒழிய உகர எழுத்துக்குரிய இதழ்

குவிதல் முயற்சி புலனாகவில்லை. க் என்ற ஒலியிலேயே உகர ஒலியும் அடங்கிக் காணப்படுகின்றது. எனவே குற்றியலுகர எழுத்தாகிய உ என்பதுதான், சேர்ந்த க் என்ற வல்லெழுத்தின் பிறப்பிட முயற்சிகளோடு ஒத்துக் காணப்பட்டு (வேற்றுமை யின்றி) அம்மெய்யாகவே இல்லாமல் தானும் ஓர் எழுத்துண்டு என்பது புலப்படும்படியாக இருக்கின்றது. இதுவே ஒத்தகாட்சி என்பதாம். ஒத்தகாட்சி—தான் சார்ந்த எழுத்தோடு ஒத்த தோற்றம்.

கேண்மியா என்றதில் ம் எழுத்தின்மேல் உள்ள இ என்ற எழுத்து தனித்த இகர ஒலிபோல் இல்லாமல் ம் எழுத்தோடு ஒன்றித் தோன்றுவதை ஒலித்துக் காண்க.

அஃது என்றதில், ஆய்த எழுத்து அ—ஃ—து எனத் தனித்தனி எழுத்து நிலையில் ஒலிக்கப்படாததையும், அ என்பது தனித்தும், ஃ து என்பன சேர்ந்தும் ஒலித்தலையும் ஒலித்துக் காண்க. ஃ து என்பன ஒத்து ஒரொலிபோல் ஒலித்தலால்தான் நாளடைவில் ஆய்த எழுத்து மறைந்து 'அது' என்ற சொல்லாக மாறிற்று என்னலாம்.

க. முருகையன்.

தொல்காப்பியர் தம் காலத்து உச்சரிப்பு முறையில் இருந்து வந்த வேறுபாடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. எனினும் அவர் எல்லா ஒலியன்களின் மாற்றொலிகளையும் (allophone) பற்றிக் குறிப்பிட்டுள்ளார் என்று சொல்வதற்கில்லை. சிலவற்றின் வேறுபாடுகளை மட்டுமே காட்டிச் சென்றுள்ளார். இவர் காட்டியுள்ள இவ்வேறு பாடுகளின்படி சில மாற்றொலிகளாகவும். ஒன்று உருபொலியன் (Morphophoneme) ஆகவும், ஒன்று இணைப்பொலியன் (Juncture phoneme) ஆகவும் உள்ளன என்று கொள்ளலாம். இவற்றைச் சார்ந்து வரல் மரபின் மூன்று என்றும் அளவு குறைதல் (குறுக்கம்) என்றும் குறிப்பிடுகின்றார்.

குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற சார்பெழுத்துக் களோடு ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் என்பனவற்றையும் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவை அனைத்திற்கும் இட வரையறை (distributional restriction) (13, 34, 35-38) கூறி யுள்ளார். எனவே இவற்றை மற்ற ஒலியன்களின் மாற்றொலி களாகக் கொள்ளலாம். இவற்றில் குற்றுகரத்திற்கு உருவம்

(105) கூறியுள்ளபடியாலும் இது பொருளனியலில் (Morphology) மற்ற உகரத்தினின்றும் வேறாக நடப்பதாலும் இதனை உருபொலியனாகக் கொள்ளலாம். ஆய்தம் பற்றிப் பேசும் போது அதன் வரன்முறை (distribution) (38–40) பற்றிக் கூறி அதற்குத் தனி உருவமும் (முப்பாற் புள்ளி. 22) கூறியிருந்த போதிலும் இதற்கு ஒரு தனிமுதலெழுத்து இன்மையாலும், இதன் ஒலி இன்னதென்று உணர இயலாததாலும் இதனை எந்த ஒலியனுக்கும் மாற்றொலியாக அமைக்க இயலவில்லை. எனவே இதற்குப் பிறப்பாக்கம் கூறவில்லை என்று கொள்ளவேண்டும். இது தடை ஒலியனின் ஒலியை மாற்றியமைக்க உதவும் புதுச் சூழ்நிலை (environment)யை உருவாக்கப் பயன்படுத்தப்படும் ஒரு குறிபோன்று உள்ளது. எனவே இதனைத் தொல்காப்பியர் தற்கால மொழியியல் அறிஞர்கள் கூறும் இணைப்புக் குறி (Juncture) போன்று பயன்படுத்தி உள்ளார் என்று கருத வேண்டும்.

குற்றியலிகரம், குற்றியலுகரம் இவை இரண்டும் பெரும் பாலும் தத்தம் முதலெழுத்துப் போன்று பிறப்பாக்கம் பெற்று (தத்தம் சார்பில் பிறப்பொடு சிவணி) மாத்திரையில் குறைந் தொலிக்கும். ஐகாரம், மகரம் ஆகிய இரண்டும் அளபு குறுகும் என்றதனால் அவை பிறப்பால் ஒரு தன்மையன என்பதும் மாத்திரையால் மட்டுமே வேறுபடுவன என்பதும் பெறப்படு கின்றன. குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் ஆகிய ஐந்தும் இடவரையறை யுடையன. ஆதலாலும், அவற்றுள் குற்றியலுகரமும் ஆய்தமும் முறையே உருபொலியனும் இணைப்பொலியனும் ஆதலானும் அவை தவிர்ந்த குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் ஆகிய மூன்றும் மாற்றொலிகள் என்று கொள்ளலாம். —(தொல்காப்பிய மொழியியல் பக். 44, 45.)

5. எழுத்துகளின் பிறப்புக்குப் புறனடை

102. *எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
[1]அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே

சு. வ: 1 அளவிற்

ஆ. மொ: இல.

All the letters are described of their productions which are made by the air passing outside the larynx. The timing of the air which helps to produce the sound inside the body below the larynx is elearly given in the books of the learned who make special study of them.

க. சு.

The nature of the origin of the air which starts from the navel and the modifications which it undr-goes before it comesout as articulated speech in all sounds, and of its quantity there in, is elearly investigated and given in the secret scriptures of the Antanar.

பி. இ. நூ:

சாமி. 5. நிறையுயிராற் சூக்குமையாம் மூலவிந்தால் பிறந்து
நேர்ந்து உதானனைக் கலந்து சிதறி மயிர்க்கருநீர்
உறழுவெழுத் தொடுக்கு பைசந்தியதாய் நெஞ்சு உயிர்
சேர்ந்து
உரித்தெரித் துள்ளுணர்வொலி மத்திமையாய்க் கண்டம்
செறியும் உச்சி நாசியுற்று நாவணம்பல் இதழின்
செயலால் வைகரியாய் வெவ்வேறு எழுத்தாயிடுமே.

இளம்.

இது, எல்லா எழுத்திற்கும் ஆவதோர் புறனடை உணர்த்து தல் நுதலிற்று.

* *இந்நூற்பாவையும் அடுத்துவரும் நூற்பாவையும் நச்சினார்க் கினியர் ஒரே நூற்பாவாகக் கொள்வர். அதனால் இந்நூற்பா வின்கீழ் அவர் உரையும் அவரைப் பின்பற்றிய வேங்கடராசலு ரெட்டியார், வெள்ளை வராணனார் உரைகளும் 103ஆம் நூற் பாவுக்குப் பின்னர் அமைக்கப்பட்டன.*

மேற்கோள்

தன்கோட் கூறல் என்னும் உத்திக்கு இனம் இந்நூற்பா. தொல். பொருள். 665 பேராசிரியர்.

(இ—ள்) எல்லா எழுத்தும்—எல்லா [2]எழுத்துக்களும், வெளிப்பட கிளந்து சொல்லிய பள்ளி—வெளிப்பட விதந்து சொல்லப்பட்ட இடத்தின் கண்ணே, எழுதரு வளியின்—எழுகின்ற வளியானே, பிறப்பொடு விடுவழி—தாம் பிறக்கும் தொழிலுடைய வாதலோடு தம்மைச் சொல்லுமிடத்து, உறழ்ச்சி வாரத்து அகத்து எழு வளி இசை—திரிதருங் கூற்றையுடைய [3]உண்ணின்றெழும் வளியானாய இசையை, அரில்தபநாடி—பிணக்கமற ஆராய்ந்து, அளபின் கோடல்—மாத்திரை வரையறையாற் கோடல், அந்தணர் மறைத்து—பார்ப்பார் வேதத்துக் கண்ணது.

[4]உறழ்ச்சி வாரம் என்றது, உந்தி முதலா எழும்வளி தலைகாறும் சென்று மீண்டு நெஞ்சின் கண் நிலை பெறுதலை எனக் கொள்க. வளி என்னாது வளியிசை என்றது, அவ்வாறு நெஞ்சின்கண் நிலைபெறும் அளபும் வளி எனப்படுவது, பின்னை நெஞ்சினின்றும் எழுவுழியெல்லாம் வளித்தன்மை [5]திரிந்து எழுத்தாம் தன்மையதாம் என்பது [6]விளக்கி நின்றது.

சுப்பிர.

(பொ—ள்) எல்லா எழுத்துக்களையும் (புறத்தார்க்கு) வெளிப்படுமாறு கிளந்து சொல்லப்பட்ட இடங்களில் தோன்றுகின்ற வளியினாற் பிறக்கும் பிறப்போடு கூறும்வழி, அவற்றோடு மாறுபடுகின்ற தன்மையையுடைய அகத்தின் கண் (உந்தி, மார்பு, கழுத்து என்னும் இடங்களில்) தோன்றுகின்ற வளியானுண்டாகும் இசையைக் குற்றமற ஆராய்ந்து அதன் தன்மையை அறிவித்தல் வேதத்தின்கண்ணதாகும்.

வாரம் அளவு என்பன தன்மை என்ற பொருளைத் தரும். 'எழுதருவளி' என்றவிடத்து 'தரு' என்றது துணை வினையாகும். அகத்தின்கண் உண்டாம் எழுத்துக்களின் நிலை மூவகைப்படும் எனவும், பரை நிலையில் பரை, பைசந்தி, மத்திமை எனவும், பரை நிலையில் எழுத்துக்கள் எல்லாம் ஒரே தன்மையவாய் இருக்கும் எனவும் அஃது மூலாதாரத்தில் நிகழும்

சு. வே: 2. எழுத்தும்
3. உண்ணின்றெழு
4. உறழ்ச்சிவாரத்து
5. சாரர்ந்து
6. விளங்கி

எனவும், பைசந்தி உந்தியிற்றோன்றும் எனவும், அது யோகிகளுக்கே புலப்படும் எனவும், மத்திமை நெஞ்சில் தோன்றும் எனவும், வடமொழியிலக்கணங்களிற் கூறப்பட்டது.

இச்சூத்திரவுரையில் இளம்பூரணர் அளவு என்றதற்கு மாத்திரை எனப் பொருள் கூறினர். அச்சொற்குத் தன்மை என்ற பொருள் திருக்கோவையார் முதலியவற்றுள் காணப்படுகின்றமையானும், அப்பொருள் ஈண்டுப் பொருந்துவதானும், பிறப்பியலில் எழுத்துக்களின் மாத்திரையைப்பற்றிக் கூறாமையானும் 'தன்மை' என்ற பொருளைக் கொள்ளுதலே தகும்.

நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்தையும் வரும் சூத்திரத்தையும் ஒன்றாகக் கொண்டு கூறும் பொருளாவது:—*"ஆசிரியன் எல்லா எழுத்துக்களும்..............மாத்திரையை உணர்க"

'கிளந்து' என்றதற்கு எழுவாயாக ஆசிரியன் எனக் கொண்டதும், 'வெளிப்பட' என்றதை வெளிப்படுக்கையினாலே' என ற காரணப் பொருளிற் கொண்டதும், 'எழுதருவளியின்' என்றது உந்தியிற்றோன்றும் பைசந்தி நிலையைக் குறிக்கும் எனக் கொண்டதும் "அகம்" என்றதற்கு 'மூலாதாரம்' எனப் பொருள் கொண்டதும் ஆராய்தற்குரியன.

'இது பிறன்கோட் கூறல் என்னும் உத்திக்கு இனம்' என நச்சினார்க்கினியர் கூறினர். "அஃதிவண் நுவலாது... நுவன்றிசின்" என்ற பகுதி எவ்வாறு பிறன்கோட் கூறலாகும்? இனி "எல்லாவெழுத்தும்......அந்தணர் மறைத்தே" என்ற சூத்திரம் அவ்வாறாம் எனின், அற்றன்று; அடுத்த சூத்திரத்திற்குத தோற்றுவாய் ஆகலின். ஆசிரியர் வடமொழி தென்மொழி இரண்டனையும் நன்கு ஆராய்ந்தவராதலின் ஆங்காங்குத் தமிழ் மொழியைப்பற்றிக் கூறுமிடத்து வடமொழியிற் கூறியவாறே கூறாமையின் குற்றம் எனச் சிலர் கருதுவர் என நினைத்து இரு மொழியிலுள்ள மாறுபாட்டினைச் சொல்லிச் சொல்வர். ஆகலின்றே "மூவள விசைத்தல் ஓர் எழுத்தின்றே" (எழுத். 5) என்ற சூத்திரத்தையுங் கூறினர்.

103. அஃதுஇவண் நுவலாது எழுந்துபுறத்து இசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே (21)

* இதனை நச்சினார்க்கினியர் உரையில் காண்க.

ஆ. மொ: இல.

Without having said about it here I have described the course of the air which is active in shaping the sounds of the letters outside the larynx.

க. சு.

I have not discussed that here;
I have discussed the measure of the noise (s).
Which express meaning (produced by) the air
as it shapes the sound (s) outside.

இளம்.

இது, [1]மேற்சூத்திரத்திற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அஃது இவண் நுவலாது—(அகத்தெழு வளியிசை அளபிற் கோடலாகிய) அதனை இந்நூலிடத்துச் சொல்லாது, எழுந்து புறத்து இசைக்கும்—([2]அகத்தினின்று) எழுந்து புறத்துப் போந்து இசைக்கும், மெய்தெரி வளியிசை அளபு—பொருண்மை தெரிகின்ற வளியானாய இசையது மாத்திரையினை, நுவன்றிசின்—யான் ஈண்டுக் கூறினேன்.

[3]மற்று, இஃது "அளபிற்கோடல் அந்தணர் மறைத்து" எனவே பெறப்பட்டதன்றோ வெனின், 'அந்தணர் மறைத்து' என்பது பிறன்கோட் கூறுதற்கும், பிறன்கோட் [4]கூற்று நேர்ந்து உடம்படுதற்கும் ஒப்பக் கிடந்தமையின், அவ்வையம் தீர்தற்குக் கூறினார் என்பது. புறத்து இசைப்பதன் முன்னர், அகத்து வளியிசையை அம்மறைக்கண் ஓர் எழுத்திற்கு மூன்று நிலை உள தாகக் கூறும் (அதன் ஆசிரியன்). அஃது ஆமாறு அறிந்து கொள்க. 'மெய்தெரி' என்றதனான் முற்கு முதலியன முயற்சி யாற் பிறக்கும் எனினும், பொருள் தெரியா நிலைமையவாகலின் அவற்றிற்கு அளபு கூறாராயினார் என்பது பெறப்பட்டது. 'நுவன்றிசின்' என்பது ஈண்டு இறந்தகாலத் தன்மை வினை.

சு. வே: 1. மேலைச்
2. அகத்துநின்று
3. மற்றிது
4. கூறி உடம்படுதற்கும்

சுப்பிர.

(பொ—ள்.) அதனை ஈண்டுக் கூறாது எழுந்து வெளியில் ஒலிக்கப்படும் தன் தன்மை தெரிவிக்கும் வளியிசையின் தன்மையைக் கூறினேன்.

'மெய்' என்றதற்குப் பொருள் பொருளெனக் கொண்டனர் உரைகாரர்கள். ஓரெழுத்தொரு மொழியைத் தவிர்த்து ஏனை மொழிகளிலுள்ள எழுத்துக்களுக்குப் பொருளில என்றது பெரியோர் துணிந்த கொள்கையாகலின், அவர்தங் கூற்றுப் பொருந்துமா? சொற்குப் பொருளிருத்தலின் அவற்றின் உறுப்பாகிய எழுத்துக்களுக்கும் பொருள் உண்டெனக் கொள்ளுதல் தான் பொருந்துமா? ஆகலின் 'மெய்தெரி' என்பதனான் முற்கு முதலியன முயற்சியாற் பிறக்கும் எனினும் 'பொருள் தெரியா நிலைமையவாகலின்' என்ற இளம்பூரணத் தொடரின் கண்ணும், 'மெய்தெரி வளியெனவே பொருள் தெரியா முற்கும் வீளையும் முயற்சியானாம் எனினும் பொருள் தெரியாமையின்' என்ற நச்சினார்க்கினியத் தொடரின் கண்ணும் 'பொருள் தெரியாமைய', 'பொருடெரியா' என்றவை, 'தன்மை தெரியா நிலைமைய' 'தன்மை தெரியா' என்றிருப்பின் நலம்.*

நச்.

"எல்லா எழுத்தும்......அந்தணர் மறைத்தே
அஃதிவண் நுவலா......அளவுநுவன்றிசினே"

இஃது எழுத்துக்கள் தம் பிறப்பிற்குப் புறனடை கூறுகின்றது.

(இ—ள்.) ஆசிரியன் எல்லா எழுத்துக்களும் பிறக்குமாறு முந்து நூற்கண்ணே கூறி வெளிப்படுக்கையினாலே, யானும் அவ்வாறே கூறிய எண்வகை நிலத்தும் பிறக்கின்ற பிறப்போடே

---

* 'பொருள் தெரியா நிலைமைய' என்பதற்கு, 'எழுத்தாகிய பொருள் தெரியா நிலைமைய' என்றே பொருள் கூறுக. ஏன் எனின், முற்கு வீளை முதலியவற்றிற்கும் சொற்போல பொருள் உண்டென்பதைப் "புல்லாவெழுத்திற் கிளவி பொருள் படினும் இல்லா இலக்கணத்த தென்றொழிக" என்னும் நேமிநாதத்தானும், 'முற்கு இலதை முதலியன பொருளுணாத்தின வேனும் எழுத்தாகாமையானும்' என்னும் நச்சினார்க்கினியர் பாயிர உரையானும் உணர்க—திரு-அடிகளாசிரியர்.

அவ்வெழுத்துக்களைக் கூறுமிடத்து, யான் கூறியவாறு அன்றி உந்தியில் தோன்றும் காற்றினது திரிதரும் கூற்றின்கண்ணே மாத்திரைக் கூட்டிக் கோடலும், மூலாதாரத்தில் எழுகின்ற காற்றின் ஓசையைக் குற்றமற நாடிக் கோடலும் பார்ப்பாரது வேதத்து உளதே; அந்நிலைமை ஆண்டு உணர்க. அங்ஙனம் கோடலை ஈண்டுக் கூற லாகாமையின் இந்நூற்கட் கூறாதே, உந்தியிற்றோன்றிப் புறத்தே புலப்பட்டு ஒலிக்கும் பொருள் தெரியும் காற்றினது துணிவிற்கே யான் மாத்திரை கூறினேன்; அவற்றினது மாத்திரையைக் உணர்க; எ—று.

இதனை இரண்டு சூத்திரம் ஆக்கியும் உரைப்ப.

இது பிறன்கோட் கூறல் என்னும் உத்திக்கினம். என்னை? உந்தியில் எழுந்த காற்றினைக் கூறுபடுத்தி மாத்திரை கூட்டிக் கோடலும், மூலாதாரம் முதலாகக் காற்றெழுமாறு கூறலும் வேதத்திற்குளதென்று இவ்வாசிரியர் கூறி, அம்மதம் பற்றி அவர் கொள்வதோர் பயன் இன்றென்றலின். உந்தியில் எழுந்த காற்று முன்னர்த் தலைக்கட் சென்று பின்னர் மிடற்றிலே வந்து பின்னர் நெஞ்சிலே நிற்றலை உறழ்ச்சி வாரத்து என்றார். அகத்தெழுவளியெனவே மூலாதாரம் என்பது பெற்றாம்.

இன்சாரியையை அத்துச் சாரியையோடு கூட்டுக. ஏகாரந் தேற்றம்.

'மெய்தெரி' வளியெனவே பொருள் தெரியா முற்கும் வீளையும் முயற்சியானாம் எனினும் பொருள் தெரியாமையின் அவை கடியப்பட்டன. எனவே, சொல்லப் பிறந்து சொற்கு உறுப்பாம் ஓசையை இவர் எழுத்தென்று வேண்டுவர் என உணர்க.

> **நிலையும் வளியும் முயற்சியும் மூன்றும்**
> **இயல நடப்பது எழுத்தெனப் படுமே**

என்றாராகலின்.

வேங்கட.

'மெய்தெரிவளியிசை' எனவே மெய் தெரியாத வளியிசையும் உண்டு என்பது போதரும். அது வீளை முதலியன போல்வது மெய்—பொருள்.

எழுத்துக்களின் பிறப்பிடத்தைக் கூறிவந்த வழி, எழுந்து புறத்திசையாது அகத்தெழுவளியிசையும் உண்டு என்றதனால்,

மேற்கூறிய அளபு அகத்தெழுவளியிசைக்கோ, அன்றி, எழுந்து புறத்திசைப்பதற்கோ என்பது ஐயுறப்படுமாகலின், 'மெய்தெரி வளியிசையளபு நுவன்றிசினே' என்றார்.

அந்தணர் மறை—வடமொழி வேதங்கள்.

இனி, 'துரீயம் வாசம் மனுஷ்யா வதந்தி' என்று வேதம் கூறுவதனால், நாம் பேசும் சப்தத்தின் உருவம் நான்காவதாகும் என்பது அறியப்படும். அதற்குமுன், மூன்று உருவம் உண்டு. இந்நான்கும், பரா, பஸ்யந்தி, மத்யமா, வைகரீ என்னும் பெயரன. நாம் பேசும் சப்தம் (எழுந்து புறத்திசைப்பது) வைகரீ எனப்படும்.

இச்சூத்திரத்தை உரையாசிரியர் இரண்டாகப் பகுத்து உரைத்தார். அதனினும் நச்சினார்க்கினியர் கொண்டவாறு ஒரு சூத்திரமாகக் கோடலே அமைவுடையதாயுளது.

இச்சூத்திரத்தின் முதல் ஐந்து அடிகளை நச்சினார்க்கினியர்,

> "எல்லா எழுத்தும் கிளந்து வெளிப்பட, சொல்லிய
> பள்ளி பிறப்பொடு விடுவழி, எழுதருவளியின்
> உறழ்ச்சி வாரத்தின் அளபு கோடல், அகத்
> தெழுவளியிசை அரில்தப நாடிக் கோடல் அந்
> தணர் மறைத்தே"

எனப் பிரித்து, வேண்டியாங்குப் பொருள் கூறினார். சூத்திரம், கிடைக்கை முறையிலே செம்பொருள் படுதலின் இளம்பூரணர் கூறியவாறு பொருள் கூறுதலே தக்கது.

வெள்ளை.

உந்தியிலிருந்தெழும் காற்று முன்னர்த் தலைக்கட் சென்று பின்னர் மிடற்றிலே வந்து அதன்பின் நெஞ்சிலே நிற்றலை உறழ்ச்சிவாரம் என்றார். உறழ்ச்சிவாரம்—திரியும் கூறுபாடு. இக்கூறுபாட்டினை ஆசிரியர் 'தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ' என்ற தொடரால் முன்னர் விளக்குதல் காண்க. அகத்தெழுவளியிசை—மூலாதாரத்திலிருந்து தோன்றும் காற்றோசை. மெய்தெரிவளியிசை—எல்லார்க்கும் எழுத்துருவம் இதுவெனப் புலனாமாறு வாயின் புறத்தே வெளிப்பட்டிசைக்கும் எழுத்தோசை. உள்ளிருந்தெழுங் காற்று தலைக்கட் சென்று

மிடற்றிற்குவந்து நெஞ்சிலே நிலைபெறுமளவும் காற்றாயிருந்து, பின்னர், அது நெஞ்சிலிருந்து வெளிப்படும் பொழுதெல்லாம் காற்றின் தன்மை திரிந்து எழுத்தாந் தன்மையடையும் என்பார் வளி' யென்னாது 'வளியிசை'யென்றார்.

அந்தணர் மறையிற் கூறுமாறு புறத்தெழுந் திசைக்கும் எழுத்துக்களுக்கு முதற்காரணமாகிய அகத்தெழு வளியிசைக்கு மாத்திரை கூறின், அதன் அளவு எல்லார்க்கும் ஒரு தன்மைத்தாக விளங்காதெனக் கருதியே தொல்காப்பியனார், புறத்தெழுந் திசைக்கும் எழுத்துக்களாகிய மெய்தெரி வளியிசைக்கே தாம் அளவு கூறிய முறையினை இச்சூத்திரத்தால் தெளிவாக அறிவுறுத்துகின்றார்.

''உந்தியில் எழுந்த காற்றினைக் கூறுபடுத்தி.........உத்திக்கு இனம்'' என்றார் நச்சினார்க்கினியர்.

மெய்தெரிவளியெனவே பொருள் தெரியாமுற்கும் வீளையும் எழுத்தாகா என்பது புலனாம். ஆகவே சொல்லப் பிறந்து சொற்குறுப்பாம் ஓசையையே இவ்வாசிரியர் எழுத்தெனக் கொண்டார் என்பது பெறப்படும்.

''நிலையும் வளியும்.........எழுத்தெனப் படுமே''

என நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படும் பழஞ் சூத்திரம் தொல்காப்பியர் கூறிய எழுத்தின் இயல்பினை நன்கு விளக்குவதாகும்.

பி. சூ.

ஆபிரகாம் அருளப்பன் எழுத்துகளை வரிசைப்படுத்துமாறு:

உயிரெழுத்து:

முதல் தொகுப்பு வாயடி தொடங்கி இதழ் குவிவுவரை

அ ஆ இ ஈ உ ஊ என அமையுமாறும்

இரண்டாந் தொகுப்பு வாய்நடுத் தொடங்கி இதழ்குவிவு வரை

எ ஏ ஐ ஒ ஓ ஔ என அமையுமாறும் தொல்காப்பியர் போற்றும் தொல்லாசிரியர் வரிசைப்படுத்தினர்.

மெய்யெழுத்து அடியண்ணந் தொடங்கி இதழ்வரை

கங சஞ டண தந பம

முதலண்ணந் தொடங்கி இதழ்வரை

ய ர ல வ

நடு அண்ணந் தொடங்கி முன் அண்ணம் வரை

ழ ள ற ன.

இப்பகுப்புக்கேற்பச் சூத்திரம் அவர் அமைத்தது:

அஆ இஈ உஊ ஆறும் ஒன்றா
எஏஐ ஒஓஔ ஆறும் ஒன்றா
உயிர்இரு தொகுப்பாய் நின்றும், நன்றே
கஙசஞ டணதந பமபத்தும் ஒன்றா
யரல வவ்வெனும் நாலும் ஒன்றா
ழளறன என்பன நாலும் ஒன்றா
மெய்பெறு தொகுப்பு மூன்றாய் நின்றும்
சிறப்பினும் இனத்தினும் செறிந்து மரபின்
நடத்தல் முந்தை முறையா கும்மே.

(தமிழ் எழுத்து வைப்புமுறை பக்கம். 4-8)

(பிறப்பியல் உரைவளம் முற்றும்)

தொல்காப்பியம் - பேரகத்தியம்
ஒப்புமைப்பகுதி

நூன்மரபு

வரிசை எண்		நூற்பா எண்
1	எழுத்தெனப்படுப அகரமுதல் னகர விறுவாய் முப்பஃ தென்ப சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.	(1)
2.	அவைதாம் குற்றிய லிகரம் குற்றிய லுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன.	(2)
3.	அவற்றுள் அ இ உ எ ஒ என்னும் அப்பா லைந்தும் ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப.	(3)
4.	ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் அப்பால் ஏழும் ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப.	(4)
5.	மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே.	(5)
6.	நீட்டம் வேண்டின் அவ்வள புடைய கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்.	(6)
7.	கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே.	(7)
8.	ஔகார இறுவாய்ப் பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப.	(8)
9.	னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப.	(9)
10.	மெய்யொ டியையினும் உயிரியல் திரியா.	(10)
11.	மெய்யின் அளபே அரையென மொழிப.	(11)

பேரகத்தியம்

வரிசை எண்		நூற்பா எண்
1.	எழுத்து முதல் சார்பு இருவகை யென்ப	(5)
	முதல்எழுத்து இருவகையாகி எண்வகையாம் (எண்வகை: உயிர்: குறில், நெடில், சுட்டு, வினா மெய்: வலி, மெலி, இடை, ஆய்தம்)	(6)
	முதல்உயிர் மெய் ஆய்தம் முப்பான் ஒன்றே (ஆய்தம் உயிரிலும் மெய்யிலும் சேர்க்கப்பட்டுள்ளது)	(7)
2.	உயிர்மெய் அளபெடை இரண்டாய்தம் அறுகுறுக்கும் சார்பாம். (அறுகுறுக்கம்: இ, உ, ஐ, ஔ, ம, ஃ என்பவற்றின் குறுக்கம்)	(38)
3.	அ இ உ எ ஒக் குறிலாகும்	(12)
	குறில் ஒரு மாத்திரை	(118)
4.	ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடி லாகும்	(14)
	நெடில் இருமாத்திரை	(118)
5.	மூவள பொலித்தல் ஓரெழுத் திற்கிலை	(120)
6.	அளபெடை மூன்றின்மேல் ஆகும் என்ப	(121)
7.	கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை	(113)
8.	அகரமுதல் ஔகார அந்தமாம் உயிரே	(9)
9.	ககரமுதல் மூவாறும் காட்டும் ஆய்தமும்மெய் (ஆய்தம்மெய் எனப்பட்டது)	(26)
10.	மெய்யொடு மேவினும் உயிர்வேறு படாஅ.	(111)
11.	மெய்ம்மாத் திரையே அரையென விளம்புப.	(119)

12. அரையளபு குறுகல் மகரம் உடைத்தே. (12)
13. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல். (15)

14. எகர ஒகரத் தியற்கையு மற்றே. (16)

15. புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமொ டுயிர்த்தலும்
ஏனை யுயிரொ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே. (17)

16. மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே. (18)

17. வல்லெழுத் தென்ப கசட தபற (19)
18. மெல்லெழுத் தென்ப ஙஞண நமன. (20)

19. இடையெழுத் தென்ப யரல வழள. (21)

20. டறலள என்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னும் மூவெழுத் துரிய. (23)

21. அவற்றுள்
லளஃகான் முன்னர் யவவும் தோன்றும். (24)

22. ஙஞண நமனவெனும் புள்ளி முன்னர்த்
தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே. (25)

23. அவற்றுள்
ணனஃகான் முன்னர்க்
கசஞப மயவவ் ஏழும் உரிய. (26)

24. ஞநம என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே. (27)

25. மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும். (28)

26. யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும். (29)

27. மெய்ந்நிலைச் சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன் தாம்வரும் ரழ அலங் கடையே. (30)

28. அஇஉ அம்மூன்றும் சுட்டு. (31)

29. ஆஏ ஓஅம் மூன்றும் வினா. (32)

30. அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர். (33)

12. (2-இல் அறுகுறுக்கம் சார்புஎன்பதில் அடக்கப் பட்டது)

13 } 14 } எகர ஒகரம்மெய் எய்தும் புள்ளியே (53)

15. உயிரே மெய்யூர்ந்து உயிர்மெய் யாகும் (40)

16. ஒற்றுமுன் உயிர்பின் உறும்உயிர் மெய்யே (109)

17. வல்லெழுத் தாவன கசட தபற (30)

18. மெல்லெழுத் தாவன ஙஞண நமன (32)

19. இடையெழுத் தாவன யரல வழள (34)

20 } டகர முன்னர்க் கசப வுயிர்மெய் வரும் (92)
21 } றகர முன்னர்க் கசப வுயிர்மெய் வரும் (101)

லகர முன்னர்க் கசப வயவரும் (97)

ளகர முன்னர்க் கசப வயவரும் (100)

22—25. ஙகர முன்னர்க் ககரவுயிர்மெய் வரும் (90)

ஞகர முன்னர்ச் சகரவுயிர் மெய்வரும் (91)

ணகரமுன் கசட ஞபமய வவ்வாம் (93)

நகர முன்னம் தயவுயிர் மெய்வரும் (94)

மம்முன் பயவ வுயிர்மெய் வருமே (95)

னம்முன் கறசஞ பமய வவ்வாம். (102)

26. யரமுன் மொழிமுதல் உயிர்மெய் எலாம் வரும் (96)

ழகர முன்னர் மொழிமுதல் உயிர்மெய்யாம் (99)

27. ரழவல் லனபுணரிற் றன்மெய்ம் மயக்கமாம் (104)

28. அ இ உம் மூன்றும் சுட்டிற் சுட்டே (16)

29. ஆ ஏ ஓ ஈற்றும் எஏமுத லும்வினா (20)
யாவென் வினாவே யஃறிணைப் பன்மை
விகுதிபெறுங் கால்ஐம் பாலினும் வினாவாம் (21)

30. விளியிசை புலம்பல் விற்கையின் மிகுமே (125)

மொழிமரபு

31. குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்கு
ஆவயின் வருஉம் மகரம் ஊர்ந்தே. (1)
யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது.
(குற்றியலுகரப் புணரியல். 5)

32. நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே. (3)

33. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே. (5)

34. குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே. (8)

35. ஐஔ என்னும் ஆயி ரெழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும். (9)

36. நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி. (10)

37. குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே. (11)

38. ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே. (12)

39. மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும். (13)

40. யரழ என்னும் மூன்றும் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற் றாகும். (15)

41. அவற்றுள்
ரகார ழகாரம் குற்றொற் றாகா. (16)

42. அகர இகரம் ஐகார மாகும். (21)

43. அகர உகரம் ஔகார மாகும். (22)

44. அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும். (23)

45. ஓரள பாகும் இடனுமா றுண்டே
தேருங் காலை மொழிவயி னான. (24)

46. இகர யகரம் இறுதி விரவும். (25)

31. உத்திரி யிகரம் மவ்வூர் இகரம்குறிய (46)

32. குறிலல்லன தொடர்வலிக் கூடுகரம் குறிய (47)

33. ஆய்தம் குறல்வலிக்கு ஆகும் இடையே (45)

34. உயிர்நெடில் இனக்குறில் உற்றள பெடுக்கும் (41)

35. இ உ இரண்டும் ஐஔக் கினமே (37)

36. உயிர்நெட் டெழுத்தேழ் ஓரெழுத் தொருமொழி (130)

37. குற்றெழுத் தைந்தும் மொழிநிறைந் தியலா. (131)

38. தனிமொழி இணைமொழி பொதுமொழி
கணமொழி தணமொழி கலப்புறு மொழியேழ் (13

39. மெய்கள் அசரமே......சாரியை (128)

40. யரழ ஈரொற்றாம் கசதப ஙஞநம (105)

41. ரகார ழகாரம் குற்றொற் றாகா (103)

42. அகர இகரம் ஐகார மாகும் (126)

43. அகர உகரம் ஔகார மாகும் (127)

44. அகர யகரமெய் ஐகார மாகும் (126)
(அகர வகரமெய் ஔகாரமாகும் என்பதும் உண்டு.
தொல்காப்பியத்தில் இக்கருத்து நூற்பா இல்லை)

45 ஒற்றளபெடை ஐஔக் குறுக்கம் ஒன்றாம் (122)

46. இகரம் யகரமெய் இறுதி விரவும் (113)

47. பன்னீ ருயிரும் மொழிமுத லாகும். (26)

48. உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா. (27)

49. கதந பமவவெனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா வுயிரொடும் செல்லுமார் முதலே. (29)

50. சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐஔ எனும் மூன்றலங் கடையே. (29)

51. உஊ ஒஓ என்னும் நான்குயிர்
வஎன் எழுத்தொடு வருதல் இல்லை. (30)

52. ஆ எ ஒ
என்னு மூவுயிர் ஞகாரத் துரிய. (31)

53. ஆவோ டல்லது யகர முதலாது (32)

54. உயிர் ஔ எஞ்சிய இறுதி யாகும். (36)
55. கவவொ டியையின் ஔவு மாகும். (37)

56. எ என வருமுயிர் மெய்யீ றாகாது. (38)

57. ஞணநம னயரல வழள என்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி. (45)

47. பன்னீ ருயிரும் மொழிமுத லாகும் (81)

48. உயிர்மெய் யல்லவை மொழிமுத லாகா (82)

49, 50. கசதந பமவுயிர் மெய்யெலாம் முதலாம். (83)

51. வகரம்,
உஊ ஒஓ ஔவொழிந் தன வுடனாம் (86)

52. ஞகரம் அஆ எஒவ் வோடாம் (84)

53. யகரம்
அஆ உஊ ஓஔ வுடனாப (85)

54, 55. ஆவி......அந்தமாம் (107)

56. ...ஈறாம் எகரம் மெய்க்கிலையே (108)

57. ...ஞணநமன யரலவழள மெய் அந்தமாம் (107)

பிறப்பியல் தொடர்பான கலைச்சொற்கள்

அண்ணம்—மேல்வாய்

அண்பல—மேல்வாய்ப்பல்

அணர்தல்—மேல்நோக்கி எழுதல்

ஆடொலி—(Trill) மூச்சுக்காற்று நாமுதலிய உறுப்புகளில் பல முறை அதிரச் செய்யும்போது எழும் ஒலி.

இதழ்—உதடு

உந்தி—கொப்பூழ்

உயிர்ப்பு—வெளிக்காற்று வாய் அல்லது மூக்குவழியாகச் சென்று தொண்டையை அடைந்து பின் நுரையீரலையடைந்து, மீளவும் தொண்டையை அடைந்து பின் வாய் அல்லது மூக்குவழியாக வெளிப்படுவது—இது முழுமூச்சு.

உயிர் மூன்றுவகை 1. முன்உயிர் 2. பின்உயிர் 3. நடுஉயிர்

உரசொலி--ஒலியெழுப்பிகள் தம்முள் இயைந்து உயரப் போக்கிலோ (Vertical) படுக்கைப் போக்கிலோ (horizontal) மிகவும் குறுகிய இடைவெளியை உண்டாக்கும்போது அதன் வழியே அடைபட்ட மூச்சுக்காற்று பிழியப்படுவதுபோல் உரசிக் கொண்டு செல்லும்போது உண்டாம் ஒலி.

உரசொலியுடையன—ய், வ்

ஒலியறைகள் மூன்று—1. நெஞ்சறை 2. மிடற்றறை 3. தலையறை

ஒலியன்—ஒலிவடிவான எழுத்து

ஒலியெழுப்பிகள் 1. பல் 2. இதழ் 3. நா 4. அண்ணம்

ஒற்றல்—நான்றாகச் சேர்தல்

குரல்வளை

குரல்வளை மடல்

கூர்நா ஒலியுடையன: ற் ன் ர் ழ்

தட்டொலி—(Flap) மூச்சுக்காற்று முதலியன உறுப்புகளை ஒரு முறை அதிரச் செய்யும்போது எழும் ஒலி.

தடையொலி—(வல்லெழுத்தொலி) காற்றுத் தடைபடுதலின் எழாத ஒலி. இது வல்லெழுத்துக்குரியது. உயிரொலியுடன்தான் வல்லொலி எழும்.

தலை

தலைப்பகுதி—மூச்சுக்காற்று மேற் செல்லும் தொண்டை, வாயறை, மூக்கறை ஆகியன.

தலையறை—நுரையீரலின் உயிர்ப்பைக் குரல்வளை ஒலியாக மாற்ற, அவ்வொலியைப்பேச்சொலியாக மாற்றுமிடம்.

தொடரொலி—(இடையின எழுத்தொலி) காற்று தடையில்லாதது. மருங்கொலி, ஆடொலி, உரசொலி, உயிர்ப்போலியொலி என நால்வகையுடையது.

நடுஉயிர்—முன்உயிராகவும் பின்உயிராகவும் இல்லாதது. அ, ஆ.

நா

நாவிளிம்பு: நாவின் இருபக்க ஓரம்

நெஞ்சறை — (நுரையீரல்) உந்திக்காற்றின் தொழிலால் உயிர்ப்பது.

நெஞ்சு—(நுரையீரல்)—ஒலியுண்டாக்கும் மூச்சுக்காற்றின் பிறப்பிடம்

பல்

பின்உயிர்: உ ஊ ஒ ஓ ஔ.

பேச்சுப்பொறிகள்—நுரையீரல், குரல்வளை மடல்கள், மேல் தொண்டை, வாயறை, மூக்கறை

மருங்கொலி—பேச்சுக்குழலின் நடு இடம் அடைபட்டு மூச்சுக் காற்று வாயின் இருமருங்கிலும் வெளியேறும்போது பிறக்கும் ஒலி.

மருங்கொலியுடையன. ல், ள்

மிடற்றறை—(குரல்வளை) நுரையீரல் செய்யும் உயிர்ப்பின் மூலம் ஒலியை எழுப்பும் இடம்

மிடறு—மூச்சுக்காற்று செல்லும் வழியில் உள்ள குரல்வளை மடல்களும் குரல்வளையும்

முன் உயிர்—இ ஈ எ ஏ ஐ.

மூக்கறை—ஒலிகளை மாற்றியமைக்கும் இடம்

மூக்கின் இரட்டைநிலை—காற்றறைகள்போல் தொழிற்படுவதும் பல்முதலிய உறுப்புக்கள்போல் ஒலியை மாற்றுவதும்.

மூக்கு

மூக்கொலி—(மெல்லெழுத்தொலி) இதுவும் வல்லொலிபோலந் தடையொலியுடையது. ஆயினும் தடைபடும் காற்று மூக்கின்வழியாக வரும்போது எழும் ஒலியே மூக்கொலி.

மெய்யுற ஒற்றல்—வடிவம் தோன்ற நன்றாகப் பொருந்துதல்.

மெய்யொலி வகைகள்—1. தடையொலி 2. மூக்கொலி 3. தொடரொலி.

வருடுதல்—தடவல்

வருடொலி—இயங்குறுப்பாகிய நாநுனி குறுகி மேல் எழுந்து உள் நோக்கி வளைந்து பின் விரைந்து விழும்போது இயங்காவுறுப்பில் வேகமாக மேதுவதால் எழும் ஒலி.

வருடொலி எழுத்துகள்: ர், ழ், ள்.

வாயறை—ஒலிகளை மாற்றியமைக்கும் இடம்

விரிநா ஒலியுடைய எழுத்துகள்—த் ந்

தொழில் உறுப்புகளும் பிறக்கும் எழுத்துகளும்

	வாய் அங்காப்பு	பல்	இதழ்	நா	மூக்கு	அண்ணம்
உயிர்	அ ஆ	இ ஈ எ ஏ ஐ	—	இ ஈ எ ஏ ஐ	—	இ ஈ எ ஏ ஐ
வல்லெழுத்து	—	த	ப	க ச ட த ற	...	க ச ட த ற
மெல்லெழுத்து	—	ந	ம	ங ஞ ண ந ன	ங ஞ ண ந ம ன	ங ஞ ண ந ன
இடையெழுத்து	—	வ	வ	ய ர ல ழ ள	—	ய ர ழ ல ள

ஒலியுறுப்புகளும் அவற்றின் பாகுபாடும்



*தொல்காப்பிய மொழியியல் - பக். 21இல் உள்ளபடி.

பயன்படுத்தப்பெற்ற நூல்கள்

1. தொல்காப்பியம்—எழுத்ததிகாரம்—இளம்பூரணம்
   சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக
   வெளியீடு எண் 800. முதற்பதிப்பு. 1955.

2. தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம்
   சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு
   எண் 17. ஆறாவது பதிப்பு. 1972.

3. தொல்—எழுத்து—குறிப்புரையுடன்
   டாக்டர், பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார்,
   திருவையாறு, பி. சு. சாமிநாதன் பதிப்பு. 1937.

4. தொல்—எழுத்ததிகார ஆராய்ச்சி
   வே. வேங்கடராசுலு ரெட்டியார்,
   சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1944.

5. தொல்—எழுத்து—இளம்பூரணம்
   திரு—அடிகளாசிரியர் பதிப்பு.
   கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர். 1969.

6. தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம்
   சி. கணேசய்யர் பதிப்பு, இலங்கை, சுன்னாகம்,
   திருமகள் அழுத்தகம் வெளியீடு 1952.

7. தொல் எழுத்து—நச்சினார்க்கினியம்
   இராம—கோவிந்தசாமி பிள்ளை பதிப்பு
   தஞ்சைச் சரசுவதிமகால் வெளியீடு, 1957.

8. அவிநயம்—பதிப்பு க. ப. அறவாணன்
   ஜைன இளைஞர் மன்றம், சென்னை-17. (1975)

9. இலக்கண விளக்கம்
   சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. (1973)

10. தொன்னூல் விளக்கம். பதிப்பு: ச. வே. சுப்பிரமணியன்
    தமிழ்ப்பதிப்பகம், அடையாறு, சென்னை-20. (1978)

11. நன்னூல். டாக்டர், உ. வே. சா. பதிப்பு (4) (1953)

12. நேமிநாதம். கழக வெளியீடு, சென்னை. (1964)

13. பேரகத்தியத்திரட்டு. திரட்டியவர் ச. பவானந்தம் பிள்ளை. (1912)

14. முத்து வீரியம். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. (1972)

15. வீரசோழியம்.
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை. (1970)

16. சுவாமிநாதம். இலக்கணத் தொகை—எழுத்து. பதிப்பு: ச. வே. சுப்பிரமணியன், விற்பனை உரிமை: பாரி நிலையம், சென்னை. (1967)

பிறப்பியல் தொடர்ச்சியாகப் பார்க்கவேண்டிய நூல்கள் சில.

1. காப்பியநெறி—எழுத்தியல்
தே. ஆண்டியப்பன்
வெற்றிவேல் பிரசுரம், மதுரை-1. (1976).

2. தமிழ் எழுத்து வைப்புமுறை
ஆபிரகாம் அருளப்பன்
அருள் அச்சகம், பாளையங்கோட்டை
திருநெல்வேலி, (1967).

3. தமிழ்மொழி வரலாறு (தமிழ் ஆக்கம்: ச. செயப்பிரகாசம்)
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
சர்வோதய இலக்கியப் பண்ணை, மேல மாசி வீதி,
மதுரை (1973).

4. தொல்காப்பியர்
ப. அருணாசலம்
தமிழ்ப்புத்தகாலயம்
576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5. (1975).

5. தொல்காப்பிய மொழியியல்
பதிப்பு: ச. அகத்தியலிங்கம் + க. முருகையன்
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு (1972.)

6. தொல்காப்பியமும் மொழியியலும் (கட்டுரை)
மேலைச்சிவபுரி சன்மார்க்க சங்க மலர்
மேலைச் சிவபுரி. (1955-56)

7. மொழிநூல்
மு. வரதராசன்
சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக
வெளியீடு. (1947)

8. மொழியியல் II-வாழ்வும் வரலாறும்
ச. அகத்தியலிங்கம் + க. புஷ்பவல்லி
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.
அண்ணாமலை நகர். (1977)

9. மொழியும் மொழியியலும்
சு. இராசாராம்
சிவகாமி அச்சகம், அண்ணாமலை நகர்,
சிதம்பரம். (1973.)

10. ஒலியியல்
சு. இராசாராம்
அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்
அண்ணாமலை நகர். (1980).

11. மொழியியல்
திருமலை. மா. சு. கருணாகரன், கி.
பாரிநிலையம் சென்னை. (1970).

12. தொல்காப்பியத் தெளிவு
சோ. ந. கந்தசாமி
அபிராமி பதிப்பகம்
அண்ணாமலை நகர். (1977).

சொல்லகராதி

(எண்—பக்க எண்)

அஃகடிய—அக்கடிய 68
அஃசிறிய—அச்சிறிய 63
அஃது—அது 71
அஃபெரிய—அப்பெரிய 68
அகத்தியலிங்கம் 18
அங்காத்தல் 20
அசையில் உயிர் 60
அடிகளாசிரியர் 18, 19, 77
அடியண்ணம் 34
அடைப்பொலி 11
அண்ணத்திடை 35
அண்ணம் 2, 40, 44, 47, 52, 60
அண்ணமுடியைத் தொடும் ஒலி 37
அண்ணமுதல் 34
அண்ணாந்து பார்த்தல் 46
அண்ணாமலை நகர் 62
அண்பல் அடி 40
அண்பல்முதல் 44
அண்பல்—வினைத்தொகை 22
அணர் 46
அணர்தல்—மேல்நோக்குதல் 46
அணர்ந்து பார்த்தல் 46
அணரி 47
அணரி—வினையெச்சம் 46
அத்துச்சாரியை 78
அதிவியாப்தி 65
அந்தணர் மறை—வடமொழி வேதம் 79
அந்நுவயம் 8, 58, 65
அநுதாத்தம் 29
அநுஸ்வாரம் 67
அபானன்—மலக்காற்று 15
அபிராமி பதிப்பகம் 62
அருணாசலம், ப. 12.
அவ்—ஔ 57
அவ்வை—ஔவை 57
அவிநயம் 4, 18
அவிநயனார் 18
அளபு—மாத்திரை 75
அளபெடைகள் 65
ஆஅ 65
ஆங்கில மொழியெர்ப்பு (ஆ.மொ.) 3, 16, 19, 21, 26, 27, 32, 34, 35, 37, 40, 43, 47, 49, 53, 55, 57, 60, 63
ஆசிரியர் 2, 17, 29, 33, 38, 42, 44, 46, 68, 70, 75
ஆசிரியர் தொல்காப்பியர் 17
ஆசிரியன் 76
ஆடொலி 12
ஆண்டியப்பன், தெ. 14
ஆணி—மரம் 59
ஆபிரகாம் அருளப்பன் 14, 80
ஆய்தத்துக்கிடம் நெஞ்சு 70
இடவரையறை 71
இடைச் செருகல் 7
இடைநா 34, 35, 39
இடைநா வண்ணம் 42
இடையண்ணம் 34, 35, 39, 49
இணைப்பொலியன் 71, 72
இதழ் 2
இதழ்—இரண்டாம் வேற்றுமை 54

இந்திய இலக்கணிக் கொள்கைகள் 13
'இ' மிடற்றெழுவளியிசையில் பிறக்கும் 60
இயங்காவுறுப்பு 11, 12, 49, 60
இயங்குறுப்பாகிய நாநுனி 49
இயங்குறுப்பு 41
இரண்டாம் வேற்றுமை 23
இராசம், எஸ். 31
இலக்கண விளக்க நூலார் 52, 59, 68
இலக்கண விளக்கம் (இல.வி.) 4, 16, 19, 22, 26, 32, 34, 36, 40, 43, 47, 49, 54, 55, 57, 60, 65
இலக்குவனார் (இல.) 2, 3, 16, 19, 21, 26, 27, 32, 34, 35, 37, 40, 43, 47, 79, 53, 55, 57, 60 63
இலதை 77
இளம்பூரண அடிகள் 69
இளம்பூரணத் தொடர் 77
இளம்பூரணர் 1முதல்
இன்சாரியை 78
ஈஇ 65
ஈரிதழ் ஒலி 57
உச்சாரணம் 45
உடல்நூல் 15
உடைய—குறிப்பு வினை 23
உதாத்தம் 29
உதானவளி 8
உதானன்—ஒலிக்காற்று 15
உதானன் என்ற உடல்வாயு 6
உந்தி 2
உபஸம்காரம் 20
உயரப்போக்கு 56
உயிர்க்கிழவன் 20
உயிர்ப்பொலி 12
உயிர்ப்போலிகள் 57
உயிரொலி 12
உயிரொலி மயக்கங்கள் 59
உரசொலி 11, 59
உரலாணி 58. 60
உருபொலியன் 71, 72
உரைகாரர்கள் 33, 35, 54, 55
உரையாசிரியர் 79
உள்நாக்கு 12
உறழ்ச்சிவாரம் 73, 74, 79
எஃகு 64
எஃகு—எக்கு 67, 68
எடுத்தல் படுத்தல்நலிதல் விலங்கல் 29
எண்முறை நிலை 2
எழுத்தாந் தன்மை 74
எழுத்தொலி 14
எழுவாய் 38
ஏழாம் வேற்றுமையுருபு 33
ஐகாரக் குறுக்கம் 72
ஐகாரம் 75
ஒருசொல் நீர்மை 5
ஒருசொல் நீர்மைப்படுத்தல் 7
ஒலிக்காற்று 14
ஒலிச்சவ்லடை 14
ஒலிநூல் 15, 56
ஒலிநூலார் 57
ஒலியூக்கியாகிய மூக்கறை 11
ஒலியெழுப்பி 11, 56
ஒற்றுதல் நன்கு தாக்குதல் 48, 52
க்ங் 38
க 33
கங 42
கட்டுரைச்சுவை 41
கண் என்றது முன்புறம் 58
கண்டட்டம் 20

கந்தசாமி, சொ. நா. 62
கமீல்சுவலபில் (க.சு.) 2, 3, 16, 16, 21, 26, 27, 32, 34, 35,37, 40, 43, 47, 49, 53, 55, 57,60, 63
கரணம் 34
கலைச் சொற்கள் 10
கற்றீது—கஃறீது 66
கன்னடமொழி 48
காசியாது 67
காசு 67
காட்சி—இடம் 65
காட்சி—நெஞ்சு 64
காட்சி—நெஞ்சுவளி 66
காப்பியநெறி 14
கால்டுவெல் 46
காற்றறை 11, 39
கிருகரன்—தும்மற்காற்று 15
குரங்கு 70
குரல்வளை 12
குரல்வளை மடல் (தொண்டை) 12, 60
குற்றியலிகரம் 2, 17, 69, 71
குற்றியலுகரம் 2, 17, 69, 71
கூர்நா நுனி 49
கூர்மன்—இமைக்காற்று 15
கேண்மியா 64, 71
கேரள பாணினீயம் 45
ங 33
ச்ஞ் 39
ச 34
சஞ 42
சமஸ்கிருதச் செல்வாக்கு 37
சமானன்—நிரவுக்காற்று 15
சார்பிற்றோற்றத்தெழுத்து 1
சார்பு சார்பாகிய எழுத்து 65
சித்தாந்த கௌமுதி 59
சிலம்பு—அடியார்க்கு நல்லார் 15
சிவலிங்கனார் 55, 70
சிறுகுழந்தைகள் 46
சிக்ஷை 8
சுக்லயசுர்வேத ப்ராதிசாக்யம் 20, 45
சுப்பிரமணிய சாஸ்திரியார் (சுப்பிர.) 1, 6, 17, 20, 22, 26, 28, 33, 34, 35, 37, 41, 44, 48, 51, 54, 58, 61, 64
சுவடிவேறுபாடு (சு. வே) 1, 2, 3, 5, 6, 16, 17, 26, 28, 33, 35, 36, 40, 41, 43, 53, 54, 61, 63
சுவாமி நாதம் (சுவாமி.) 4, 16, 19, 22, 26, 32, 34, 36, 40, 41, 43, 47, 49, 54, 55, 58, 60, 63
செவியறை 7
செயப்படு பொருள் 23
செயப்பாட்டுவினை 7
செயவென் வாய்பாடு 54
ஞ 34
ட்ண் 39
ட 35
டகரமெய் 36
டகாரம் 36
டண 42
ண 35
ணகரமெய் 36
ணகாரம்
த 34
தகாரம் 40
தட்டொலி 12
தடையொலி 39
தண்டியம் 59
தந்தமூலம் 45
தமிழ்எழுத்துவைப்புமுறை 15
தமிழ்மொழி வரலாறு 10, 16, 31, 32, 37, 57, 59
தலை 2

தலையறை 10
தலைவளி 29, 61, 6', 67
தவ்வை—தௌவை 57
தன்கோட்கூறல் 73
தனஞ்சயன்—வீங்கற்காற்று 15
தாலவ்யம் 23, 59
தாலு 9, 23
துஸ்கம்—துக்கம் 67
தென்மொழி 75
தேவதத்தன்—கொட்டாவிக் காற்று 15
தைத்ரீயப்ராதி சாக்யம் 9, 30, 42, 46, 59
தொண்டை 10
தொல்காப்பியஉரையாளர் 52
தொல்காப்பிய மொழியியல் 12, 21, 25, 25, 39, 43, 46, 53, 72
தொல்காப்பியர் 10, 11, 12, 13, 18, 32, 36, 39, 53, 56, 62, 70, 71, 72, 80
தொல்காப்பியனார் 10, 62, 67
தொல்லாசிரியர் 80
தொன்னூல் விளக்கம் (தொன்) 4, 16, 60
தோற்றரவு 5
ந 36
நகாரம் 40
நச்சினார்க்கினியர் 1முதல்
நவ்வி—நௌவி 57
நன்னூல் (நன்) 4, 16, 19, 22, 26, 32, 34, 36, 40, 43, 47, 49, 54, 55, 57, 60, 63
நன்னூல் விருத்தியுரைகாரர் 24
நன்னூலாசிரியர் 38
நன்னூலார் 15, 17, 51, 59, 62,
நா 2
நா அதிகாரம் 43, 44, 50
நாகன்—விழிக்காற்று
நாகியது 67
நாகு 64, 67
நாடு 67
நாத ஒலியில் ஒலித்தல் 45
நாநுனி 40, 44, 46, 51, 60
நாமுடி 40
நாவடி 34
நாவண்ண ஒலி 37
நாவதிகாரம் 44
நாவளை ஒலி 37
நாவிளிம்பு 51, 53
நாவிளிம்பு ஒலி 57
நாவின்வேர் 8
நிரல்நிறைவகை 37, 38
நுண் அலகுகள் 14,
நுந்தை 64
நுரையிரல் 9, 10, 12
நுவன்றிசின்—இறந்தகாலத் தன்மை வினைமுற்று 76
நுனிநா 36, 39, 43, 47, 60
நுனிநாஒலி 37
நுனிநாவண்ணம் 42
நுயனிண்ணம் 36, 39
நூன்மரபு 1, 2, 64
நெஞ்சறைய 10
நெஞ்சு 2
நெஞ்சுவளி 3', 37, 70
நெடுங்கணக்கின முறை 44
நெடுங்கணக்கு 33, 42, 44
நெடுங்கணக்கு முறை 42
நெடுங்கணக்கு முறைமை 43
நேமிநாதம் 3
ப்ரசயம் 29
பஃது—பத்து 67
பகாரம் 42
பசி–பை–பைங்கிளி 59

படுக்கைப்போக்கு 56
பயனிலை 5, 38
பர்ரோ 59
பரை 74
பல் 2
பல்லிதழ் ஒலி 57
பவ்வம்—பௌவம் 57
பவணந்திமுனிவர் 52
பவணந்தியார் 62
பழம்—பளம் 51
பாணினி 13
பாணினிமுனிவர் 8
பாணினீய சிக்கை 10
பாணினீய சிக்ஷை 9, 20, 67
பாவாணர் 15
பிராணன்—உயிர்க்காற்று 15
பிற இலக்கண நூல்கள் (பி.இ நூ.) 3, 16, 19, 21, 26, 27, 32, 34, 35, 37, 40, 43, 47, 49, 53, 55, 57, 60, 63
பிறப்பாக்கம் 39
பிறன்கோட் கூற்று நேர்ந்து உடம்படுதல் 76
பிறன்கோட் கூறல் 75, 76, 78
புதுச் சூழ்நிலை 72
புலவர் 28
புஷ்பவல்லி 18
பெருந்தேவனார் 62
பேச்சுக்குழல் 39
பேச்சொலிகள் 12
பேரகத்தியம் (பேர.) 4, 16, 19, 22, 26, 32, 34, 36, 40, 43, 47, 49, 54, 55, 58, 60, 63
பேராசிரியர் 4, 19, 73
பைசந்தி 74, 75
பொருளனியல் 72
மகரக்குறுக்கம் 72
மகரம் 72
மகாரம் 42
மத்திமை 74, 75
மருங்கொலி 11
மவ்வல்—மௌவல் 57
மாத்திரை 17
மாற்றொலிகள் 71, 72
மிடற்றுவளி 29, 61, 70
மிடற்றெழுவளியிசை 58
மிடறு 2
மீனாட்சி சுந்தரனார், தெ. பொ. 10
முட்டது-முஃடது 66
முடிநா 36, 47
முடியணம் 36
முத்துவீரியம் (முத்து.) 16, 19, 22, 26, 32, 34, 36, 40, 43, 47, 49, 54, 55, 57, 60, 63
முதல் அண்ணம் 33
முதல்நா 33, 38, 39
முதல் நா வண்ணம்—வேற்றுமைத் தொகை 33
முதல் நா வண்ணம் 42
முதற் சூத்திரவுரை 55
முந்துவளி 2
முற்கு 77
மூக்கறை 10, 39
மூக்கு 2
மூக்கொலி 39
மூச்சுக்காற்று 12, 39, 49, 56, 60
மூச்சுக்குழல் 10
மூர்த்தம் 46
மூர்த்தா (அண்ணம்) 23
மூலாதாரம் 74, 75, 78
மெய்—பொருள் 77
மெல்லொலி 39
மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழி யாததனை முட்டின்று முடித்தல் 64

மொழிமரபு 1, 2
மொழிநூல் 12
மொழிநூல் வல்லோர் 48
மொழியியல் வாழ்வும் வரலாறும் 18
மொழியியலாளர் 18
ய
யகரம்
ர 47
ரகாரம் 47
ல் ள்—மருங்கொலிகள் 53
வகரமெய்யும் உரசொலியே 56
வடமொழி 12, 13, 45, 66, 75
வடமொழியிலக்கணங்கள் 75
வடமொழி வேதங்கள் 79
வர்த்ஸம் 45
வரிவடிவம் 46
வருடுதல்—பட்டும்படாமலும் தடவுதல் 49, 52
வல்லொலி 39, 45
வவ்வல்—வௌவல் 57
வளித்தன்மை 74
வாக்யபேதம் 38
வாயறை 11, 39, 55, 60
வாயறையின் உறுப்புகள் (நா, இதழ்) 12
வாரம்—அளவு—தன்மை 74
விசர்க்க ஒலி 66
விசர்க்கம் 67, 68
வியானன்-தொழிற்காற்று 15
வீரசோழியவுரை 62
விளிம்பு—ஓரம் 52
வீடியாது 67
வீரசோழியம் 3
வீரசோழியவுரைக்காரர் 8
வெடிப்பொலி 32
வெள்ளைவாரணனார் (வெள்ளை.) 2, 9, 38, 43, 46, 52, 62
வெற்றெனத் தொடுத்தல் 38
வேங்கடராசுலு ரெட்டியார் (வேங்கட.) 2, 9, 20, 23, 30, 33, 42, 45, 48, 51, 58
வேற்றுமைத்தொகை 33
'ழ்' ஒரு சிக்கலான ஒலி 49
ழ 47
ழகாரம் 47
ற 43
றஃகான் 43
ன 43
னஃகான் 43
ஸ்ரீ வஜ்ஜல சின சீதாராம ஸ்வாமி சாஸ்திரியார் 23
ஜிஹ்வாமூலம் 8
ஸ்பர்ஸம் 33
ஸ்வரிதம் 29
ஹநுமூலம் 34
allophone 71
alveolar 46
apieal 46
Blade contact 36
Blade or tip 39
centre 39
contrast 37
d 45
distinctive feature 14
distribution 72
distributional restriction 71
dome 39
dorsum 39
Environment 72
Filter 14
Flap 12
Frication 11, 48
gingival 42
hard palate 39
juncture 72
juncture phoneme71
laminal 42

lateral 11
lex 39
liquid 48
Modified 14
Morphophoneme 71
normal 39
Open opproximation 12
Opproximent 12
Phones 18
Sankaran, C. R. 12
Science of phonemics 12
soft—palate 39
sound source 14
source of energy 12
stop 11
Tamil culture 12
Tamil literature 12
Tense 39
Trill 12
vowel 12

நூற்பா முதற்குறிப்பகராதி

(எண் — பக்க எண்)

அஃதிவண் நுவலாது 75
அண்ணம் சேர்ந்த 57
அண்ணம் நண்ணிய 39
அணரி நுனிநா 43
அவ்வழி பன்னீருயிரும் 16
அவ்வாறெழுத்தும் 37
அவற்றுள். அஆ 19
இ ஈ எ ஏ 21
இதழ்இயைந்து 53
உ ஊ ஒ ஓ 26
உந்திமுதலா 2
எல்லா எழுத்தும் 72
ககார ஙகாரம் 32
சகார ஞகாரம் 34
சார்ந்து வரினல்லது 62
டகாரணகாரம் 34
தத்தம் திரிபே 27
நாவிளிம்பு வீங்கி 49
நுனிநா அணரி 47
பல் இதழ் இயைய 55
மெல்லெழுத்தாறும் 60

தொல்காப்பிய உரைவளம் வெளியீடுகள் பற்றிய கருத்துரைகள்

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் பற்றி

○ *தாங்கள் அன்பு கூர்ந்தனுப்பிய தொல்காப்பியம்—சிறப்புப் பாயிரம் உரைவளம் பகுதிபெற்று மகிழ்ந்தேன். தங்கள் உரைவளப் பகுதி ஆராய்ச்சிப் பதிப்பாக அமைந்துள்ளமை அறிஞர்களாற் பாராட்டத் தருவதாகும்.

இத்தகைய தமிழ்ப் பணிகள் பல விரைந்து நடத்தற்கு உறுதுணை புரியும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அவர்கட்கு நமது பாராட்டும் வாழ்த்தும் என்றும் உரியவாகும்.

24—10—1980 க. வெள்ளைவாரணன்
மதுரை, காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

○ *தாங்கள் சிறந்த ஆய்வுரையுடன் வெளியிட்டுள்ள தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம் நூல் கண்டு மகிழ்ந்தேன். தொன்மைப் பேராசிரியர் கருத்துக்களை ஒருங்கு திரட்டித் திறனாய்வு செய்திருப்பது விழுப்பயன் தருவதாகும்.

28—2—1981. சாந்தலிங்க—இராமசாமியடிகள்
பேரூர் ஆதீனம், கோயமுத்தூர்.

நூன்மரபுபற்றி

○ †தாங்கள் அன்புடன் அனுப்பிய நூன்மரபை முழுவதும் படித்தேன். நூலுள் பதிப்பாசிரியரின் மதிநுட்பம் நூலோடுடைய திறன் நன்கு பளிச்சிடுகின்றது.

1. பழங்கால உரையாசிரியர்களைப்போலவே தற்கால ஆசிரியர்களாம் திரு. வெள்ளைவாரணனார், திரு. வேங்கடராசுலு ரெட்டியார், திரு. சுப்பிரமணிய சாஸ்திரியார் போன்றவர்கள் தமிழுக்கு எவ்வளவு வளம் சேர்த்துள்ளனர் என்பது தங்கள் நிறுவன வெளியீடாகிய தொல்காப்பிய உரைவளத்தால் ஒருசேர உணர முடிகிறது.

---

* பதிப்பாசிரியர்க்கு எழுதிய அஞ்சல்.

† இயக்குநர்க்கு எழுதிய அஞ்சல்.

2. நூற்பாக்களின் சிறப்பு விளக்கமாக 'உரைச் சொற்றொடர் விளக்கமும்' பிற இலக்கண நூல்களின் நூற்பா ஒப்புமைப் பகுதியும் இணைத்துள்ளமை பதிப்பைப் பன்முறை பாராட்டுவதாக உள்ளது.

3—3—1981

தெ. முருகசாமி
முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி.

(குறிப்பு : 'தற்காலத்தில் வளர்ந்துவரும் மொழியியல் கருத்துக்களை (Modern Linguistics) தொல்காப்பியத்துடன் இணைத்துக் காட்டுதல் நன்று' என்று இவர் கூறிய கருத்து அடுத்து வெளிவந்துள்ள மொழிமரபு உரைவளத்தில் மேற் கொள்ளப்பட்டது.)

○ *பதிப்பாசிரியர் பின்இணைப்பாக உரைச் சொற்றொடர் விளக்கம் முதலியவற்றைத் தக்கவாறு முயன்று அமைத் திருத்தல் ஆய்வார்க்குப் பெரும்பயன் விளைப்பதாகும். ஆய்வுலகிற்குப் பெரிதும் பயன்தரும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டிருக்கும் இம்முயற்சி மேலும் மேலும் சிறக்க விழைகிறேன். வணக்கம்.

30—3—1981

கொ. இலட்சுமணசாமி
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்.

○ *அன்புடையீர்,

வணக்கம். தாங்கள் அனுப்பிவைத்த தொல்காப்பியம்—எழுத்ததிகாரம்—உரைவளம்—நூன்மரபு கிடைக்கப் பெற்றேன்.

தொல்காப்பிய உரைவளப் பதிப்பு முயற்சி இன்றைய தமிழாராய்ச்சி உலகிற்கு இன்றியமையாத ஒரு பெரும் பணி யாகும். இலக்கணங்களைத் தொகுத்துக் கொடுத்த தாங்கள் உரைவளத் தொகுப்புப் பணியினை மேற்கொண்டது

* இயக்குநர்க்கு எழுதிய அஞ்சல்.

தக்கதே. இலக்கணத் தொகுப்புப் பணிபோன்று இப்பணியும் இனிது நடைபெற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நூல் அழகிய முறையில் நல்ல கட்டமைப்புடன் தயரர் செய்யப்பட்டது மகிழ்ச்சிக் குரியது. இவ்வாறே தொடர்ந்து வெளிவருதல் வேண்டும்.

உரைகள் மட்டுமே தொகுத்தலைப் பணியாகக் கொள்ளாது, துணையாகப் பல குறிப்புகளைச் சேர்ப்பதும் தொகுப்பாசிரியர் கருத்துக்களை வழங்குவதும் நூலில் இடம் பெற்றிருக்கிறபோது இப்பதிப்பினைப் பல நோக்கத்திலும் பயன்பாடு உடையதாக்குவதற்கு மேலும் முயலுதல் நல்லது. மேலும் இது போன்று மற்றும் ஒரு முயற்சி மேற் கொள்ளுதல் அரிதாகலால் (இப்பதிப்பு வந்த பின்னால் அப்பணி வீண் ஆகும்.) அப்பதிப்பினை மேலும் சிறப் புடையதாக்குதல் இன்றியமையாததாகிறது.

என் நோக்கத்தில் சில கருத்துகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆராய்ச்சிப்பணி நோக்கில் அவற்றை வரவேற்பீர்கள் என நம்புகிறேன்...........

9—4—1981

டாக்டர் தி. முருகரத்தினம்
இணைப் பேராசிரியர், திருக்குறள் ஆராய்ச்சித்துறை
மதுரை—காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-21.

குறிப்பு: இவர்கள் கூறியுள்ள கருத்துகள் ஏற்கப்பட்டுக் கூடியவரையில் அடுத்த வெளியீடாகிய மொழிமரபு உரை வளத்தில் மேற்கொள்ளப்பட்டன.

○ This volume is the second in the series of Tolkappiyam variorum edition containing all the available commetnaries on Tolkappiyam. It deals with the grammatical conventions in regard to orthography and phonlogy (called Ezhuthu in Tamil). There are thirty-three sutrams in Tolkappiyam on this-defining the name, number, nature, pronunciation, measure, classification etc of vowels...............

The editor has given the sutrams and their commentaries by Ilampuranar, Nachinarkiniyar, Sviagnana Munivar,

Venkatarajulu Reddiar, Subramania Sastriar adding his own at the end. The commantaries of Vellaivaranar and Adigalasiriyar are also given for some sutrams. The discussions about the nature of aaytham and its relation ship, to the sanskrit, 'Asratham' (pp. 53-58) by vellaivaranar is interesting. A cymparison of Tolkappiyam with other grammatical works like Avinayam, Neminatham, Veera chozhiam and Nannool has been made wherever necassory.

In an appendix the editor has given a glossary of grammatical terums occuring in the commentaries with page references and corresponding sutrams in other grammatical works for each of Tolkappiyam sutrams. This is very useful and infermative...........

25—4—1911. R. KRISHNAMORTHY
Indian express (Madurai)

○ தொல்காப்பியமே நமக்குக் கிடைத்துள்ள முதல் இலக்கண நூல். இது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையுடையது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களையுடையது. இந்த 27 இயல்களும் பலர் எழுதியுள்ள உரைகளைத் தொகுத்து, தனித்தனியே உரைவளம் என்ற பெயரில் நூல்களை வெளிக்கொணரும் முயற்சியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள முதற் புத்தகம் இது. திரு. ஆ. சிவலிங்கனார் மிக அழகாக, செவ்விதாக இதனைத் தம்முடைய உரையையும் சேர்த்து ஆராய்ந்திருக்கிறார்.

....

சிவலிங்கனார், இளம்பூரணர், 'ணகரம் வீடுபேற்றுக்குரிய ஆண்பாலை யுணர்த்துதற் சிறப்பால் பின்வைக்கப்பட்டது' என்று கூறியதற்கு உரைவகுக்கும் சிறப்பு மேலானது.

சார்பெழுத்தை உணர்த்தும் நூற்பா, நான்கு அடிகளைக் கொண்டது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் (1955) பதிப்பில் இது மூன்றடிகளில் அமைந்துள்ளது இது தவறு. பதிப்பாசிரியர் கூறும் காரணம் சாலச் சிறந்ததாகும்.

இங்ஙனம் பலவிடங்களில் இவர் கூறும் உரைநயம் பல உரைகளை ஆய்ந்த திறமையோடு எழுதப்பெற்றதாகும். இந்நூல் ஆங்கில மொழியினருக்கும் பயன்பட வேண்டும் என்ற முறையில் ஓர் ஆங்கில முன்னுரையும், டாக்டர்

இலக்குவனார், டாக்டர் தமிழ் கவலபில் இவ்விருவருடைய ஆங்கில மொழி பெயர்ப்புகளும் இப்புத்தகத்தில்தான் காணப்பெற்றுள்ளன. நூற்பாக்களின் பெயர்ப்பு மூல நூலின் சூத்திரங்களுக்குப் பொருத்தமானது.

சொல்லகராதியும் அடிக்குறிப்புகளும் பயனுடையன.

இத்தகை வெளியீடுகளின் பிரதிகள் தமிழ் அறிஞர்களுக்கு மிகவும் பயனளிப்பவையாகும்.

26—4—1981.

ச. கு. கணபதி
தினமணிசுடர்.

மொழிமரபுபற்றி

○ *...உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இத்தகைய ஆராய்ச்சிப் பணியினைத் தக்கவர்களைக் கொண்டு இறம்பட நிகழ்த்தி வருவது அறிஞர்களாற் பாராட்டத் தக்கதேயாகும்.

பதிப்பாசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் இப்பதிப்புக்கு இன்றியமையாத ஆராய்ச்சிக் குறிப்புக்களை ஒருங்கு திரட்டி வரிசைபெற அமைத்துத் தமது மதிநலஞ் சான்ற ஆய்வுரைகளையும் ஆங்காங்கே யமைத்திருப்பது சிறந்த புலமைத் திருப்பணியாகும்.

நூல் அழகிய தோற்றமும் அரிய ஆராய்ச்சிக் கருத்துகளும் அமைந்து வெளிவருவதற்கு இன்றியமையாத ஆக்கமும் ஊக்கமும் நல்கி இத்தகைய பணிகள் பல சிறப்புற உறுதுணையாய் விளங்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநரான தங்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டினையும் வாழ்த்தினையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

18—8—1981.

க. வெள்ளைவாரணன்
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

○ As the other two previous volumes, this volume is comprehensive and self-contained. This is a scholarly edition and is fit for further research study by scholars and students.

20—9—1981

Indian Express (Madurai)

* இயக்குநர்க்கு எழுதிய அஞ்சல்.

நுண்பொருட் கோவை

நுண்பொருட் கோவை

அரசஞ் - சண்முகனார்

பாயிரம்

நன்னீரை வாழிய நெஞ்சே நவைதீர்ந்த
முன்னோர் முடிபின் முரணும—லெந்நூற்கு
மொண்பொருட் கோவை யுரையணங்கை முன்வணங்கி
நுண்பொருட் கோவை நுவல்.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமும் திருவள்ளுவரும் திருக்கோவையாரும் நன்னூலும் முதலிய நூல்களின்கண், யான் என்சிற்றறிவின் ஆராய்ச்சியாற் கண்டவைகளைத் தொகுத்து 'நுண்பொருட்கோவை' எனப் பெயர் தந்து உண்மை விளங்கல் ஒன்றே கருதி எழுதிவரும் நூலுட் சிலவற்றை இச்செந்தமிழ்ப் பத்திரிகை வாயிலாற் பெரியார்க்கு விண்ணப்பஞ் செய்யின், அவை ஒக்குமோ ஒவ்வாவோ என்னும் ஐயமறுமெனத்துணிந்து வெளியிடுகின்றேனுதலான், யான் எழுதிவருவனவற்றுள் ஒவ்வாதன உளவேல் அவை இவையெனக் கருணையாற் றெரிவிப்பின் அப்பேரருட் செயலுக்குத்தக்க கைம்மாறு செய்யும் ஆற்றலின்லேன் என்பது ஒருதலையேயாயினும், அப்பெரியார் கட்டளையிட்டவாறு நடக்குங் கடப்பாடு நீங்கேனென உண்மையோடு அந்நல்லோரைப் பல்லாற்றுனும் பணிந்து, முன்னோர் நூலோடு முரணுமிடத்துச் சிலர் மதங்களை மறுத்தலான் அது கொண்டு என்னை நெறிபிழைத்தேனென வெறுக்காது நூலுரை போதகாசிரியரையும் பிறரையும் எவ்வாற்றுனும் எட்டுணையும் கனவிலும் அவமதியாத எனது உட்கிடையைத் தமது திருவுள்ளத்துக்கொண்டு அருள்செய்ய வேண்டுகின்றேன்.

நூல்

தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

மொழிமரபாராய்ச்சி

(க—வது) "உ ஊகார நவவொடு நவிலா" (சக—வது சூத்திரம்) இதற்கு இளம்பூரணவடிகள் உரையில் ஈண்டா ராய்ச்சிக்கு வேண்டுவ வருமாறு:—

"என்—னின். இதுவும் வரையறை. உகர ஊகாரங்கள் தாமே நின்றும் பிறமெய்களோடு நின்றும் பயில்வதன்றி நகர வகரங்களோடு பயிலா. நவிலா என்றதனுற் சிறுபான்மை நொவ்வுங் கவ்வுமென வகரத்தோடு ஈருதல் கொள்க. இன்னும் இதஞ்னே சிறுபான்மை நகரத்தோடு வரவுண்டேனுங் கொள்க" என்பது.

இக்கருத்துப் போன்றே நச்சினார்க்கினியரும் உரைத்தார்.

இனி, இஃது ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாயின், 'அளவாகு மொழி முதல்' 'அளவிற்கு நிறையிற்கும்' 'அளவு நிறையும்' என்றற்றொடக்கத்த பல சூத்திரங்களில் அளவு எனவும், உரியியலில் 'தெவுக்கொளற் பொருட்டே' எனவும், அகத் திணையியலில் 'முடிவு நிலை மருங்கின்' 'இன்மையதிளி' எனவும், புறத்திணையியலில் 'புடைகெடப் போகிய செலவே' எனவும், களவியலில் 'களவென மொழிப' 'இரவு வலியுறுப்பினும்' 'பிரிவிரங்கினும்' 'வேற்றுவரைவுவரின்' 'அழிவு தலைவந்த' 'அவன் வரவுணர்தல்' எனவும், கற்பியலில் 'சோர்வுகண்டு' எனவும் முறையே அளவு, தெவு, முடிவு, இளிவு, செலவு, களவு, இரவு, பிரிவு, வரைவு, அழிவு, வரவு, சோர்வு முதலிய பல வகர உகர வீற்று மொழிகளைத் தாமே எடுத்துக் கூறுர். இன்னும், இப் பத்தின்மேற் பலவாகிய மொழிகளுள்ள வகர உகரத்தை 'நவிலா' என்றதனானே ஆசிரியர் கொள்ளவைத்தார் என்பது உரையாசிரியர்க்கும் நச்சினார்க்கினியர்க்குங் கருத்தெனின்—வகர உகரத்திலும் மிகக்குறைந்து உசு, முசு, தபு என்னும் இம் மொழியிடத்தன்றி வேறிடத்தீறாகாத சகர உகரத்தையும் பகர உகரத்தையும் வகர உகரத்தை 'நவிலா' என்றதனாற் கொள்ள வைத்தாற்போல, வைத்தல் வேண்டும். அங்ஙனம் கொள்ள வையாமல் "உச்ச கார மிருமொழிக்குரித்து" "உப்ப கார மொன்றன மொழிப" என ஆசிரியர் வரையறை செய்து விதந்து கூறியது என்னோ? இதனான் ஆசிரியர் கருத்து இதுவன்றென்பது விளங்கும்.

இனிப் புரசு, முரசு, பூச்சுமுதற் பல சகர உகரங்களும், பார்ப்பு, வரம்பு, பரப்பு, முதற்பல பகர உகரங்களும் இருப்ப "உச்சகாரமிருமொழி" "உப்பகாரமொன்று" என ஆசிரியர் வரையறை செய்தது என்னையெனின்—இவ்வரையறை சகர பகரத்தோடு ஈறாகும் முற்றியலுகரத்துக்கேயன்றிக் குற்றிய லுகரத்துக்கு இன்றாம் என்பது. இது குற்றியலுகரத்திற்கின்றென எவ்வாற்றாற்கோடு மெனின்—யாண்டும் ஆசிரியர் குற்றிய லுகரத்தை அடையின்றி உகரமெனக் கூறாமையானும், விளி

மரபில் ''ஔவு முவ்வுமேயோடு சிவணும்'' (607) என்ற ஆசிரியர், ஆண்டு உகரம் அடையின்றி நிற்றலான் முற்றுகரமெனக் கொள்வ ரென்று கருதி அவ்வைய மொழித்தற் பொருட்டு, அதன் பின்னர் ''உகரந்தானே குற்றியலுகரம்'' (608) என்றமையானும் என்பது.

அற்றேல், பசு விபு முதலியன வழங்கலான் முற்றியலுகரமும் வரையறை யிகந்ததெனப் படுமாலோவெனின் — ஆசிரியர் அக்காலத்து வழங்கிய மொழியையே வரையறை செய்தா ராகலின், பசு முதலிய ஆரியச் சிதைவுகள் அவர் காலத்தின்பின் வழங்கினவெனக் கொள்ளப்படுமென்பது. அற்றன்று; பசு முதலியன அக்காலத்து வழங்கினும் வடசொல்லாதலிற் கொள்ளார்; திசைச்சொல் வடசொல் நீக்கிச் செந்தமிழ்ச் சொல்லுக்கே இவ்வரையறை கூறினார் எனக்கொண்டால் என்னையெனின்—ஈண்டுக் கூறிய வரையறை முதலியவெல்லாம் செய்கை நோக்கிய கருவியாதலின், மேற்செய்கையோத்துள் 'நாண் முற்றோன்றுந்தொழில்' (247) 'திங்கண் முன்வரின்' (248) 'திங்களு நாளு முந்துகிளந்தன்ன' (286) 'நாட்பெயர்க்கிளவி' என்னுஞ் சூத்திரங்களுட் பரணி சித்திரை முதலிய நாட்பெயரும் மாதப் பெயருமாகிய வடசொற்களைக் கூறும் ஆசிரியர் ஈண்டு அவ்வடசொல் நீக்கிக் கருவி செய்தாரெனல் அமையாதென்பது.

இனி, முற்கூறிய ''உ ஊகாரம்'' என்னுஞ் சூத்திரத்தின் கண் அவ்விளம்பூரணவடிகளும், நச்சினார்க்கினியரும் 'இதுவும் வரை யறை' எனவும், 'இது சிலஉயிர் சில உடலோடு ஏறி முடியாதென விலக்குகின்றது' என முற்சூத்திரத்துக்கூறி 'இதுவுமது' எனச் சுட்டியும் உரைமுன்னர்க் கூறி, அவ்வுரை இகந்துபடுமாறு பின்னர் 'நவிலா' என்றதனாற் கொள்க என்றார். அது மாறு கொளக் கூறலாய் முடியுமாதலின் அவர்க்கும் கருத்தன்று போலும்.

இனி, அவருரையில் வரையறை பொருந்தாமையேயன்றிச் சொன் முடிபும் பொருந்தாது; எங்ஙனமெனின்:—உகர ஊகாரங் கள் நவ்வொடும் நவிலா வவ்வொடும் நவிலா என்பது அவருரைக் கருத்தாதலின், அவர்க்கு நகரவகரங்கள் செவ்வெண்ணுதல் வேண்டும். ஆகவே ''பெயர்க்குரிமரபிற் செவ்வெண்ணிறுதியும் ......தொகையின்றியலா'' (775) என்னும் விதியால் உ ஊகாரம் நவவிரண்டொடு நவிலாவெனத் தொகைபெற்றே வரல் வேண்டும்; அங்ஙனம் வாராமையானென்பது.

இனி, நவ்வொடு வவ்வொடு நவிலா எனப் பிளவுபடக் கூறினன்றே செவ்வெண்ணுவது; அங்ஙனமன்றி நகரவகரங் களாகிய இரண்டொடும் நவிலா எனப் பிண்டமாகக் கூறின் உம்மைத்தொகையாதலின் "உம்மையெண்ணும்......தொகுதி கடப்பாடில" (772) என்னும் விதியால் தொகை பெறாமல் வருதலும் இழுக்கன்றாம்; அதனாற் செவ்வெண் எனக்கொண்டு ன்சொமுடிபு பொருதாதெனல் அமையாதெனின்:—உம்மைத் தொகைக்கும் செவ்வெண்ணுக்கும் பொருள் வேறுபாடுண்மை யான், அவர் உம்மைத் தொகைப்பொருள் பட உரைகூறினாரா யின் தொகைபெறாமல் வருதலும் இழுக்கன்றாம்; அன்றிச் செவ் வெண் பொருள்படவே கூறினாராதலின் தொகை வேண்டு மென்பது.

அற்றாயின், இரண்டற்கும் வேறுபாடு என்னையெனின்:— உம்மைத்தொகைப் பெயர்கள், 'இருமொழிமேலு மொருங் குடனியையல்' (902) ஆகிய பொருணிலை மரபுடைமையான், தனித்தனிவேற்றுமையும் பொருளும்பெறும் இயல்பினவாகும். இவ்வேற்றுமை "பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத், தறம்பொருள் கண்டார்கணில்" (குறள் 141) என்னுங்குற ளிற் பரிமேலழகர் உரையானும் விளங்கும். யாங்ஙனமெனின்:— அறம் பொருள் உம்மைத் தொகையாயிற் பிளவுபடாத பிண்ட மாக நின்று அறநூல், பொருணூல் இவ்விரண்டும் ஒருங்கு கண்டாரிடத்துமாத்திரையே பிறன் பொருளாட் பெட் டொழுகும் பேதைமை இல்லை; ஏனை அறநூல் மாத்திரை கண்டார், பொருணூல்மாத்திரை கண்டார், அறம்பொருளின்ப மெனும் மூன்று நூலுங்கண்டார் இவரிடத்தெல்லாம் அப் பேதைமையுளதெனப் பிறிதுபொருள் கொள்ளப்பட்டுக் கருதிய உண்மைப்பொருள் சிதையும். செவ்வெண்ணயின் அப்பேதைமை அறநூல் கண்டார் கண்ணுமில்லை; பொருணூல் கண்டார் கண்ணுமில்லை; ஏனை இன்பநூல் மாத்திரை கண்டார்கண்ணே உளதென உண்மைப்பொருள்படும்; இவ்வேறுபாடு கருதியே எவ் விடத்துஞ் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் பரிமேலழகர் உம்மைத் தொகையெனச் கொள்ளிற் சொற் சுருங்குதலாகவும், அதுகொள்ளாது, செவ்வெண்ணின்றொகை தொக்கு நின்ற தென உரை கூறினார். இதனானே உம்மைத்தொகைக்கும் செவ்வெண்ணுக்கும் பொருள்வேறுபாடு நன்குவிளங்குமென்பது.

அற்றாயின், அறம் பொருளென்னும் செவ்வெண்ணின் றொகை தொக்குநின்றதெனக்கொள்ளப்பட்டாற்போல ஈண்டுங்

கொள்ளற்பாற்றெனின்:—பொருளையறிந்தான் என்பது உருபு தொக்குப் பொருளறிந்தான் என நின்றவிடத்தும் அப்பொருள் வேறுபடாமைபோல அக்குறளிற் செவ்வெண்ணின்றொகை தொக்குநின்றவிடத்தும் உம்மைத்தொகைப்பொருள் கொள்ளின் அறம் பிழைத்தலால் அப்பொருள் கொள்ளப்படாமையின், தொகை பெற்றால் எப்பொருள் பயக்குமோ அப்பொருளே பயந்துநின்றது; அதனால் ஆண்டுத் தொகுக்கும்வழித் தொகுத்தீ லாயிற்று. ஈண்டுத்தொகுத்தால், அது, சாத்தனையறிந்தான் என்றது உருபு தொக்குச் சாத்தன் அறிந்தான் என நின்ற விடத்துப் பொருள் வேறுபட்டாற் போலத், தொகைபெற்ற செவ்வெண் எப்பொருள் பயக்குமோ அப்பொருள் பயவாமற் செவ்வெண்ணின்றொகை தொக்குநின்றதோ; அன்றித் தொகை பெறாத உம்மைத் தொகையோ என்னும் ஐயத்திற்கிடனாய்ப், பின்னர் கூறியாங்கு எண்ணாலொத்து நிற்றலின் நிரனிறை யாகவே துணிந்து தொகைபெறாத உம்மைத் தொகையெனவே கொள்ளப்பட்டுப் பொருள் வேறுபடும்; ஆதலின் இன்னோரன்ன விடத்தெல்லாம் தொகுக்கும்வழி யாகாமையாற் றொக்குநின்ற தெனக் கொள்ளப்படாதென்பது.

இனி "இகர உகர மிசைநிறை வாகும்" (42) "தநவென வரிற்றனவாகும்" (149) "டணவெனத்தோன்றும்" (150) "எகர ஒகரந்தோற்றமுஞ்சிறப்பும்" (272) "முல்லை குறிஞ்சி மருதநெய்த லென" (951) என்றற்றொடக்கத்த தொகை பெறாத பல விடத்தும் செவ்வெண்ணின்றொகை தொக்கு நின்றதெனக் கொள்ளாமல் எண்ணாலொத்து நின்றமையான் நிரனிறை யாகவே கொண்ட அவரிருவர்க்கும் ஈண்டு மாத்திரம் தொக்கு நின்றதென்றலுங் கருத்தன்று.

இத்துணையும், அவருரை பொருண்முடிபாலும் சொன்முடி பாலும் பொருந்தாமையான், ஆசிரியர் கருத்து வேறென்பது விளக்கப்பட்டது.

இனி, ஆசிரியர் கருத்து ஈண்டுக் கூறிய வாற்றாற் பெறப் படினும் இன்னும் விளங்கூறல் வேண்டுமெனின்: 'உ ஊகார நவ வொடு நவிலா' (74) என்பது முற்கூறியாங்கு உகர ஊகாரமாகிய முடிக்கப்படுஞ் சொல்லும், நகர வகரமாகிய முடிக்குஞ் சொல் லும் எண்ணாலொத்து நிற்றலின் நிரனிறையானே உகரம் நகரத் தோடும், ஊகாரம் வகரத்தோடும் நவிலா என்பதே பொருள் கோண் மரபாயிற்று. ஆகவே, உகரம் வகரத்தோடு ஈறாதலும்,

ஊகாரம் நகரத்தேகமீறாதலும் விலக்கப்பட்டிலவென்பதும் பெறப் பட்டது. உகரம் வகரத்தோடு பயின்று வருதல், ஆசிரியர் கூறிய அளவு, தெவு முதலிய சொற்களானே உணரப்படும். ஊகாரமும், பொருநூஉ என வினையெச்சத்தின்கண் நகர மெய்யோடீறாகி அருகி வருமாதலான் ஆசிரியர் கருத்து இதுவே என்பது.

இனிக், கன்றுந் தாயும்போல ஒன்றையொன்று அவாவிச் சேர்ந்து நிற்றற்பாலவாகிய உகர நகரங்களும், ஊகார வகரங் களும் சேர்ந்து நிற்பினன்றே பொருளுணர்த்தும்; அங்ஙன மன்றிப் பிரிந்து உ ஊகாரமெனவும், நவவெனவும் வேறொன் றோடு சேர்ந்து நின்று பொருளுணர்த்துமாறென்னை யெனின்: கன்றுந் தாயும் ஓரிடத்துச் சேர்ந்து நிற்றல் இயற்கையாம்; அவ்வாறன்றி, ஒருவன் பால் கொள்ளும்பொருட்டு பசுக்களை ஓரிடத்தும், கன்றுகளைப் பிறிதோரிடத்தும் பிரித்து வைப்பின் ஓராவோடு மற்றோராவும், ஒரு கன்றோடு மற்றொரு கன்றுஞ் சேர்ந்து கன்றுந் தாயும் பிரிந்து நிற்றல் விகாரமாகும். அங்ஙனம் விகாரத்தாற் பிரிந்து நிற்பினும் ஓராத் தன்னொடு நின்ற ஏனை ஆவை அவாவாது பிரிந்துநின்ற தன் கன்றையே அவாவுதலும், அவ்வாறே கன்றும் தன்னொடு நின்ற ஏனைக்கன்றை அவாவாது பிரிந்து நின்ற தன்றாயையே அவாவுதலும் உலகியல்பாம்; அது போலவே முடிக்கப்படுஞ் சொல்லும் முடிக்குஞ் சொல்லும் ஓரிடைச் சேர்ந்து நின்றவியல்பான் மொழி புணரியல்பு என்று பெயர்பெறும். அவ்வாறன்றிப் புலவர் பல வாக்கியங்களை ஒரு வாக்கியமாக்கன் முதலிய நயத்தின்பொருட்டு அவற்றை நிரனிறை முதலியனவாகப் பிரித்து வைப்பின், அந்நிலைக் கணின்று தமக்குரிய சொற்களை அவாவிப் பொருளுணர்த்தல் விகாரத்தான் மொழிபுணரியல்பென்று பெயர் பெறும். நிர னிறை முதலியன இயன்பாற் புணர்ந்து நின்றன அல்லவென்ப தூஉம், விகாரத்தாற் புணர்ந்து நின்று பொருளுணர்த்து மென்ப தூஉம் ஆசிரியர் 'அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை' (886) எனத் தொடங்கி, வலிக்கும் வழிவலித்தன் முதலிய தனிமொழி விகாரங்கூறி, அதனையடுத்து "நிரனிறை சுண்ண மடிமறி மொழி மாற், றவைநான் கென்ப மொழிபுணரியல்பே" (887) என்றமை யாற் பெறப்படும். இதனால், உகரம் நகரத்தோடும், ஊகாரம் வகரத்தோடும் நவிலா எனப்பொருள் கொள்ளற்கோர் தட்டின் றென்பது.

இனி, "அழனேபுழனேயாயிரு மொழிக்கும், அத்துமின்னுமுற் றத்தோன்றல்"(193) என்னுமிடத்து அத்தும் இன்னும் அழன்புழன்

என்பவற்றோடு எண்ணாலொத்து நின்றும் நிரனிறையாகாமை என்னை யெனின்:—அது கருதியன்றே ஆசிரியர் நிரனிறையால் ஒவ்வொன்றே தோன்றாமல் மாறியிரண்டுந் தோன்றுமெனப் பொருள்படுமாறு அத்துமின்னுந் தோன்றுமென்னாமல் 'உறழத் தோன்று'மென்றார், இங்ஙனமே "உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும், புள்ளியிறுதி முன்னிலைக் கிளவியும், இயல்பாகுநவும் உறழ்பாகுநவும்" (151) எனின் நிரனிறையால் இயல்பு உறழ்ச்சி• என்னுமிரண்டுள் ஒவ்வொன்றே பெறுமென்று பொருள்படு மெனக்கருதி அதனை யொழித்து இரண்டும்பெறும் என்பதறிவித் தற்கு, 'ஆயீரியல வல்லெழுத்து வரினே' (151) என்றார். இது போலவே பிறாண்டுங் கருதப்படும். ஆதலான், இவ்வாறு பிற சொற்களான் விலக்காவிடத்தெல்லாம் நிரனிறையேயாகும் என்பது.

அற்றேற், ககாரஙகார முதனாவண்ணம் (89) எனப்பிற சொல்லால் விலக்காமல் எண்ணால் ஒத்துநின்றவிடத்தும் ககாரம் முதனாவிலும், ஙகாரம் அண்ணத்திலும் பிறக்குமென நிரனிறை யாற் பொருள் கொள்ளாமை என்னையெனின்:—அதுகருதி யன்றே ஆசிரியர் அதன்பின், "சகார ஞகார மிடைநா வண்ணம்" (90)

"டகார ணகார நுனிநாவண்ணம்" (91) என ஓரிடத்துப் பிறக்கும் ஏனை இரட்டையெழுத்துக்களையுங் கூறி நிரனிறை யால் அறுவகைப் பிறப்பின் எனப்படா என்பதறிவித்தற்கு அதன் பின், "அவ்வாறெழுத்து மூவகைப் பிறப்பின" (92) எனப்பின்னும் ஒரு சூத்திரஞ் செய்தாரென்பது.

இனி ஞகரத்தோடு ஈறாகும் உகரத்திற்கு உரிஞு என நச்சி னார்க்கினியர் உதாரணங் காட்டினார்; அதுபோலப் பொருநு என்பதும் நகரத்தோடு கூடிய உகரவீற்று மொழியெனக் கொள்ளின் நிரனிறையாற்கொண்ட வரையறையும் இகந்து படுமெனின்:—அற்றன்று; ஆசிரியர் செய்கையோத்துட் பயன் படுமாறு ஈண்டு முதலாவன இவை; ஈறாவன இவையெனத் தனிமொழியையே கருவி செய்கின்றாராதலானும், "ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்னர், அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்தியையி னவ்வெழுத்து மிகுமே, யுகரம் வருத லாவயி னான" (296) "ஞநமவ வியையினு முகர நிலையும்" (297) "நகர விறுதியு மதனோ ரற்றே" (298) என உரிஞ், பொருந் என்னும் ஞகர நகர வீற்றுத் தனிமொழி

களே வருமொழியோடு புணருமிடத்து உகரச்சாரியை பெறுமென விதித்தாராகலானும், அவை உரிஞு, பொருநு என உகரவீற்றுத் தனிமொழிகளாக நின்று, பின்னர் வருமொழியொடு புணராது மெய்யீறாகவே நின்று புணரும் என்பது பெறப்படுதலின் உகரம் நகரத்தோடீறாகி வரையறை இகந்ததின்றென்பது.

அற்றேல், உகரம் ஞகரத்தோடீறாகாது என விலக்காமையான் அதற்கு நச்சினார்க்கினியர் காட்டிய உரிஞ் என்பது உகர வீற்று மொழியாகாதேல் வேறு தாரணங்காட்டல் வேண்டும் எனின்—ஆசிரியர் காலத்து வழங்கிய மொழிகள் பல பிற்காலத்து வீழ்ந்தன; அவற்றுள் இதுவும் ஒன்றாயிற் காட்லமையாது; அன்றேல் வந்துழிக் காணப்படுமென்பது.

அற்றாக, இனிப் பொருந் என்னுந் தொழிற்பெயர் ஊ என்னும் வினையெச்ச விறுதிநிலை பெற்றுப் பொருநூவெனத் தனிமொழியாகி நிற்றாற்போல, நட, வா, விடு, கூ, ஏ, நொ. ஓ, வௌ, தெவ் என்னுந் தொழிற்பெயர்களும் அவ்விறுதி நிலையோடு வகரமெய் பெற்றுவரின் அவ்விடத்து ஊகாரம் விலக்கிய வகரத்தோடும் ஈறாகி வரையறை இகந்ததெனப்படுமாலோ எனின்—அற்றன்று; ஒவ்வொரு முதனிலைத் தொழிற்பெயரும் உ ஊ முதலிய வினையெச்ச விறுதிநிலைகளெல்லாவற்றையும் பெறல் வேண்டுமென்னும் நியமமின்மையாற் சில முதனிலைகள் இடைநிலையோடு வரற்பாலதாகிய உகரவிறுதிநிலை பெறாது அவ்விடைநிலைப் பொருளையும் இறுதி நிலைப் பொருளையும் ஒருங்கு தரற்பாலவாகிய இகர யகரங்களுள் ஒன்று பெற்று ஆடி, பாடி, துன்னி எனவும்; போய், கூய் எனவும் வரும். அதுபோல நட முதலிய முதனிலைகளும் வகர மெய்யிடையே வருதற்கேற்ற ஊகார விறுதிநிலை பெறாது அஃதொத்த ஆகாரவிறுதிநிலை பெற்று, நடவா, வாரா, விடா, கூவா. ஏவா, நோவா, ஓவா, வௌவா, தெவ்வா எனவரும். இவற்றுள் வா என்பது உகரம் பெறுங்கால் வந்து எனக் குறுகியும், ஆகாரம் பெறுங்காற் குறுகாதும் வருதல்போல. நொ என்பதும உகரம் பெறுங்கால் நொந்து என இயல்பாகியும் ஆகாரம் பெறுங்கால் நீண்டும் வரும். இதனான் ஊகாரம் வகாரத்தோடீறாதலின்றென்பது

இத்துணையும் உகரம் நகரத்தோடீறாதலும் ஊகாரம் வகரத்தோடீறாதலும் இல்லையெனவும், உகரம் வகரத்தோடீறாதலும் ஊகாரம் நகரத்தோடீறாதலும் விலக்கப்பட்டில எனவும் பொருள்கோடலே ஆசிரியர் கருத்தென்பதூஉம்,

அவற்றுள் உகரம் அளவு முதலிய பல மொழிகளிடத்து வகரத் தோடீறாகிப் பரந்து வரும் என்பதூஉம் ஊகாரம், அருகியீறா கும் நகர வகர முதலியனபோல நகரத்தோடு அருகியீறாகும் என்பதூஉங் கூறப்பட்டன.

இனி, "உச்சகாரமொடு நகாரஞ்சிவணும்" (79) என ஆசிரியர் கூறிய வரையறை கடந்து பொருந், வெரிந் என்னுமிரு மொழி யிடத்தன்றி வெந் என்னுமொழியிடத்தும் நகர மீறாகிய தென்னையெனின்:—வெரிந் என்பதே இடைக்குறைந்து அவ் வாறு வழங்கப்படுவதன்றி வெந் எனப் பிறிதோர் மொழியின் மையின் வரையறை கடந்தது யாண்டையதென்பது.

அஃதற்றாக, இனி நன்னூலார் "ஙஞணநமனவயலள வாய்தம், அளபாங்குறிலிணை குறிற்கீழிடைகடை, மிகலே யவற்றின் குறியாம்வேறே" (நன். 92) என்னுஞ் சூத்திரத்துள் வகரமுங் குறிலிணைக்கீழ்க் கடையில் அளபெழுமென்றமையால் ஆசிரியர்கூறிய குறிற்கீழ்க்கடை வகரம் நான்குமன்றிக் குறி லிணைக்கீழ் வகரமும பிற உளவெனப்பட்டு வரையறை இகக்கு மாலோவெனின்;- அச்சூத்திரக் கருத்தறியாது சங்கரநமச் சிவாயப்புலவர் முதலானார் அங்ஙனம் உரைகூறினாரேயன்றி ஆசிரியர்க்கு மாறாக நன்னூலார் ஆண்டுக் கூறிலர்; அஃது உற்று நோக்கின் அவர் உரை பொருந்தாமையாற் செவ்வனனே விளங்கும் அஃதெவ்வாறெனின்:- நன்னூலார் சுருங்கச் சொல்லலென்னும நயம்பற்றி ஒற்றளபெடை ஆறேழென முன்னர் வரையறை கூறிப், பின்னர் ஞகரமுதல் ஆய்தமீறாகிய அப்பதினோரெழுத்தும் குறிலிணைக்கழிடையும், குறிற் கழிடையும், குறிலிணைக்கீழ்க்கடையும், குறிற்கீழ்க்கடையு மாகிய நான்கிடத்தும் அளபெழும் என்றமையான், ஒவ்வோ ரெழுத்துக்கு நந்நான்கிடமாக அளபெடையிடம் நாற்பத்து நான்கு பெறப்படினும் அவற்றுள் இரண்டிங்கள் அளபெடைக் குரிய எழுத்தின்மையால் நீக்கப்பட்டு, ஒற்றளபெடை நாற்பத் திரண்டாயிற்றென்பது அவர் கருத்தாதல் வேண்டும்; ஆகவே விருத்தியுரையிற் கூறியாங்கு ஆய்தம் மொழிக்கிறாகாமைபற்றி அதற்குக் குறிலிணைக்கீழ்க்கடையும், குறிற்கீழ்க்கடையும் ஆகிய இரண்டிட நீக்க ஒற்றளபெடை நாற்பத்திரண்டாயிற்றெனக் கொள்ளின், அவ்வுரை வகரம் குறிலிணைக்கீழ்க் கடை அளபெழாதென விலக்காமையான் அவ்வகரம் நான்கிடத்தும் அளபெழுமெனப்பட்டு ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தொடு

மாறுபடுதலேயன்றி, ஙகரமும் ஆய்தம் போல் ஈற்றில் வாராமை யான் அதற்கும் அவ்விரண்டிடம் நீக்கி நாற்பதெனல் வேண்டு மெனப்பட்டு ஒற்றளபெடை ஆறேழென்ற நன்னூலார் கருத் தொடும் மாறுபடலா மென்பது.

அற்றன்று; அங்ஙனிந்த எனவும், மடங்ஙலந்த எனவும் மகரந்திரிந்த ஙகரம் விதியீறாகி வருதலான், அதற்கு அவ்விரண் டிடம் நீக்கல் வேண்டாவெனின்.-மகரந்திரிந்த ஙகரம்போலவே லகரமுதலியன திரிந்த ஆய்தமும் பஃறாழிசை, அஃகடிய எனவிதி யீறாகி நிற்றலின், ஆய்தத்தையும் ஈற்றில் விலக்காது கொள்ளல் வேண்டும்; அங்ஙனங் கொள்ளின் ஒற்றளபெடை நாற்பத்திரண் டின் மேற்பட்டு முற்கூறியாங்கு முரணுமென்பது.

அற்றன்று; ஆய்தம், ஒருமொழிக்கண்ணுந் தொடர்மொழிக் கண்ணும் விதித்த முதலெழுத்துகள் இருமருங்குநின்றெழுப்ப இருசிற கெழுப்ப வெழுமுடலதுபோல் இடையெழுத்து ஒலிப்ப தன்றி, ஒருவாற்றானும் ஈறாய் வருந்தன்மைத்தன்றாகலின் நன்னூலார் அதனையிறுதிக்கண் விலக்கினாரெனச் சங்கர நமச்சிவாயப்புலவர் கூறினாராலெனின் அங்ஙனமே ஙகரமும், ஒருமொழிக்கண்ணும் தொடர்மொழிக்கண்ணும் உயிரும் உயிர் மெய்யுமாகிய எழுத்துக்கள் இருமருங்கு நின்றெழுப்ப இடை யெழுந்தொலிப்பதன்றி ஒருவாற்றாலும் ஈறாய்வருந் தன்மைத் தன்றாகலின், அதனையும் இறுதிக்கண் விலக்கல் வேண்டும்; அங்ஙனம் விலக்கின் நாற்பத்திரண்டெனல் சாலாமையின் அதுவும் பொருந்தாதென்பது.

அற்றேல், நன்னூலார் கருத்து என்னையெனின்:- "லள வீற்றியைபினா மாய்த மஃகும்" (நன்.97) என்பது அவர் கொள்கை யாதலின் அது பற்றிக் குறுகிய ஆய்தம் அளபெழாதென விலக்கப் படினும், அஃகடிய முதலிய வகரந்திரிந்த ஆய்தம் முற்றாய்த மென அவர்தாமே கூறினமையான் அவ்வாய்தமும், மகரந்திரிந்த ஙகரமும் அளபெழாவென அவரான் விலக்கப்படாவாயின. ஆகவே, அவை இயல்புகருதின் வகரவீறும் மகரவீறுமாய் முடி தலின் வேறுகணக்கிடல் வேண்டா. விதிகருதின், அவை ஆய்த மும் ஙகரமுமாகித்திரிந்து நிற்றலின் வேறுகணக்கிடல் அமையும். இதனால், அவற்றுள் யாது கொள்ளற்பாற்று என ஆராயு மிடத்து, அவர் "இயல்பினும் விதியினும் நின்றவுயிர்முன்" (நன்.165) இயல்பையும் விதியையும் வேறு வேறு கொண்டமையான்,

ஈண்டும் விதியீறை வேறெனக் கோடலே அமைவுடைத்து. அதனால் நகரம் அங்கணிந்த எனவும், மடங்கலந்த எனவும் குறிற்கீழும் குறிலிணைக் கீழும் வீதியீறாகவும் இடையில் இயல் பாகவும் வருதலின், அங்நகரம் ஓரிடத்தும் விலக்கப்படாமல் நான் கிடத்துங்கொள்ளப்படும். அதுபோலவே நகரமொழிந்த ஏனைய வற்றுள் ஆய்தமே, வகரமே என்னும் இவையிரண்டும், ஒழிந்த எட்டெழுத்துக்களும் இயல்பாகவேனும் விதியாகவேனும் அந்நான்கிடத்தும் வருதலின், அவையும் ஓரிடத்தும் விலக்கப் படாமல் நான்கிடத்துங் கொள்ளப்படும். ஆய்தம் விதியீறாக வும், குறிற்கீழ் வருதலேயன்றிக் குறிலிணைக்கீழ் வாராமையான் அதற்குக் குறிலிணைக்கீழ்க்கடையொன்று விலக்கி: ஏனை மூன்றிடமும் கொள்ளப்படும். வகரமும் குறிலிணைக் கீழ்க்கடை யில் இயல்பாகவேனும் விதியாகவேனும் வாராமையான், அதனை விலக்கி அதற்கு ஏனை மூன்றிடமும் கொள்ளப்படும். ஆகவே நகரமுதலிய ஒன்பதெழுத்துக்கு முப்பத்தாறும், ஆய்தத்துக்கு மூன்றும், வகரத்துக்கு மூன்றுமெனக்கணக்கிட்டு, ஒற்றளபெடை நாற்பத்திரண்டெனக்கொள்க என்பதே நன்னூலார் கருத்தாயிற் றென்பது.

அற்றன்று; நன்னூலார் வடசொல்லிலக்கணமும் கூறுகின்றா ராதலின், திங் என வடமொழிக்கண் நகரம் ஈறாதல்பற்றி அதனையீற்றில் விலக்காது ஆய்தம் இயல்பீறாகாமையான் அதனையீற்றில் விலக்கிக் குறிற்கீழீறாதல்போலக் குறிலிணைக் கீழும் வகரமீறாகிற் குற்றமின்றெனக்கொண்டு ஒற்றளபெடை நாற்பத்திரண்டெனக் கூறினாரெனக் கொள்ளுதுமெனின்;— "ஞணநமன யரல வழள வென்னும், அப்பதி னொன்றே புள்ளி யிறுதி."(78) என்னுஞ்சூத்திரத்தால் நகர முதலிய ஏழ் புள்ளிகளும் தமிழ்மொழிக்கண் ஈறாகாவென்பது பெறப்படுதலின், நகரம் வடமொழிக்கண் ஈறாதல் பற்றி அவ்விதி தமிழிற்குங்கோடல் முரணாமாதலானும், யாண்டும் இயல்புவேறு விதிவேறெனக் கொண்ட நன்னூலார் ஈண்டுமாத்திரம்விதியீறுகொள்ளாரெனல் பொருந்தாமையானும். "வகரக்கிளவி நான்மொழி" (81) என்ற வரையறையும், அவ் இவ் உவ் எனச் சுட்டடுத்து வருதல்போல அது யாவினாவடுத்து வாராமையும், அவ்வகரம் குறிற்கீழன்றி நெடிற்கீழும் தொடர்மொழிக்கீழும் விகாரவகையாலும் ஈறாதல் இன்றென்பதை உணர்த்தலானும் அதுபொருந்தாதென்பது.

இனி, நகரம் வடமொழியில் ஈறாதல்பற்றி அதனைத் தமிழிற்குங்கோடல் பொருந்தாதாயின். சகாரம் ஒன்பதுயி

ரோடும், ஞகாரம் மூன்றுயிரோடும், யகாரம் ஒருயிரோடும் முதலுமென ஆசிரியர் கூறியிருப்ப, நன்னூலார் வடசொல்லையுஞ் சேர்த்துச்சகாரம் பன்னீருயிரோடும், ஞகாரம் நான்குயிரோடும், யகாரம் ஆறுயிரோடும் முதலுமெனக் கருவிசெய்தலும் பொருந்தாதெனின்:- அங்ஙனமாகாது; என்னை? ஆசிரியர் "பன்னீருயிரும் மொழிமுதலாகும்" (59) என்றமையான், அவ்வுயிர், மொழிமுதலாகுமியல்புடைய மெய்யொடு முதலுமாயினும் அமையுமாதலானும், ஆசிரியர் அக்காலத்து வழக்கின்மையாற் சகரமுதலிய சிலமெய் அகரமுதலிய சிலவுயிரோடு முதலாவெனக் கூறினும், அவர்தாமே "கடிசொல்லில்லை காலத்துப்படினே" (935) எனவும், திசைச்சொல்லும் வடசொல்லும் தமிழ்மொழிக்கண் வழங்கலும் கொள்ளப்படும் எனவும் விதித்தமையான், தமிழ் விதியோடு மாறுபடாமற் பிற்காலத்துச் சமழ்ப்பு முதலிய தமிழ்ச்சொற்களும், ஞமலிமுதலிய திசைச்சொற்களும், யூப முதலிய வடசொற்களும் இருவகைவழக்கினுங் காணப்பட்டமை யாலும் முதனூலொடு முரணாமையானென்பது.

அற்றேல், சிந்தாமணி முதலிய நூல்களின்கண்' 'ராசமாபுரி' என்றும், 'அலுப்தம்' என்றும் முதலாகா மெய்யொடு முதலாகி யும், மயங்காமெய்யோடு மயங்கியும் தமிழ்விதியோடு மாறுபட்டு வந்திருப்பவும், அவற்றைக் கொண்டவாறென்னை யெனின்— "முதலாவேனதம்பெயர் முதலும்" (66) எனவும், 'தம்மியல் கிளப் பின் எல்லாவெழுத்து மெய்ந்நிலை மயக்க மானமில்லை" (47) எனவும் ஆசிரியர் கூறினமையான், "ளஃளவென்புள்ளி முன் டண வெனத் தோன்றும்" (150) என்னுஞ் சூத்திரத்துள் ணகரமுதலாகி யும், னகர டகர மயங்கியும் வந்தனவெனினும் தமிழ்மொழிக்குரிய இயல்பு பெற்றனவெனக் கொள்ளாது, பொருளுணர்வு காரண மாக அவ்வாறுவந்தனவென அமைத்துக்கொண்டாற்போல, ராசமாபுரி முதலியனவும் வடவெழுத்தொரீஇயெழுத்தொடு புணர்ந்த இலக்கணமுதலிய வடசொற்போலத் தமிழ்மொழிக் குரிய கருவி செய்கை பெறுவனவெனக் கொள்ளப்படாது, பொருளுணர்த்தன் மாத்திரையான் வடமொழியிற்பிறந்த வண்ணமே நின்றனவென அமைத்துக்கொள்ளப்படுமென்பது.

இனி, முதலாகுமியல்புடைமையாற் சகாரம் ஆசிரியர் கூறாத அ, ஐ ஔ என்னும் மூன்றுயிரோடும் பிற்காலத்து வழங்கினாற் போல, அவ்வியல்புடைய ஞகர வகர யகரங்களும் பின்னொரு காலத்து ஆசிரியர் கூறாத ஏனை உயிரெல்லாவற்றோடுங் கூடி

முதலாகி வழங்கற்கும் உரியவோவெனின்;—ஞகரம், கதநபமச என்னும் மெய்கள்போல எல்லா உயிரொடும் முதலும் இயல் பிற்றாதலின், அது, ஞமலி என்னுந் திசைச்சொற்கண்ணும் மிஞறு என்பதே ஞிமிறு என நிலைமாறிய தமிழ்ச் சொற்கண்ணும் ஆசிரியர் கூறாத அகர இகரவுயிரோடு முதலாயினாற்போல, ஏனை உயிரோடும் முதலுமியல்புடைமையான் அவற்றொடு வழங்கற்கும் உரித்தாகும். ஏனை வகரயகரங்கள் பிறகாரணத் தாற் சிலவுயிரோடு முதலும் இயல்பினவாகா வாதலின், அவை அவற்றொடு எக்காலத்தும் வழங்கற்குரிய வாகா என்பது.

அற்றேல், வகரம் எவ்வுயிரோடு முதலாது; யகரம் எவ்வுயிரோடு முதலாது? எனின்;—உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்கு யிரோடும் வகரம் முதலாது; இ, ஈ, எ, ஏ, ஐ, ஒ என்னும் ஆறு உயிரோடும் யகரம் முதலாது என்பது.

அற்றேல் வகாரம் அந்நான்குயிரோடு முதலாமைக்குக் காரணம் என்னையெனின்;-உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்குயிரும் இதழ்குவிதலாகிய முயற்சியாற் பிறத்தலானும், இந்நான்குயி ரோடு இவ்வகரம் முதலின் இவை கூடிய உயிர்மெய்யெழுத்துக் களின் வடிவு நிரம்பற்கு வேண்டும் இவ்விரு முயற்சியும் ஒருங்கு நிகழாது, இதழ் குவியுங்காற் பல்லிதழியைதல் அரிதாதலும், பல்லிதழியையுங்கால் இதழ் குவிதல் அரிதாதலுமாகி அரிதில் முயன்று கூறப்படுதலின், இந்நான்குயிரோடு இவ்வகரம் எக் காலத்தும் முதலாவியல்பிற்றாயிற்று இவ்வியல்பு செவிகருவி யாக உணரவல்லார்க்கு இனிது விளங்கும். அன்றியும், ஆசிரியர் ஏனையிடத்துக் கூறுதல்போல முதலுமுயிர்த்தொகை பற்றி வகரம் எட்டுயிரோடு முதலும் என்றாவது, முதலாவுயிர்த் தொகைபற்றி நான்குயிரோடு முதலாதென்றாவது, 'ஏ ஒ எனு முயிர் ஞகாரத்தில்லை'' என்றாற்போல நான்குயிர் வகாரத் தில்லை என இன்மையை உயிரின்மேல் வைத்தாவது கூறாமல் ''உ ஊ ஒ ஓ என்னு நான்குயிர், வஎன் னெழுத்தொடு வருவதில்லை'' (66) எனவதனை வருதலின்மேல் வைத்துக் கூறினமையாலும் செவ்வனுணரப்படும் என்பது.

அற்றேல், இரு முயற்சியும் ஒருங்குநிகழல் அரிதாதல்பற்றி இந்நான்குயிர் மெய்யும் மொழிமுதற்கண் வாரா எனின், இடை கடையிலும் வாராமையே பொருந்தும்: அங்ஙனமன்றி வருதல் என்னையெனின்;-முதலாகும் இயல்பில்லாத ரகார முதலிய மெய்கள் முதலும் இயல்புடைய எழுத்தினைச் சார்ந்து இடை

கடை வருதல் போல இவையும் முதலும் எழுத்தினைச் சார்ந்து வரின் இவற்றின் இருமுயற்சியும் ஒருங்குநிகழல் அரிதின்றி எளிதாகுந்தன்மை பெறலான் இடையேனுங் கடையேனும் வருதல் பொருந்துமென்பது.

அற்றேல், ரகாரமுதலிய முதலாவெழுத்துக்கள் முதலுமா றொலிப்பின் அரியனவாதலும், இடைகடை அங்ஙனம் ஆகாமை யும் என்னையோயவனின்;-நீத்தறியாதொருவன் ஆற்றுப் பெருக்கிற்றானே முற்பட்டுச்செல்லின் அமிழும்; நீத்துவல்லு நனொருவன் பின்னர்ச் சார்ந்துசெல்லின் அமிழாது கரைக்கட் புகும்: அதுபோலவே அரியமுயற்சியாற் பிறக்கும் எழுத்துக்களும் முதலுமிடத்து எளிதின் உச்சரிக்கப்படாவாய்ச் சிறு தடையுறும்: இடைகடையின் எளிதினுச்சரிக்கப்படுவனவாகித் தடையின்றிச் செல்லும். இதனை நாத்திட்பம் நன்கெய்தாத சிறுமகாரைக்கூய் 'ராமா' எனச் சொன்மின் என்றுகூறின், அவர், ரகாரம் அரிய முயற்சியாற் பிறக்கும் எழுத்தாகலின் அதனை முதற்கண் ணொலிக்குமாற்றலிலராகி அதனையொழித்து 'ஆமா' எனக்கூறு தலானும், அவர்தாமே, அரிசி, தயிர், மோர் என அவ்வெழுத்தை இடையினுங்கடையினும் வருத்தமின்றி ஒலித்தலானும் நன்குணரப்படும். இதனால், ரகரமுதலியன அரியமுயற்சியாற் பிறப்பன என்பதும் அதனாலவை முதலுமியல்பிலவாயின என்பதும், முதற்கண்ணுள்ள அருமை இடைகடையினின் றென்பதும், அதனாலவை இடைகடை வருதலில்பாயிற்று என்பதும், பிறவும் உய்த்துணர்வார்க்கு விளங்கும் என்பது.

அற்றேல், எளிய முயற்சியும் அரிய முயற்சியுமாவன யாவை எனின்; அங்காத்தலும், நாக்கிடந்தவண்ணமேகிடந்து பல்லோ டாவது அண்ணத்தோடாவது பொருந்துதலும், இதழ்குவிதலும் கீழிதழ் மேலிதழொடும் பல்லொடும் பொருந்தலுமாகிய இம் முயற்சிகள் எளியனவாகும்; நாவினுனி எழுந்தும் வளைந்தும் தடவியும் அண்ணத்தைப் பொருந்துதல் அரியமுயற்சியாகும். இவை பற்கள் முளைக்குமுன்னரும் முளைத்தவுடனும் அங்காத்தன் முதலிய முயற்சிகளால் அகர ஆகார பகாரவொலி களும் பிறவும் முறையே எளிதிற் பிறத்தலானும் உணரப்படும் என்பது.

அற்றேல், நா நுனியாலாகும் அரியமுயற்சியாற் பிறத்தலான் ட, ற, ண, ன, ர, ல, ழ, ள என்னும் இவ்வெட்டு மெய்யும் மொழி முதலாகாமை அமையும்; முதனாவண்ணத்திற் பிறத்தலாகிய

எளிய முயற்சியுடைய இரண்டெழுத்துள் ககார முதலாக ஏனை ஙகாரமாத்திரம் மொழிமுதலாகாமை என்னையெனின்;-முதலு மியல்புடைய ககாரத்தோடு பிறப்பொற்றுமை யுடைத்தேனும் மெல்லெழுத்துப் புலப்படல் மூக்கின்காற்றாலாதலின் அக்காற்று மூக்கை நோக்கிச் செல்லும் வழியையடுத்து அங்ஙகாரம் பிறத்தலான் அது மொழிமுதற்கணெய்தின் அக்காற்றுச் செவ்வனே மூக்கின்வழிச்செல்லாது சிறிது தடையுறும்; அதனால் அதன் வடிவு நிரம்பப்பெறாமையான் முதலாவியல்பிற்றாயிற்று. நன்னூலார் "ஒட்டி ஙவ்வு முதலாகும்மே" (நன். 106) என்ற துணையானே ஒன்றனை ஒட்டாதுதானே முதலாது என்பது பெறப்படுதலின் அவர் கூற்றும் ஆசிரியர் கருத்துக்கு மாறன்று. இங்ஙனமே எழுத்துக்கள் ஈறாதற்கும் ஆகாமைக்கும், மயங்கற்கும் மயங்காமைக்கும் காரணங்கள் உள; அவை, எழுதப்புகின் விரியுமாதலின், ஈண்டுக்கூறியாவற்றான் அவையும் ஏனையவும் உய்த்துணரப்படும் என்பது.

இனி, இருமுயற்சியும் ஒருங்குநிகழல் அரிதாதல்பற்றி வகரம் அந்நான்குயிரொடும் முதலாதாயின் "உஊ ஒஓ ஒளவென விசைக்கு, மப்பாலைந்து மிதழ்குவிந்தியலும்" (87) என ஆசிரியர் கூறினமையின், நான்குயிரோடு ஒத்த முயற்சியுடைய ஒளகாரத் தோடும் முதலாமைவேண்டும்! அங்ஙனமன்றி அதனொடு மாத்திரம் முதலுதல் என்னையெனின்!-"அகர இகர மைகாரமாகும்" (54)"அகர உகர மௌகார மாகும்" (55) என ஆசிரியர் கூறி யிருத்தலான் அகரமும் அகரமுங்கூடி பிளவுபடாது நின்று ஒன்று பட்டுப் பிறத்தலால் ஆகாரமென்னும் ஒரெழுத்தாயினாற்போல, ஒளகாரமும் அகர உகரங்கள் கூடிப் பிளவுபடாது நின்று ஒன்று பட்டுப்பிறக்கு மியல்பிற்றாய் அவ்விரண்டனுள்ளும் அகர வோசையை முன்னுடைத்தாய் நிற்றலின், வகரம் அதனொடு முதலுமிடத்து இதழ் முயற்சியின்றி அங்காப்புமாத்திரையுடைய அகரத்தனிவுயிரோடு முதலாதல்போலவே, அந்த ஒளகாரத்தின் கண்ணுள்ள அகரவோசையுடன் முன்னர்க்கூடி முதலாகி அதன்பின்னர் உகரவோசையுடன் இணைதலாற் கூறுதற்செளி தாகுந்தன்மைபெறலின், அவ்கரந்தான் முதற் கூடுமியல்பில்லாத உஊஒஓவொடு ஒத்தமுயற்சியுடையதாயினும் ஒளகாரத்தொடு மாத்திரம் முதலுமியல்புடைத் தாயிற்று என்பது.

அற்றேல், அகரமும் உகரமுங்கூடி ஒளகாரம் பிறக்குமெனல் பொருந்தாது; "அகரமும் இகரமுங் கூடச்சொல்ல ஐகாரம்

போலவாகும்; அகரமும் உகரமுங் கூடச்சொல்ல ஒளகாரம் போலவாகும்'' எனவும், ''அது கொள்ளற்க'' எனவும் இளம் பூரணவடிகள் முதலாயினோர் கூறினமையானெனின்;—ஆசிரியர் 'ஆகும்' என்றாரேயன்றிப் போலவாகும் எனக் கூறாமையானும், ஆகும் என்பது வினையாதலின் உருபு தொக்கதெனல் பொருந்தாமையானும், விகாரத்தாற் றொக்கதெனக்கொண்டு போலியெழுத்துமொன்றுளதெனக் கொள்ளுகவெனின்: இஃது ஆசிரியர் கருத்தாயின் முதற்கண்ணே போலியுஞ், சார்ந்துவரன் மரபின் மூன்றுமலங்கடையே ''எழுத்து முப்பஃதென்ப'' எனக் கூறல்வேண்டும்; அங்ஙனங் கூறாமையானும், ஆகும் என்றதனான் ஆகாதெனக் கொள்ளுதுமெனின், உடன்பாட்டுவினைகள் எதிர்மறையுணர்த்தும் இடைச்சொல் முதலியவற்றொடு கூடாது தாமே எதிர்மறையுணர்த்தல் யாண்டுமின்மையானும், இங்ஙன முரைத்தல் கருவியாகாமையானும் அவ்வுரைபொருந்தாது. இக்கருத்துச் சூத்திர விருத்தியானும் விளங்கும். இதனால் அகரமும் இகரமுங்கூடியே ஐகாரமென்னும் ஓரெழுத்தா மென்பதும், அகரமும் உகரமுங்கூடியே ஒளகாரமென்னும் ஓரெழுத்தாமென்பதும், அச்சூத்திரங்களின் கருத்தாதல் விளங்கு மென்பது.

அற்றேல், இரண்டெழுத்துக்கூடி ஐகாரமும் ஒளகாரமுமாம் என்பதே ஆசிரியர் கருத்தாயினும் அது கருவியாமாறியாங்ஙனம் எனின்;—இது பலவறுக்குக் கருவியாமாறு ஆசிரியர் கூறியிருப் பினும் செய்யுளியலிற் கருவியாக இது பயன்படுதலை மாத்திரம் ஈண்டுக்காட்டுதும். ஆசிரியர் கருவியோத்துள் அகரஇகரமும் அகரயகரமும், அகரஉகரமும், ஐகார ஒளகாரமாம் எனக் கருவி செய்யாராயின், நூன்மரபிற் ''ஆ ஈ ஊ ஏ ஐ. ஓ ஒள வென்னு மப்பாலேழும். ஈரளபிசைக்கு நெட்டெழுத்தென்ப'' (4) எனக் கருவி செய்தமையான் ஐகார ஒளகாரங்களை ஏனை ஐந்தெழுத் தொடு ஒத்த தன்மையவெனக் கொண்டு ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தெய்வத்துள் வைக்கப் படும்'' (குறள். 50) எனவும், ''கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை'' எனவும் வருதல் எதுகைத்தொடையன்று எனவும், ''வையத்துள வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தேயத்துள் வைக்கப்படும்'' எனவும், ''மௌவைசொல்லினேவருக்கும் பகை'' எனவும் வருதலே எதுகைத்தொடையாம் எனவும் மயங்குபவா கலின் அம்மயக்க மொழித்து, ஐகார ஒளகாரங்கள், தம்மை யொழிந்த ஏனையந்தும் வாக்கினின்று வெளிப்படுமுன்னர் ஒரு குறிலே இரட்டித்து ஒன்றுபட்டுப் பிறத்தலான், ஓரோசையே

யுடைய நேரியநெடிலாகவும், தாம் இருவேறுகுறிலேனும் ஒரு குறிலும் ஒரு மெய்யுமேனும் அவ்வாறு பிறத்தலான் ஈரோசையை யுடைய விலங்கிய நெடிலாகவும் இருத்தலின் அவ்வைந்தனொடு ஓசைவேறுபட்டு நிற்றலான் அவ்வைந்து நேரசையுடனும் எதுகைத்தொடை எய்தாவென்பதும், இவ்வாறே, தாம் இரு வேறு குறிலானாகும் எழுத்தாயினும் பிளவுபடாது ஒன்றுபட்டுப் பிறத்தலானிரைசையாகாது நேரசையாகவே நிற்றலின், தனித் தனி பிளவுபட்டுப் பிறந்து பின்னர்க்கூடி நிரையசையாகக் கொள்ளப்படுகின்ற இணைக்குறிலோடும் குறில்நெடிலோடும் எதுகைத்தொடை எய்தாவென்பதும் தாம் நெடிலாக நிற்பினும் இரண்டோசையுடைமையான் அவற்றுள் முதற்கணுள்ள ஓசை குறிலோசையுடன் ஒத்த அளவினதாக நிற்றலின் ஒற்றுடனா யினும் ஒற்றின்றியாயினும் வருகின்ற குறிலானாகும் நேரசை யொடு எதுகைத்தொடை யெய்துமியல்பினவாயிற் றென்பதும் அறிவித்தற்கு ஈண்டுக் கருவிசெய்தார் என்பது.

இங்ஙனம் இவ்வைகார ஔகாரங்களே எதுகைத்தொடை மோனைத்தொடைக்கு உரியவாகவும்இவையாகா எனவும், இவற் றுக் கிணையாகப் "போலியெழுத்தைப் போற்றுதல் கடனே" எனவும் இலக்கணக்கொத்து நூலார் கூறினர். அவர் கூறுமாறு 'வய்யத்துள்' எனவும் 'அவ்விய நெஞ்சத்தான்' (குறள், 169) என வரிவடிவில் எழுதிக்கொள்ளினும், வாக்கினின்று வெளிப்பட்ட வும் பின் கூடிநிற்கும் அகரயகரமும் அகரவகரமும், வாக்கினின்று வெளிப்படு முன்னரேகூடி யொன்றுபட்ட ஐகார ஔகாரங்களும் ஒலி வடிவின்கண் வேற்றுமையுடைமையான் அவை ஒன்றாகு மென்றாவது ஒப்பாகுமென்றாவது கூறலமையாது; அமையு மெனின்;—இகர உகரங்களும் குற்றியலிகர குற்றியலுகரங்களும் ஒலி வடிவினும் வரிவடிவினும் பெரும்பாலும் ஒத்துநிற்றலானும், ணகர நகரங்களும் ஒலிவடிவின் அவ்வாறு நிற்றலானும் இவற்றை யும் அங்ஙனம் கூறல் வேண்டும். அற்றன்று; வையம், ஔவியம் எனினும் வய்யம், அவ்வியம் எனினும் பொருளொன்றாதலின் அமையும் எனின்;— அங்ஙனமே படம், பணம் என்பனவும் ஒன்றாதலின் இவை போல்வனவற்றையும் போலியெனல் வேண்டும். ஆதலின் அவர் கூற்றும் பொருந்தாமை காண்க.

அற்றேல், அகர உகரவகரங்கள்கூடி ஔகாரமாகுமேயன்றி அகரஉகரமென்னும் இவ்விரண்டுமாத்திரம் ஔகாரமாகா தெனின்; —"வகரம் பல்லிதழியையும்" (98) 'ஔவிதழ் குவிந்

தியலும்" (87) என ஆசிரியர் கூறியிருத்தலால் வகரம் பிறத்தற்குக் காரணமாகிய பல்லிதழியைதல், ஒளகாரம் பிறத்தற்குக் காரணமாகிய இதழ்குவிதலுடன் கலத்தலுளதாயின், ஒளகாரத்திலும் வகரங்கலத்தல் உளதாகும். காரணத்திலின்றேற் காரியத்தினுமின்றாதல் ஒருதலையாதலின், பல்லிதழியைதல் இதழ்குவிதலுடன் கலப்பதின்றேல் ஒளகாரத்தில் வகரங்கலந்ததும் இன்றாம். இங்ஙனம் ஆராயுமிடத்து இதழ்குவியுங்காற் பல்லிதழ் இயையுங்கால் இதழ்குவியாமையானும் இவ்விரு முயற்சியுங் கலத்தலின்றென்பது காட்சியளவையானே அறியக்கிடத்தலின் ஒளகாரத்தில் வகரக்கூறு கலந்ததெனல் பொருந்தாதென்பது.

இனிவகரக்கூறு கலந்ததென்றார்க் கேற்பப் பல்லிதழியைய உச்சரிக்குதுமெனின்; — அது அகரமும் வகரவொற்றுமாகிய ஈரெழுத்தாவதன்றி ஒளகாரமென்னும் ஓரெழுத்தாகாது; ஆகுமெனின்;—ஒள இதழ்குவிந்தியலும் என்பது நின்று பயனின்றாம். அற்றன்று; "அகரத்திம்பர் யகரப் புள்ளியும்" (56) என்னுஞ் சூத்திரத்துள் 'மெய்பெற' என்ற இலேசானே ஒள என்னும் நெட்டெழுத்தின் வடிவு புலப்படுத்தற்கு அகர உகரங்களேயன்றி அவற்றிடையே வகரமும் ஒத்திசைக்குமென்பது பெற வைத்தமையான் வகரத்தின் முயற்சி இடைக்கட் சிறிது தோன்றுமெனக் கொள்ளுதுமெனின்;—இஃது ஆசிரியர் கருத்தாயின் ஒளகாரத்துக்கு மட்டும் இதழ்குவிந்தியலுமென்பது கூறாது விடுத்து "அகர இகர மைகார மாகும்" (54) என்னுஞ் சூத்திரத்துள் ஒரிலேசு வைத்து அதனானே 'அகரவுகரமௌகார மாகும்' என்பதும் பெறவைத்தல் வேண்டும். அன்றேல் மேல் ஒளகாரம் அதிகாரப்பட்டமையான் "அகரத்திம்பர் வகரப் புள்ளியு, மௌவெனெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" (56) என அதற்கே விதி கூறி ஐகாரத்தையே இலேசாற் பெறவைத்தல் வேண்டும்; அன்றேல், இலேசாற பெறவையாது ஐகாரத்தைப் போலவே ஒளகாரத்தையும் விதந்து கூறுதல் வேண்டும்; அங்ஙன மன்றி, "அகர இகர மைகாரமாகும்" "அகர உகரம் ஒளகார மாகும்" "அகரத் திம்பர் யகரப்புள்ளியு, மையெனெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும்" எனக் கூறுதலான் அதுவும் பொருந்தாது. இன்னும் அவர், 'அகரத்திம்பர் யகரப் புள்ளியும்' என்பதற்கு அகர இகரங்களேயன்றி அவற்றிடையே யகரமுஞ்சேர்ந்து ஐகாரமாகும் என்றார். அது கருத்தாயின் யகரப் புள்ளியும் என எண்ணும்மையாதல் வேண்டும். அங்ஙனமாயின், 'அகர இகர மைகாரமாகும்' என்பதையடுத்து அதிகாரமாறாமல் அவையிரண்டுடனே யகரப் புள்ளியுமென்றிருத்தல் வேண்டும்; அங்ஙன மன்றி அதனையடுத்து "அகர உகர மௌகாரமாகும்" என

வேறொன்றதிகாரப்பட்டபின் "அகரத் திம்பர் யகரப்புள்ளியும்" எனக் கூறியிருத்தலால், அது அகரத்திம்பர் இகரஞ்சேர்ந்து ஐகாரமாதலேயன்றி யகரஞ்சேர்ந்தும் ஐகாரமாம் என இறந்ததுதழீஇய எச்சஉம்மையாவதன்றி எண்ணும்மையாவது யாங்ஙனம்? எண்டுக் கூறியவாற்றான், அகர இகர உகரமென்னும் மூன்றற்கும் அங்காப்பு முயற்சி பொதுவாதலின், அகர உகர மிரண்டுங்கூடியே ஒளகாரமாமென்பதும், அகர இகரமிரண்டுங் கூடியே ஐகாரமாமென்பதும், இவற்றுள் ஐகாரமாத்திரம் அகரயகரமிரண்டுங் கூடுதலானும் பிறக்கும்; அதில் அகரத்தின் முயற்சியாகிய அங்காத்தலுடன் யகரத்தின் முயற்சியாகிய இசைகண்ணுற்றடைதலுமொன்றுபடலான், அகரவோசை யொடு யகரவோசை கலக்குமியல்புடையதாக ஐ எனவேறோர் எழுத்தாயிற்றென்பதும், அங்ஙனமே அகரமுயற்சியாகிய அங்காத்தலும், வகரமுயற்சியாகிய பல்லிதழியைதலும் ஒன்று படாது தடையுறலின், அகரவோசையொடு வகரங்கூடின் அவை கலத்தலின்றி அகரமும் வகர மெய்யுமாகிய வீரெழுத்தாதலே யன்றி ஒள என்னும் ஒரெழுத்தாகாவென்பதும் ஆசிரியர் கருத்தாதல் விளங்குமென்பது.

அற்றன்று; வடவெழுத்துள் ஊகாரத்தின் பின்னின்ற நான் குயிர்க்கிடையே ரகரலகரக்கூறுகள் ஒத்துநிற்கும் எனக்கூறிய ஆசிரியர் பதஞ்சலியார்க்கு ஒளகாரத்திலும் வகரங்கலக்கும் என்பது உடன்பாடாதலின் அது ஆசிரியர் தொல்காப்பிய னார்க்கும் உடன்பாடேயெனின்:-வடவெழுத்துகள் ஊகாரத்தின் பின் நின்ற நான்குயிர்க்கும் ரகரலகரக்கூறுகள் விரவிநிற்றல் செவிகருவியாக உணரவல்லார்க் கெல்லாம் காட்சியளவையானே புலப்படுதலின். அங்ஙனங்கூறிய ஆசிரியர்பதஞ்சலியார்க்குத்தமி ழெழுத்துள் பல்லிதழியைதலாகிய காரணமின்மையான் அது கொண்டு காரியப்படும் வகரமுமின்றெனக் காட்சியளவையானே யுணரக்கிடக்கும் ஒளகாரத்திலும் வகரங்கலக்குமென்பது உடம் பாடாதல் யாங்ஙனம்? இதுவன்றி, உச்சரிக்கும் ஓசைவேற்றுமை யாற்பொதுவெழுத்துள்ளும் சிலவெழுத்துக்களுக்குச்சிறுபான்மை பிறப்புவேறுபடக்கூறும் வடநூலுடன்பாடு தமிழ் நூல் பெறல் வேண்டுமென்பதும் ஒருதலையன்று. அன்றியும், ஆசிரியர் தொல் காப்பியனார் ஆணைவழிநின்று தமிழாராய்வார்க்கு, அவர் அருந்தவக்கொள்கைப் பெருந்தகைய ராதலின் வினையினீங்கி விளங்கியவறிவினால் அவர் அருளியநூலே தமிழியல்புமுழுதும் விளக்கும் ஆற்றலுடைத்தாய் இடைச்சங்கநான் முதல் இன்றும் நிலைபெற்று விளங்குவது கண்கூடாதவும், வடநூலுணர்ந்தார்க் கன்றித் தமிழியல்பு விளங்காதென்பதும், இது கருதியே பாயிரத்

பிற—9

துள் ''ஐந்திரநிறைந்த தொல்காப்பியன்'' (பாயிரம்) எனக் கூறினாரென்பதும், வடநூலோடு மாறுகொளக் கூறாமையே தொல்காப்பியனார் கருத்தென்பதும் பொருந்தாது. வடநூல் உணர்ந்தால் தமிழ்மொழிக்கண்வந்து வழங்கும் அவ்வடசொற்களி யல்பும் சில இலக்கணங்கள் பலமொழிக்கும் பொதுவாகுமாதலின் அப்பொதுவியல்பும் விளங்கலன்றி ஒவ்வொரு மொழிக் கும் சிறப்பியல்பைப் பிறிதொரு மொழி விளக்கல் யாண்டு மின்மையான் தென்மொழியின் சிறப்பியல்பு வடமொழியான் விளங்குவதும் யாங்ஙனம்? தமிழ்மொழியேயன்றி வடமொழியும் வல்லுநர் என்பது விளக்கிய 'ஐந்திரநிறைந்த' என்னும் வாக்கியத் திற்குப்பிறிதொருகருத்து உரைப்பின், அங்ஙனமே பல்புகழ் நிறுத்த படிமையோர்க்கேதமிழியல்பு விளங்குமென்னுங் கருத் தான் ''பல்புகழ் நிறுத்தபடிமையோனே'' (பாயிரம்)எனக் கூறின ரெனவும் வேண்டும்; அது கூறாது விடுத்ததென்னை?

முதற்கண்ணே எழுத்து ஐம்பத்துமூன்று என்ற வட நூலொடு மாறுபட எழுத்து முப்பத்துமூன்று என்ற ஆசிரியர் தொல்காப்பியனார்க்குப் பொதுவியல்பான் ஒத்தவிடத்தன்றி, ஏனைச்சிறப்பியல்பு கூறுமிடத்தும் வடநூலொடு மாறுபடச் 'இந்திரன் எட்டாம் வேற்றுமையென்றனன்'' என ஆசிரியர் அகத்தியனார் கூறிய வண்ணம் ஆசிரியர் தொல்காப்பியனாரும் கூறாமை யங்ஙனம் கூடும்? பொதுவியல்பான் ஒத்த விடத்தும் ''வேற்றுமை தாமேயேழெனமொழிய (546) என ஆசிரியர் பாணியார், ஆசிரியர் பதஞ்சலியார் முதலாயினார் மதங்களை உடன்படாது'' ''விளியோடெட்டே'' (547) என இந்திரனுடன் பாடே கூறுகின்றாராதலின், ஆசிரியர் பதஞ்சலியார்க்கு உடன் பாடாயினவெல்லாம் ஆசிரியர் தொல்காப்பியனார்க்கும் உடன் பாடாவதுயாங்ஙனம்? ஈண்டுக் கூறியவாற்றான் அகர மிரண்டும் இடையீடின்றியியைந்து ஔகாரமாவதன்றி இடையில் வகரங் கலக்குமெனல் ஆசிரியர்பதஞ்சலியார்க்கும், ஆசிரியர் தொல்காப் பியனாருக்கும் உடன்பாடாதல் இன்றென்பது.

அற்றேல், அகரத்தின்பின் இகரமாவது யகரமாவதுகூடி ஐகாரமாம்; இது, ''அகரத்திம்பர்'' என ஆசிரியர் முன்னொரு சூத்திரங்கூறி, இம்பர், உம்பர் என்றாற்போல்வன காலவகை இடவகைகளான் மங்குமாதலின் இவற்றின் முதற்கணிற் பதியாதோ, இறுதிக்கணிற்பதியாதோ என்னும் அய்யநீக்குதற்கு மாட்டேற்றாக''இகர யகரமிறுதிவிரவும்''(58)எனப்பின்னுமொரு சூத்திரஞ் செய்தமையான் விளங்குமெனின்;—பின் முன் என் பனவே காலவகை இடவகையான் மயங்குமன்றிக் காலத்தைக் குறியாது இடத்தையே குறிக்கும் இம்பர், உம்பர் என்பனஅங்ஙன

மயங்காமையானும், 'ஐ' எனின் முதற்கணிற்பது அகரமென்பது சிறு மகாரும் அறியக்கிடத்தலின் அதன்கண் ஐயநிகழுமென்பதும் அதனை நீக்குதற்கு மாட்டேற்றாக இச்சூத்திரங்கூறினாரென்பதும் நகைதரற்பாலவாதலானும் அது பொருத்தாது. அற்றன்று, ஐயநீக்குதற்கே இது கூறினாரெனின்;—அகர இகர யகரம என்னுமூன்றனுள் இறுதிக்கணிற்பதியாது என்னும் ஐய நிகழுமெனக் கூறுதல் போலவே, இதர யகரமென்னுமிரண்டனுள்ளும் இறுதிக்கணிற்பதியாது என்னுமையமு நிகழுமெனக் கூறுதல் வேண்டும்; அங்ஙனங்கூறின், அதனை நீக்குதற்கும் 'இவற்றுளிகரமிறுதிவிரவும்' எனப் பின்னுமொரு சூத்திரம் இருத்தலவேண்டும். அங்ஙனமின்மை குன்றக்கூறலாமாதலானும் இதுவன்றி "நெட்டெழுத்திம்பருந் தொடர் மொழியீற்றும்"(36) என்னுஞ் சூததிரமும் "நெட்டெழுத்திம்ப ரொத்தகுற்றெழுத்தே" (41) என்பதும் "அகரத்திம்ப" ரென்னுஞ் சூத்திரத்துக்கு முன்னுளவாதலின் ஆண்டு ஐயநீக்காது ஈண்டு ஐயநக்கினாரெனல் அமையாமையானும் அதுவும் பொருந்தாமையின் அது பற்றி அவர் கூறிய ஏனையவும் பொருந்தாவென்பது.

அற்றேல், "இகரயகரமிறுதிவிரவும்" என்பதன் பொருள் பிறிதியாதோவெனின்; இடையியலில் "ஈற்றினின்றிசைக்குமேயெனிறுதி, கூற்றுவயினோரளபாகலுமுரித்தே" (771) என ஆசிரியர் கூறினமையான் ஈரளபுடைய ஏகாரம் ஓரளபகாலுமுரித்தாயினாற்போல், அகர இகரத்தாலாகிய இரண்டு மாத்திரையுடைய ஐகாரமும், அகரயகரத்தாலாகிய ஒன்றரைமாத்திரையுடைய அய்காரமும் மொழிகளின் கண் ஒரு மாத்திரையாதலுமுடைமையான் ஆசிரியர் அதனை அறிவித்தற்கு "அகரத்திம்பர்" என்னுஞ் சூத்திரத்தின்பின் 'ஓரளபாகுமிடனுமா ருண்டே, தேருக்காலை மொழிவயினான' (57) எனச் சூத்திரஞ்செய்து, அவ்வைகாரம் ஒரு மாத்திரை யாகுமிடத்து அகரத்துடனியைந்த இகரமாவது யகரமாவது முழுதுங்கெட்டு அகரமாத்திர நின்றதோவென மதிநுட்பம் வாய்ந்த மாணாக்கனும் ஐயுறுமெனக்கருதி, இவ்வைய மொழித்தற்பொருட்டுக், காராவின்பால் ஒருபடியும் சேதாவின்பால் ஒருபடியுமாக விரவியட்டபின் இருபடியும் ஒருபடியாகின், அதனை, ஓராவின்பால் சுவறமற்றோராலின்பால் மாத்திரமேயுளதெனக் கொள்ளாமைபோல; ஈரெழுத்தியைந்து ஒன்றுபட்டுப் பிறக்கும் ஐகாரமும் ஓரளபாகுமிடத்து ஓரெழுத்து முழுதுங்கெட மற்றோரெழுத்து மாத்திரம் நிற்குமெனக் கொள்ளாது, அகரத்துடன் இகரமாவது யகரமாவது விரவியே நிற்குமெனக் கொள்க என்பார் "ஓரளபாகும்"

என்னுஞ் சூத்திரத்தின்பின் "இகரயகர மிறுதிவிரவும்" (58) எனச் சூத்திரஞ் செய்தாரென்பது.

அற்றாயின் ஏகாரம் ஓரளபாகலுமுரித்து என்றல் உரையன்று; அது தனக்குரிய இரண்டு மாத்திரையுடன் ஒரு மாத்திரை அதிகமாதலுமுரித்து எனவும், உம்மையான் தனக்குரிய இரண்டு மாத்திரையாகவே நிற்றலுமுரித்தெனவும் நச்சினார்க்கினியர் கூறினமையான் எனின்;-"மூவளபிசைத்த லோரெழுத்தின்றே"(5) எனவும், "நீட்டம் வேண்டினவ்வள புடைய, கூட்டி யெழுஉத லென்மனார் புலவர்" (6) எனவும் ஆசிரியர் கூறினமையான் அவ்வேகாரந் தானே நின்று மூன்று மாத்திரை யொலிக்குமெனல் பொருந்தாது; எகரவுயிரொடு சேர்ந்து ஒலிக்குமெனின்; —அது அளபெடையாதலின் எல்லா ஏகாரங்களும் நீட்டம் வேண்டின் அளபெடுக்குமியல்பு பெற்றிருப்ப, ஈற்றினின்றிசைக்குமேயெனிறுதியை மாத்திரம் ஆண்டு விதந்து கூறுதல் நின்று பயலின்றாம். அன்றியும், ஓரளபகாலும் என்பது ஓரளபு அதிகமாகலும் எனப் பொருள் பயத்தலுமின்று. அற்றன்று; அங்ஙனம் பொருள் பயத்தலு முரித்தெனின்; கூற்றுவயின் மூவளபாகலுமுரித்தே எனக் கூறினும் சூத்திரம் அமைவதாயிருப்ப, யாண்டு மயங்கக்கூறாத ஆசிரியர் "ஓரளபாகலு முரித்தே" என மயங்கக்கூறார். இதுவன்றிச் சேனாவரையரும் யாங்கூறியவாறே உரை கூறினார்; ஆதலின், நச்சினார்க்கினியருரை ஆசிரியர் கருத்தன்றென்பது.

குறிப்பு : இக்கட்டுரை 'செந்தமிழ்' தொகுதி 1இல் பகுதி 1 முதல் 6வரை வெளிவந்ததாகும்; முற்றுப்பெறவில்லை. பகுதி 6. பக்கம் 2இல் ஆசிரியரால் 'இன்னும் வரும்'. என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இக்கட்டுரையினைத் தட்டச்சு செய்து அனுப்பியுதவிய மகா வித்துவான், ச. தண்டபாணிதேசிகர் அவர்கட்கு நன்றி.

பிறைக்கோடுகளில் உள்ள எண்கள் சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1967ல் வெளியிட்ட தொல்காப்பிய மூலத்தில் உள்ளவாறு குறிக்கப்பட்டன.

———

நிறுவன வெளியீடுகள்

1.	தமிழில் விடுகதைகள்	... ரூ.	12	00
2.	ஆராய்ச்சி நெறிமுறைகள்	... ரூ.	5	00
3.	Tamil Research through Journal	... Rs.	7	50
4.	Dr.Mu. Va.	... Rs.	20	00
5.	அடியார்க்கு நல்லார் உரைத்திறன்	... ரூ.	12	00
6.	Dissertations on Tamilology	... Rs.	10	00
7.	தமிழ் இலக்கியக் கொள்கை—III	... ரூ.	8	00
8.	தமிழ் இலக்கியக் கொள்கை—IV	... ரூ.	10	00
9.	தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு	... ரூ.	15	00
10.	சின்ன மகிபன் குளுவ நாடகம்	... ரூ.	5	00
11.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்-எவர்?	... ரூ.	6	00
12.	தமிழ் இலக்கியக் கொள்கை—V	... ரூ.	12	00
13.	தமிழ் இலக்கியக் கொள்கை—VI	... ரூ.	16	00
14.	Heritage of the Tamils—Language and Grammar	... Rs.	22	00
15.	தொல்காப்பியம் சிறப்புப்பாயிரம்	... ரூ.	10	00
16.	தொல்காப்பியம் நூன்மரபு	... ரூ.	9	00
17.	தொல்காப்பியம் மொழிமரபு	... ரூ.	9	00
18.	தொல்காப்பியம் மரபியல்	... ரூ.	10	50
19.	திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ்	... ரூ.	7	50
20.	பணவிடு தூது	... ரூ.	6	00
21.	தமிழர் நாட்டு விளையாட்டுகள்	... ரூ.	14	00
22.	தமிழர் ஆடைகள்	... ரூ.	16	00
23.	தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	... ரூ.	16	00
24.	தமிழர் கண்ட மனம்	... ரூ	9	00
25.	Epigraphical Evidences for Tamil Studies	Rs.	10	00
26.	கூவநூல்	... ரூ	7	00
27.	பிரபந்தத் திரட்டு	... ரூ.	16	00
28.	தமிழக நாட்டுப்புறக் கலைகள்	... ரூ.	10	00
29.	மனைநூல்	... ரூ.	15	00
30.	A Study of Perunkatai	... Rs.	12	00
31.	Papers on Tamil Studies	... Rs.	15	00
32.	Thiru Murugan	... Rs.	5	00
33.	தமிழர் உணவு	... ரூ	12	00
34.	தந்திவனபுராணம்	... ரூ	15	00
35.	The Tamil writers Dirctory	... Rs.	10	00
36.	Tamil Drama	... Rs.	20	00

தொடர்பு கொள்க:

இயக்குநர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அடையாறு, சென்னை-600 020